## இராகுல் காந்தி மக்களவை உறுப்பினர் பதவி இழப்பு

# எழுப்பும் வினாக்கள்

"ஒரு நாட்டின் அரசமைப்புச் சட்டம் எவ்வளவுதான் நல்லதாக இருந்த போதிலும் அதை நடைமுறைப்படுத்துவோர் தீயவர்களாக அமைந்துவிட்டால் அரசமைப்புச் சட்டமும் கேடானதாகிவிடும் என்பது உறுதி."-மேதை அம்பேத்கர் (25.11.1949 அன்று அரசமைப்புச் சட்ட யாப்பு அவையில் ஆற்றிய அரிய நிறைவுரையில் ஒரு சொற்றொடர்).

இராகுல் காந்திக்கு அளித்துள்ள தண்டனையும் தகுதி இழப்பும் எந்தவகையில் சரி-சரியில்லை என்பது இப்போது இந்தியா முழுவதும் உள்ள சனநாயக ஆர்வலர்களால் விவாதிக்கப்பட்டு வருகிறது. அதுபற்றிய ஒரு சுருக்கமான பார்வையை இங்குக் காண்போம்.

கருநாடக மாநிலம், கோலார் என்ற இடத்தில் 13.4.2019 அன்று, தேர்தல் பரப்புரைப் பொதுக் கூட்டத்தில் இராகுல்காந்தி உரையாற்றுகையில், "எல்லாத் திருடர்களின் பெயர்களும் மோடி... மோடி... மோடி... என்று இருக்கின்றதே? அது எப்படி? நீரவ் மோடி, லலித்மோடி, நரேந்திர மோடி" எனப் பேசிவிட்டார் என்று குசராத்து மாநிலத்தைச் சேர்ந்த பா.ச.க. தலைவரான புர்னேஷ் மோடி என்பவர், அவருடைய பெயரில் அவரது குடும்பப் பெயரான 'மோடி' இருப்பதால், மோடி என்ற குடும்பப் பெயருள்ள அனைவரையும்-13 கோடி பேரையும் இராகுல் காந்தி அவமதித்துவிட்டதாக 2019இல் சூரத் நகரில் உள்ள தலைமை குற்றவியல் நடுவர் நீதிமன்றத்தில் 'குற்றவியல் அவமதிப்பு' வழக்குத் தொடுத்தார்.

இந்த வழக்கை விசாரணை செய்த சூரத் தலைமை குற்றவியல் நடுவர் 23.3.2023 அன்று கேரள மாநிலம், வயநாடு தொகுதியில் இருந்து தேர்ந்தெடுக்கப்பட்ட மக்களவை உறுப்பினரான இராகுல் காந்தி குற்றவாளி என 2 ஆண்டுகள் சிறைத் தண்டனை அளித்து தீர்ப்பளித்துள்ளார்.

இந்தத் தீர்ப்பினைக் கொண்டு 1951ஆம் ஆண்டு மக்கள் பிரதிநிதித்துவச் சட்டம் பிரிவு 8(3)இன்படி இராகுல் காந்தி மக்களவை உறுப்பினர் பதவி இழப்புடன் சிறைத் தண்டனைக்குப் பின் 6 ஆண்டுகள் தேர்தலில் போட்டியிடும் தகுதியும் இழந்தவராவார்.

சூரத் தலைமை குற்றவியல் நடுவர் எச்.எச்.வர்மா 23.3.2023 அன்று தீர்ப்பளித்த மறுநாள், 24.3.2023 அன்றே நாடாளுமன்ற மக்கள் அவைத் தலைமைச் செயலாளர் இராகுல் காந்தி மக்களவை உறுப்பினர் என்ற தகுதியை இழந்ததாக அறிவித்துவிட்டார்.

இந்தத் தீர்ப்பு மற்றும் அதனையொட்டிய நடவடிக்கைகள் பல வினாக்களை எழுப்பியுள்ளன. தகுதி இழப்பை அறிவிக்கும் அதிகாரம் மக்களவைத் தலைமைச் செயலாளருக்கு உள்ளதா?

எந்தக் காரணத்தினால் மக்களவை உறுப்பினர் தகுதி இழப்புக்கு உள்ளாவதாயினும் அதனை அறிவிக்க மக்களவைத் தலைமைச் செயலாளருக்கு எந்த ஒரு சட்டத்திலும் அதிகாரம் அளிக்கப்பட்டிருக்கவில்லை. அரசமைப்புச் சட்டத்தின் உறுப்பு 103இன்படி மக்களவை உறுப்பினர் தகுதி இழப்பை அறிவிக்கும் உரிமை குடியரசுத் தலைவருக்கு மட்டுமே உள்ளது. நுகர்வோர் கல்வி மற்றும் ஆராய்ச்சிச் சங்கம் எதிர் ஒன்றிய அரசு (2009) வழக்கில்




"தோழர் **வே.ஆனைமுத்து** வழியில்"

சுவடி : 1 ஏடு : 6

மார்ச்சு-ஏப்பிரல் 2023

ஆசிரியர்

வாலாசா வல்லவன்

ஆசிரியர் குழு

க. முகிலன்

சா. குப்பன்

தி. துரை சித்தார்த்தன்

முனைவர் முத்தமிழ்

சி. நடராசன்

ந. கருணாகரன்

இரா. திருநாவுக்கரசு

இதழ் வடிவமைப்பு :

சன் நகலகம்

சென்னை - 600 005.

பேசி : 98400 15179

அனைத்துத் தொடர்புகளுக்கும்

ஆசிரியர் **'புதிய சிந்தனையாளன்'**

2/12, சி.என்.கே.சந்து,

சேப்பாக்கம், சென்னை - 600 005.

தொடர்புக்கு :

**86681 09047, 98947 28032**

**94885 34225**

மின்னஞ்சல் :

sinthanaiyalantamilmonthly@gmail.com

*

இணையத்தில் படிக்க

www.keetru.com

உச்சநீதிமன்றம் அளித்த தீர்ப்பில் இதனை உறுதி செய்துள்ளது. (27.03.2013, தி இந்து ஆங்கில நாளேட்டில் மக்களவை முன்னாள் தலைமைச் செயலாளர் பி.டி.டி. ஆச்சாரியின் கட்டுரை).

சூரத் தலைமைக் குற்றவியல் நடுவர் தீர்ப்புரைத்த 24 மணிநேரத்திற்குள் மக்களவைத் தலைமைச் செயலாளர், இராகுல் காந்தி மக்களவை உறுப்பினர் தகுதியை இழந்துவிட்டதாக அறிவித்துவிட்டார்.

நீதிமன்றத்தின் சான்றிட்டத் தீர்ப்பாணை மக்களவை தலைமைச் செயலாளருக்குக் கிடைத்திருக்குமா என்பதே ஐயமாக உள்ளது. குடியரசுத் தலைவருக்குள்ள அதிகாரத்தை மக்களவைத் தலைமைச் செயலாளர் கையகப்படுத்திக் கொண்டது எப்படி? ஏன் இந்த மிகு விரைவுச் செயல்? என்ற வினாக்கள் எழுகின்றன அல்லவா?

அரசியல் கட்சித் தலைவர்கள் தேர்தல் பரப்புரைப் பொதுக் கூட்டங்களில் எதையும் மிகைப்படுத்திப் பேசுதல் நடைமுறையில் உள்ளது தானே? இதற்காக ஒரு தலைவரைத் தண்டிப்பதே நகைப்புக்கு உரியது! அதிலும் மிக அதிக அளவான 2 ஆண்டுகள் சிறைத் தண்டனை அளிக்கப்படுகிறது என்றால் அது மேலும் நகைப்புக்கு உரியதல்லவா?

இந்த ‘குற்றவியல் அவமதிப்புச் சட்டம்’ தொடரத் தான் வேண்டுமா? என்பதே ஒரு வினா. வட அமெரிக்கா (U.S.A.), பிரிட்டன் (U.K.), இலங்கை போன்ற நாடுகளில் இச்சட்டம் கைவிடப்பட்டுவிட்டன.

இந்த வழக்கு விசாரணைப் போக்கில் எழும் சில வினாக்கள் :

1. 2019-இல் தொடரப்பட்ட வழக்கை வழக்குத் தொடுத்த சூரத் மேற்குத் தொகுதி பா.ச.க. சட்டமன்ற உறுப்பினர் புர்னேஷ் மோடியே விசாரணையை ஓராண்டு நிறுத்தக்கோரி நிறுத்தப்பட்டதும் அந்த நீதிமன்ற நீதிபதியாக இருந்தவர் போய் வேறொருவர் வந்ததும் 4 ஆண்டுகளாக தூங்கிய வழக்கு திடீரென மிக வேகமாக ஒரே மாதத்தில் விசாரணை நடத்தித் தீர்ப்பளித்துள்ளமை அசாதாரணமானது எனவும் வியப்பளிப்பதாகவும் சட்ட வல்லுநர்கள் கருதக் காரணம் என்ன? இந்தத் தீர்ப்பு சட்டத்தின் முன் நிற்காது என்பது வெளிப்படை என்று கருதப்படுவது எதனால்?
2. மோடி என்பது ஒரு குறிப்பிட்ட சாதி என்பதற்கு சரியான சான்றுகள் இல்லை என்று கூறப்படு வதுடன் மோடி என்போர் எல்லாம் திருடர்கள் என்றும் இராகுல் காந்தி கூறவில்லை. வழக்குரை ஞர்கள் எல்லாம் திருடர்கள் என்று ஒருவர் கூறினால், அதற்காக ஒரு வழக்குரைஞர் அவமதிப்பு வழக்குத் தொடர முடியுமா? என்றும் வினவப்படுகிறது.
3. ஓர் அரசியல்வாதி தேர்தல் நேரத்தில் வாக்கு கேட்பதற்காக பேசிய பேச்சுக்கு மிக அதிக அளவான சிறைத் தண்டனைக் காலம் பொருத்தமானதா என்றும் அரிதினும் அரிதான வழக்குகளில் மட்டுமே உச்ச அளவான தண்டனை வழங்கப்படுவதே வழமை என்றும் கூறப்படுகிறதே? இந்தத் தீர்ப்பு இயல்புக்கு மாறானது என்றும் கூறப்படுகிறதே?
4. மக்கள் பிரதிநிதித்துவச் சட்டப்படி மக்களவை உறுப்பினர் பதவி இழப்பை அறிவிக்கும் குடியரசுத் தலைவரின் அதிகாரத்தை மக்களவைத் தலைமைச் செயலாளர் பயன்படுத்தியது ஏன்? என்ற வினாவும் எழுப்பப்படுகிறது.

நீதிபதிகளும் மனிதர்கள்தான்; தவறு செய்வது இயல்பே என இந்த வழக்கிலும் கூறினால் அது ஏற்புடையதா?

நீதித் துறையில் குமாரசாமிகள் எண்ணிக்கைப் பெருகுவதும் ஆளுக்கு ஏற்ப தீர்ப்பும் என்றால் நாடு என்னாவது?

அதானி குழுமம் செய்துவந்துள்ள பங்குச் சந்தை மோசடிகள் பற்றி அமெரிக்காவின் இன்டன்பர்க் அறிக்கை வெடித்துக் கிளப்பிய அதிர்ச்சித் தகவல்கள் அடிப்படையில் அதானிக்கும் நரேந்திர மோடிக்கும் உள்ள உறவுப் பற்றி இராகுல் காந்தி தொடர்ந்து வினா எழுப்பி வலியுறுத்துவதால் அவரது குரலை ஒடுக்கும் பழிவாங்கல் செயலே இந்தப் பதவி இழப்பு என்ற கருத்தும் நிலவுகிறது.

மட்டமான கண்ணோட்டமுள்ள அரசியல்வாதிகள் தங்கள் அரசியல் எதிரியை வீழ்த்த சட்டத்தை ஓர் ஆயுதமாகப் பயன்படுத்தும் உத்தி தடுக்கப்பட வேண்டாமா?

ஒரு சாய்வான வஞ்சக-வல்லதிகார நடைமுறை வழமை ஆக்கப்படுவது ஏற்கத்தக்கதா? என்ற வினாக் களுக்கு எல்லாம் விடை, பாசிசத்தின் கொடுவடிவத்தில் இதுவும் ஒன்று என்பதே! பாசிச பா.ச.க. அதிகாரத்தில் இருந்து அகற்றப்படுவதே ஓரளவு மக்கள் நாயகத்தை மீட்கும் வழியாகும்.

18.04.2023 **- வாலாசா வல்லவன்**

தோழர் **வே.ஆனைமுத்து** மறைந்து 6.04.2023 அன்றுடன் இரண்டு ஆண்டுகள் ஓடி விட்டன. தோழரின் வழியில் அவரது கொள்கைப் பயணத்தைத் தொடர அவரது கருத்துக் கருவூலத்தைக் கற்று உந்தாற்றல் பெறுவோம்.



**- ஆசிரியர் குழு**

# கேரளத்தில் ஏழு நாட்கள்!

## வைக்கம் வீரரின் கம்பீர உரைகளை, வைக்கம் வாழுநர் கூறிடக் கேட்டேன்!

### வே. ஆனைமுத்து

இந்தியப் பிற்படுத்தப்பட்ட மக்களிடையே ஓர் புதிய எழுச்சியை உண்டாக்கி, அவர்கட்கு எல்லாத் துறை உத்தியோகங்களிலும் விகிதாசாரப் பங்கு பெற்றுத்தரத் தன்னாலானதைச் செய்ய வேண்டும் என்பது பெரியார் சம உரிமை கழகத்தின் ஓர் முக்கிய பணி.

இதற்கு உறுதுணையாக நிற்க, எதிர்பாராதவித மாக, பீகார் மாநிலத் தோழர் இராம் அவதேஷ் சிங் முன் வந்தார்.

இந்தப் பணியைச் சரியான நேரத்தில் சரியான தன்மையில் செய்ய விரும்பிய பீகார் பிற்படுத்தப் பட்டோர் சம்மேளனத் தலைவர் தோழர் இராம் அவதேஷ் சிங், M.P. பெரியார் நூற்றாண்டு விழா வினை பீகார் மாநிலம் முழுவதிலும் 30 நாட்கள் கொண்டாட ஏற்பாடு செய்தார். இந்தப் பணியின் ஏககர்த்தாவாகப் பெரியார் அவர்களை வரித்துக் கொண்ட அவர் என்னையும், தோழர்கள் மா. முத்துசாமி, து.மா.பெரியசாமி, நா.ப.செந்தமிழ்க்கோ ஆகியோரையும் பீகாருக்கு அழைத்து நன்கு பயன்படுத்தினார்.

நாங்கள் அங்குச் சென்றிருந்ததை அறிந்த கேரளத்து நண்பர்கள் எங்கட்கு ஊக்கம் தந்து 21.9.78-இல் பாட்னாவுக்கு எழுதிய மடல் 13.10.78-இல் அங்கு எனக்குக் கிடைத்தது.

“பிற்படுத்தப்பட்டோருக்கு ஜனத்தொகை விகிதாசாரப் பங்கு மத்திய அரசு உத்தியோகங்களிலும் வேண்டும்” என்பதற்கு ஆவன செய்யும்படி அக்கடிதத்தில், கேரள எஸ்.என்.டி.பி. யோகத்தின் செயலாளர் பேராசிரியர் P.S. வேலாயுதம் எழுதியிருந்தார்.

எஸ்.என்.டி.பி. யோகம் என்பது கேரள சீர்திருத்தச் செம்மல் ஸ்ரீ நாராயணகுரு என்பவரால் நிறுவப்பட்ட ஒன்றாகும். ஈழவர்கள் மற்றும் தீண்டப்படாத மக்களின் சமுதாய-கல்வி-உத்தியோகத்துறை முன்னேற்றத்தை இலட்சியங்களாகக் கொண்ட இந்த நிறுவனமே “ஸ்ரீ நாராயணகுரு தர்ம பரிபாலன யோகம்” (S.N.D.P.) எனப்படும். 1903-இல் இந்த நிறுவனம் அமைக்கப்பட்டது. 1978-இல் அதன் 75ஆம் ஆண்டு நிறைவு விழா 1978 டிசம்பர் 1 முதல் 31 முடிய கொண்டாடப்பட்டது.

இதனை ஒட்டி, “அனைத்திந்தியப் பிற்படுத்தப் பட்டோர், தாழ்த்தப்பட்டோர், பழங்குடியினர் மாநாடு-கருத்தரங்கு” நிகழ்ச்சிகள் 17.12.1978-இல் கொல்லத்தில் நடைபெற இருப்பதை முன்னரே எனக்கு அறிவித் திருந்தனர்.

அன்றைய கருத்தரங்கில், அனைத்திந்தியப் பேரவையின் காப்புத்தலைவன் என்கிற முறையில், நான் பங்குகொள்ள வேண்டுமென 6.11.1978-இல் எனக்கு திரு. வேலாயுதம் மடல் எழுதினார்.

17.12.1978இல் கொல்லத்துக்கு நான் வருவதை அறிந்த திருவனந்தபுரம் தோழர் எம். பிரபா அவர்கள் 19.12.1975இல் திருவனந்தபுரத்தில் பகுத்தறிவாளர் கழகக் கூட்டம் ஏற்பாடு செய்து, 20.11.1978-இல் எனக்கு மடல் எழுதினார்.

இந்த இரண்டு நிகழ்ச்சிகளை முன்னிட்டுக் கேரள மாநிலத்துக்குப் பயணமான நான் வைக்கம் வீரர் தந்தை பெரியார் அவர்களின் அரும்பணி பற்றியும் அறிய விரும்பினேன்.

16.12.1978 காலை 5 மணிக்குக் கொல்லம் சேர்ந்தேன்.

கொல்லத்தில் எஸ்.என்.டி.பி. யோகத்தினர் அமைத்துள்ள மிகப்பெரிய கண்காட்சியையும், அக்கண்காட்சியில் உள்ள அறிவியல் காட்சிப் பகுதியையும், தமிழக அரசு அங்கு வைத்துள்ள பெரியார் நூற்றாண்டு விழாக் காட்சிப் பகுதியையும் 16.12.1978 மாலையில் கண்டு களித்தேன்.

டில்லி சுப்ரீம் கோர்ட் நீதிபதி திரு.வி.ஆர். கிருஷ்ணய்யரும் மற்றும் இரு பேராசிரியர்களும் பிளாட்டினம் விழா ஆடிட்டோரியத்தில் அன்று மாலை நிகழ்த்திய பேருரை களைக் கேட்கும் வாய்ப்பும் கிடைத்தது.

இந்த விழாவினை ஒட்டிக் கேரளத்துப் பள்ளிகளிலும், கல்லூரிகளிலும் நடைபெற்ற போட்டிகளில் வெற்றி பெற்ற மாணவ-மாணவியர் அன்று இரவு 9.30 முதல் 1 மணிவரை நிகழ்த்திய பரத நாட்டியம், நாடகம் இவற்றைக் கண்ணுற்றேன்.

பரத நாட்டியத்துக்கான பாடல்கள் அனைத்தும் தூய தமிழ்ப் பாடல்களாக இருந்தது கண்டு தமிழகத்தின் ஒரு பகுதியில் இருப்பது போன்ற உணர்வு கொண்டேன். இரவு நல்ல ஓய்வு.

17.12.1978 காலை 10 மணிக்கு அனைத்திந்திய மாநாடு.


THE THINKER 6—1—79

# கேரளத்தில் ஏழு நாட்கள்!

## வைக்கம் வீரரின் கம்பீர உரைகளை, வைக்கம் வாழுநர் கூறிடக் கேட்டேன்!

வே. ஆனைமுத்து

மாநாட்டைத் துவக்கி வைக்க இருந்த மத்திய அமைச்சர் திரு.ஜெகஜீவன்ராம் வருகைதர இயலாத தால், பெங்களூர் பேராசிரியர் ஏ.எம். தர்மலிங்கம் காலை 11 மணிமுதல் ஒரு மணி நேரம் சிறந்ததோர் உரையாற்றி மாநாட்டைத் துவக்கி வைத்தார். அன்னாரின் நெடிய திண்ணிய ஆங்கிலப் பேச்சு கருத்தாழம் மிக்கதாகத் திகழ்ந்தது.

மாநாட்டுக்குக் கர்நாடக மாநில வருவாய்த் துறை அமைச்சர் திரு. B. பசவலிங்கப்பா அவர்கள் தலைமை ஏற்று அரியதோர் உரையாற்றினார்.

தொடர்ந்து, பிற்படுத்தப்பட்டோர் சமுதாயமான கேரள மீனவர் வகுப்புத் தலைவர் திரு. பி.கே. தீவர் (Deevar); அகில கேரள மருத்துவர் சங்கத் தலைவர் டாக்டர் பி. சுப்பிரமணியம், M.B.B.S. ஆகியோர் சிறப்புரையாற்றினர்.

பகல் 1.15-க்கு முற்பகல் மாநாட்டு நிகழ்ச்சி முடிவுற்றது.

மாநாட்டில் பங்குகொள்ள விரும்பியும் என்னைச் சந்திக்க வேண்டியும் திருச்சி உறையூர் தோழர் ஜி. முத்துகிருஷ்ணனின் மூத்த மகன் நரசிம்மன் கோட்ட யத்திலிருந்து மாநாட்டுக்கு வந்திருந்தார். அனைவரும் உணவை முடித்துக்கொண்டு, கேரளத்தில் உள்ள பிற்படுத்தப்பட்டோர், தாழ்த்தப்பட்டோர் பிரச்சனைகள் பற்றிச் சிறிது நேரம் உரையாடினோம்.

பிற்பகல் 4 மணிக்கு மாநாட்டுத் தொடர்பான கருத்தரங்கு துவங்கியது.

கேரள மாநில முன்னாள் அமைச்சர் திரு.வைக்கம் புருஷோத்தமன் கருத்தரங்கைத் துவக்கி வைத்து உரையாற்றினார்.

கருத்தரங்கின் தலைவரும் எஸ்.என்.டி.பி. யோகத்தின் தலைவருமான திரு. என். சீனிவாசன், B.A., B.L., தலைமை உரைக்குப் பின்னர், பிற்படுத்தப்பட்டோர் - தாழ்த்தப்பட்டோர் பிரச்சினைகளைப் பற்றி நான் நீண்டதோர் உரையாற்றினேன்.

துவக்கத்தில் அய்ந்து நிமிடம் ஆங்கிலத்தில் பேசினேன். தந்தை பெரியாரை நன்கு அறிந்திருந்த தோழர் பி. கங்காதரன், "தமிழில் உரையாற்றினால் புரிந்துகொள்ளுவோம்" எனக் கூறினார்.

கருத்தரங்கில் கூடியிருந்தவர்களை நோக்கி "நான் தமிழில் உரையாற்ற அனுமதி தருகிறீர்களா?" எனக் கேட்டேன். அனைவரும் கையொலி எழுப்பித் "தமிழில் பேசுங்கள்" எனக் கூறினர். பழைய தமிழகத்தின் ஓர் அங்கமாக இருந்த கேரளத்தில், முதல் நாள் இரவு தமிழ்ப் பாடல்களைக் கேட்டு, மறுநாள் தமிழிலேயே நான் உரையாற்றக் கிடைத்த வாய்ப்பை நன்கு பயன்படுத்திக் கொண்டு,

1. பிற்படுத்தப்பட்டோருக்கு மத்திய அரசு உத்தியோ கங்களில் ஒதுக்கீடு வேண்டும்.
2. பிற்படுத்தப்பட்டோருக்கு மத்திய-மாநில அரசு உத்தியோகங்களில் ஜனத்தொகை விகிதாசாரம் வேண்டும்.
3. கலேல்கர் கமிஷன் அறிக்கையை அமுல்படுத்த வேண்டும்.
4. தாழ்த்தப்பட்டோருக்கும், பழங்குடியினருக்கும் உள்ள சலுகைகளை 1980-க்குப் பிறகும் நீடிப்ப துடன்-இன்றுவரை இவர்களுக்கான ஒதுக்கீட்டைச் சரிவர அமுல்படுத்தாத வடஇந்திய மாநிலங்கள் இந்த ஒதுக்கீட்டைச் சரிவர அமுல்படுத்த ஆவன செய்ய வேண்டும் என்கிற கருத்துக்களை மய்ய மாகக் கொண்டு நான் உரையாற்றினேன்.

நான் உரையாற்றிக் கொண்டிருக்கும் போது, சோவியத்து நாட்டினின்று இந்தியாவுக்கு வருகை தந்துள்ள சுப்ரீம் சோவியத் பிரிசீடியத்தின் உறுப்பினர் திரு. E.K. ஃபெடரோவ் அவர்களும் மற்றும் இருவரும் கருத்தரங்கு மன்றத்துக்கு வருகை தந்தனர்.

என் உரை முடிந்த பின்னர் சோவியத்துத் தலை வருக்கும், அவருடன் வருகை தந்தோருக்கும் எஸ்.என்.டி.பி.

யோகம் சார்பில் கருத்தரங்கு மேடையிலேயே வரவேற்பளித்தனர். வரவேற்புக்கு நன்றி தெரிவித்து திரு. ஃபெடரோவ் உரையாற்றினார்.

தொடர்ந்து தோழர்கள் கே.பாஸ்கரன், எர்ணாகுளம் பி. கங்காதரன், Ex. M.L.A. ஆகியோர் உரையாற்றினர்.

தமிழில் நான் உரையாற்றியதைக் கேரளத்தார் அனைவரும் பெரிதும் புரிந்துகொண்டனர். மலையாள மொழியில் ஆற்றப்பட்ட உரைகளில் 100க்கு 75 பங்கு எனக்குப் புரிந்தது. நமக்குச் சம்பந்தப்பட்ட செய்தி பற்றிய (Subject) பேச்சு உரையாடல்கள் இவை மலையாளத்தில் அமைந்திருந்தாலும் பெரிதும் நம் தமிழ் மக்கள் புரிந்து கொள்ளலாம் என்பதை நான் அங்குக் கண்டேன்.

18.12.1978 முற்பகல் முழுவதும் விவாதத்தில் கழிந்தது.

அனைத்திந்திய பிற்படுத்தப்பட்டோர், தாழ்த்தப்பட்டோர், பழங்குடியினர் பேரவையின் செயலாளர்கள் என்கிற பொறுப்பை வகிக்கும் நிலையில் பெங்களூர் பேராசிரியர் ஏ.எம். தர்மலிங்கம் அவர்களும், லக்னோ வழக்கறிஞர் செடிலால் சாத்தி அவர்களும் தயாரித்துத் தந்துள்ள பேரவையின் கொள்கை, சட்டதிட்ட விதிகளின் நகல்களை வைத்து விவாதிப்பதைப் பேராசிரியர் ஏ.எம். தர்மலிங்கம், கொல்லம் என். சீநிவாசன், கொல்லம் பி.எஸ்.வேலாயுதம் ஆகியோருடன் நான் மேற்கொண்டேன்.

தொடர்ந்து பல மாநிலங்களைச் சார்ந்த செயற்குழு உறுப்பினர்களுடனும் கலந்து பேசிய பின்னர் பேரவையின் சட்டதிட்ட விதிகளுக்கு இறுதி வடிவம் தர எண்ணங் கொண்டோம்.

அன்று பகல் 12 மணி அளவில் பேராசிரியர் ஏ.எம்.தர்மலிங்கம் அவர்கள் தம் துணைவியார் அவர்களுடன் பெங்களூருக்குப் பயணமானார்.

பகல் ஓய்வுக்குப் பின்னர் மாலை 5 மணி அளவில் பிளாட்டினம் விழா அரங்கில் நடைபெற்ற வரலாற்று ஆய்வுச் சொற்பொழிவுகளைக் கேட்டுப் பயன்பெற்றேன். அனைவரும் மலையாளத்திலேயே உரை நிகழ்த்தினர்.

நிகழ்ச்சித் தலைவர் பேராசிரியர் டி.கே. ரவீந்திரன் அவர்களைக் கண்டு அவர் எழுதியுள்ள ‘‘வைக்கம் சத்தியாக்கிரகமும், காந்தியும்’’ (Vaikam Sathyagraha and Gandhi) என்கிற நூல் பற்றியும்; தந்தை பெரியார் அவர்கள் அந்த சத்தியாகிரகத்தில் வகித்த பங்கு பற்றியும் உரையாடினேன்.

அவர் அளித்த விவரங்கள் ‘‘வைக்கம் சென்றுவர வேண்டும்’’ என்ற பேராவலை மேலும் அதிகப்படுத்தின.

19.12.1978 காலை 8.15 மணிக்குப் புறப்பட்டு, 10.10க்கு திருவனந்தபுரம் அடைந்தேன்.

தோழர் எம்.பிரபா அவர்களைத் தேடித் தலைமைச் செயலகம் சென்றேன்.

அவர் அலுவலகம் வேறு இடத்தில் இருந்தது. சுமார் 12 மணி அளவில் அவர் இருக்குமிடம் சேர்ந்தேன்.

நான் அங்கிருந்த சமயம் தோழர் உறையூர் ஜி. முத்துகிருஷ்ணன் அவர்கள் எனக்கு விடுத்த பண விடையும், மடலும் கிடைத்தன. நான் வைக்கம் சென்றுவர வேண்டும் என்பது அவருடைய பேரவா.

தோழர் எம். பிரபா அவர்களுடன் தமிழகம், கேரளம், ஆந்திரம் இங்கெல்லாம் உள்ள நாத்திக இயக்கங்களைப் பற்றி மாலை 5.30 வரையில் கலந்து உரையாடினேன்.

வைக்கம் சத்தியாக்கிரகம் பற்றி நான் யாரையெல்லாம் கண்டு பேசலாம் என்பதைத் தெளிவுபட அவர் எனக்கு எடுத்துரைத்தார்.

மாலை 6 மணிக்குப் பகுத்தறிவாளர் கழகக் கூட்டம். இதற்கிடையில், ‘‘இந்திரா காந்திக்குத் தண்டனை’’ என்கிற செய்தி பரவி, திருவனந்தபுரத்தில் கல்லெறி, கலவரம் துவங்கிவிட்டது. பஸ்கள் நின்றுவிட்டன. நானும், தோழர் எம். பிரபா, தோழர் ஏ.கே. ஹமீது ஆகியோர் திருவனந்தபுரம் பல்கலைக்கழக மாணவர் மன்றத்தை (University Students' Centre) அடைந்த போது பகுத்தறிவாளர் கழகத் தோழர்கள் சிலர் மட்டுமே அங்குக் கூடியிருந்தனர்.

மாலை 6.45 மணிக்கு, தோழர் எம்.பிரபா தலைமையில் கூட்டம் துவங்கியது.

பெரியாரின் தொண்டு பற்றித் தமிழிலேயே உரையாற்றலாம் எனத் துவக்கத்திலேயே தோழர்கள் கூறினர். எனக்கு மட்டற்ற மகிழ்ச்சி.

இரவு 7 மணிமுதல் 8.30 மணிவரை தந்தை பெரியாரின் தொண்டு பற்றி விளக்கிக் கூறினேன்.

திருவனந்தபுரம் பகுத்தறிவாளர் கழகம், தி.க., தி.மு.க., பிற கட்சிகள், அரசு அலுவலர்கள், மாணவர்கள், பொதுவான நாத்திகர்கள் இவர்களைக் கொண்டு இயங்குகிறது. தோழர்கள் எம். பிரபா, ஏ.கே. ஹமீது, சி.பி. செல்வம், கே. சுப்ரமணியம், என். நயினார் மற்றும் பலரும் ஊக்கமுடன் இங்குப் பணியாற்றுகின்றனர். விரைவில் மிகப்பெரிய அளவில் பெரியார் நூற்றாண்டு விழாவை அங்கு நடத்தத் திட்டமிட்டுள்ளனர்.

இரவு தோழர் கே.சுப்ரமணியம் இல்லத்தில் தங்கிவிட்டு, 20.12.1978 காலை, பேராசிரியர் இரவீந்திரன் அவர்களையும், எம்.பிரபா, மற்றுமுள்ள தோழர்களையும் பார்த்துப் பேசிய பின், பிற்பகல் 2.30 மணிக்குக் கோட்டயம் நோக்கிப் பயணமானேன்; 161 கிலோ மீட்டர் பயணத்துக்கு 5 மணி நேரம் ஆயிற்று.

என் வருகையை எதிர்நோக்கி திரு.எம். நரசிம்மன் கோட்டயம் நிலையத்தில் காத்திருந்தார். அவர் அங்கு இரயில்வேயில் பணிபுரிகிறார். 1970 முதல் திருச்சி சிந்தனையாளர் கழகப் பணிகளில் ஊக்கமுடன் ஈடுபட்ட ஆர்வமும், அமைதியும் மிக்க இளைஞர் அவர்.

இரவு அவருடைய இல்லத்தில் நாங்களும், ஆறுமுகநேரி தோழர் பி. சுப்பிரமணியமும் சந்தித்து, மறுநாள் காலை வைக்கம் செல்லத் திட்டமிட்டோம்.

1.12.1978 காலை 7.05-க்கு வைக்கம் ரோடு நோக்கி நாங்கள் மூவரும் இரயிலில் பயணமானோம். இது 25 கிலோ மீட்டர் பயணம். 7.45-க்கு வைக்கம் ரோடு அடைந்து, அங்கிருந்து பஸ் மூலம், 11 கிலோ மீட்டர் சென்று வைக்கம் சேர்ந்தோம்.

கோயிலைச் சுற்றிப் பார்த்த பின்னர், வைக்கம் நகராட்சி மேனேஜர் பால் காநாடன், நகராட்சித் துணைத் தலைவர் என். ராஜப்பன் நாயர் மற்றும் கே.எஸ். சுரேந்திரநாதன் நாயர், ஜான் தாமஸ், ஆசிரியர் கே. வாசுதேவன் ஆகியோருடன் கலந்துரையாடிப் பல விவரங்களைத் தெரிந்து கொண்டோம்.

கேரளத்துத் தலைவர்கள் டி.கே. மாதவன், கே.பி. கேசவ மேனன், ஜார்ஜ் ஜோசப், ஏ.கே. பிள்ளை, கே. வேலாயுத மேனன், கே. கேளப்பன் நாயர், டி.ஆர். கிருஷ்ணசாமி அய்யர் ஆகியோர் 30.3.1924-இல் தொடங்கிய சத்தியாகிரகம் தோல்வி காணும் நிலையில் இருந்த போது, தந்தை பெரியார் அவர்கட்கு அவர்கள் வேண்டுகோள் விடுத்தனர்.

அந்த வேண்டுகோளைப் பெற்ற அடுத்த கணமே புறப்பட்டு, 12.4.1924இல் பெரியார் வைக்கம் சேர்ந்தார்.

தந்தை பெரியார் உலவிய-கர்ஜித்த-சங்கநாதம் புரிந்த வைக்கத்துக்கு 21.12.1978 காலை 8.30-க்குப் போய்ச் சேர்ந்தோம்.

**வைக்கம் சத்தியாகிரகம் என்பது என்ன?**

வைக்கத்தில் உள்ள "வைக்கத்தப்பன் மகாதேவர் கோயில்" என்கிற ஸ்தலம் கேரளத்தில், கோட்டயம் மாவட்டத்திலுள்ள பெயர் பெற்ற கோயில்களில் ஒன்று.

1. அந்தக் கோயிலின் நான்கு வாயில்களை நோக்கி வருகிற நான்கு பக்கங்களிலுமுள்ள பெரும்பாட்டைகளில் (On Main Roads) ஈழவர், பறையர், புலையர், மலைஅறையர், மலைப் பண்டாரம் போன்றோர் நடக்கக்கூடாது. இவர்கள் தீண்டப்படாத சாதியினர்.
2. அந்த மெயின் ரோடுகளில் இந்து மேல் சாதியினர், கிறித்துவர், இஸ்லாமியர் ஆகியோர் மட்டுமே நடக்கலாம்.
3. கிறித்துவர், இஸ்லாமியர் முதலானோர் கோயில் வெளிப்பிரகார வாயில்களைத் தாண்டி உள்ளே போகக்கூடாது.

அந்த நான்கு பக்கப் பெரும்பாட்டைகளில் நுழைவதற்குத் தடைபோட்டு, நான்கு பக்கங்களிலும் சுமார் 400 அடி, 450 அடி, 600 அடி, 1100 அடி தூரங்களில் - "தீண்டப்படாதவர்கள் இங்கே பிரவேசிக்கக் கூடாது" என்று தனித்தனி அறிவிப்புப் பலகைகளை அப்போது வைத்திருந்தனர்.

அன்று அந்த இடத்தை ஒட்டி உண்டியல் உண்டு. தீண்டப்படாதோர் அந்த உண்டியலில் காணிக்கை போடலாம்; அந்த எல்லைக்கு வெளியே நின்று வைக்கத்தப்பனைச் சேவிக்கலாம்; மேல்சாதி இந்துக்களை வணங்க வேண்டும்; வணங்கலாம்.

இந்தத் தடைகளை உடைக்க வேண்டும் என்கிற எண்ணத்தால் உந்தப்பட்ட திரு. டி.கே. மாதவன் காந்தியாருடைய அனுமதியையும், காங்கிரசின் ஆதரவையும் பெற்று, சத்தியாகிரகத்தைத் துவக்கிவிட்டார், திரு.கே.பி. கேசவமேனன் ("மாத்ரு பூமி" ஏட்டின் நிறுவனர்) அவருக்கு உற்ற துணை நின்றார்.

இந்த சத்தியாகிரகத்துக்குக் காந்தியார், ஸ்ரீ நாராயண குரு ஆகியோரின் ஆதரவு தொடர்ந்து இருந்தது.

சத்தியாகிரகம் ஆரம்பித்தவுடன் முதல் நாள் மூவர் கைதாயினர்.

இரண்டாம் நாள் மூவர் கைதாயினர்.

தொண்டர்கள் நாயர் வகுப்புக் குண்டர்களால் தாக்கப்பட்டனர். எனவே அதிக எண்ணிக்கையில் தொண்டர்கள் வர இயலவில்லை.

கிளர்ச்சித் தலைவர்களும் சிறைப்பட்டனர்.

ஆகவே சில நாட்களுக்கு சத்தியாகிரகம் நிறுத்தப்பட்டது.

இந்த நிலையில்தான்-தந்தை பெரியாருக்கு கேரளச் சிறையிலிருந்த தலைவர்கள் ஆள் மூலம் ஓர் மடல் அனுப்பி வேண்டுகோள் விடுத்தனர்.

தந்தை பெரியார் 12.4.1924இல் வைக்கம் சத்தியாகிரகத்துக்குத் தலைமை ஏற்றார்.

வைக்கம் சத்தியாக்கிரகம் நடந்த இடத்திலிருந்து சுமார் 4 பர்லாங் தூரத்தில் வைக்கம் படகுத்துறை (Vaikom Jetty) உள்ளது. அந்தத் துறையை அடுத்து உள்ள சிறிய மைதானத்தில் பல தடவைகள் கூட்டங்களில் பெரியார் ஆற்றிய உரைகளைக் கேட்ட இரண்டு பெரியவர்களை நாங்கள் பேட்டி கண்டோம்.

கேரள மாநில முன்னாள் அமைச்சர் திரு. வி. மாதவன், 21.12.1978 காலை 10.30 மணிக்கு எங்களிடம் ஒப்புக்கொண்டபடி, பிற்பகல் 5.45-க்குப் பேட்டியளித்தார்.

“பெரியாரின் கர்ஜனைகளை நான் பல தடவைகள் கேட்டேன்.”

“அவருடைய கம்பீரமான தோற்றமும் பயங்கர மான மீசையும் அவர் அங்கவஸ்திரத்தை மாற்றி மாற்றிப் போட்டுக் கொண்டு அப்படியும் இப்படியும் நடந்துகொண்டு செய்த வீர கர்ஜனையும் கேரளத்து மக்களுக்கு உணர்ச்சியையும் - உத்வேகத்தையும் ஊட்டியது.”

“உங்களுக்கு ரோஷமில்லையா? மானமில்லையா? நீங்கள் மரமண்டைகளா?” என்று கோபாவேசமாகக் கேட்டுவிட்டு, இடையிடையே அவர் சொன்ன குட்டிக் கதைகள் இன்னமும் என் நினைவில் உள்ளன,

இவ்வாறு கூறிக்கொண்டே, பெரியார் அன்று சொன்ன ஓர் கதையை எங்களிடம் விரித்துக் கூறி, பெரியார் பேசிய மேலே சொன்ன பாணியை அப்படியே உட்கார்ந்த வண்ணம் நடித்துக் காட்டினார்,

அவருக்கோ இன்று வயது 82.

இந்தத் தள்ளாத வயதிலும் அந்தக் குட்டிக் கதையைக் கூறும்போது நான்கு தடவைகள் குலுங்கக் குலுங்கச் சிரித்தார்.

“அன்று பெரியாரின் பிரசங்கங்களைக் கேட்ட எவரும் அவற்றை எப்போதுமே மறக்க முடியாது” என்பதைத் திரும்பத் திரும்ப அவர் கூறிய போது அவருடைய உடம்பே மயிர்க் கூச்செரிந்துவிட்டது.

சத்தியாக்கிரகத்திற்கு முன், 1923இல் அவர் வழக் கறிஞராகப் பணியாற்றப் பதிவு செய்து கொண்டார். எனவே சரளமாக அவர் ஆங்கிலத்திலும், மலையாளத் திலும் விவரங்களைக் கூறினார்.

தேநீரும் சிற்றுண்டியும் எங்கட்கு அளித்து, என் கையைப் பற்றிக்கொண்டே நான்கு படிகள் இறங்கி, வெளி வாயிற்படிக்கு நடந்து வந்து, மகிழ்ச்சி பொங்க எங்களை வழியனுப்பி வைத்தார் அந்தப் பெருமகனார்.

அவரை மீண்டும் சந்திக்க உறுதிபூண்டேன். அங்கேயே மாலை 5 மணி ஆகிவிட்டது.

அருமைத் தோழர் ஆர். மாதவன் (71 வயது) 1924இல் சத்தியாகிரகத்தை நேரில் பார்த்தவர்; அப்போது அவர் ஓர் மாணவர்.

அன்னாருடைய பெருந்துணைகொண்டு, கோயிலின் நான்கு பக்கமும் தடைப்படுத்தப்பட்ட இடம், சத்தியா கிரகம் நடத்தப்பட்ட இடங்கள், சத்தியாகிரகிகள் தங்கி யிருந்த இடம், பெரியாரும், காந்தியாரும், இராஜாஜியும் மற்ற தலைவர்களும் பேசிய படகுத் துறை (காயல் கரை - Vaikom Jetty) மைதானம் இவற்றை நேரில் பார்த்தோம்.

காந்தியாரும், நம்பூதிரிகளின் தலைவரும் உரையாடிய இல்லத்தையும் பார்த்தோம்.

இந்த சத்தியாகிரகத்தில் காமராசர் ஓர் தொண்டராக இருந்தார் என்பதும் முக்கியமானது.

மாலை 6.30 மணிக்குக் கோட்டயம் நோக்கி நானும், எம். நரசிம்மன், பி. சுப்பிரமணியன் மூவரும் பயணமானோம்.

மறுநாள் 22.12.1978 காலை நானும், தோழர் எம். நரசிம்மனும் செங்கணாச்சேரி சென்று, ஓர் நண்பரைப் பார்த்துவிட்டு, காலை 10.30 மணிக்குக் கோட்டயம் சேர்ந்தோம்.

சரியாக 11 மணிக்கு கோட்டயத்தில் பெரியவர் கோபாலன் தந்திரி அவர்களைப் பார்த்தோம்.

அந்தப் பெரியவரின் வயதும் 82.

வைக்கம் சத்தியாகிரகிகளை நாயர் குண்டர்கள் தாக்குவதைக் கண்ட அவர், “நான் சத்தியாகிரகம் செய்யும் போது என்னைக் குண்டர்கள் தாக்கினால், குண்டர்களின் ஊட்டியைப் பிடித்துக் கடிப்பேன்; குத்திக் கொல்லுவேன் என்று சொன்னதால், என்னை சத்தியாகிரகம் செய்ய அனுமதிக்காமல், சத்தியாக்கிரக நிதி வசூலுக்கு அனுப்பி விட்டனர்” என்று உணர்ச்சி யுடன் கூறினார்.

சத்தியாகிரகிகள் தாக்கப்பட்ட கொடுமையை விவரித்தார்.

“மதுரை சிவசைலம் என்கிற தமிழர் ஓர் சத்தியா கிரகி. அவரைக் கட்டிப்பிடித்துக் கொண்டு, செங்கற் களால் அடித்து நாசப்படுத்தினர்.”

“கூத்தாட்டுக்குளம் இராமன் இளையது என்கிற நம்பூத்ரி ஓர் சத்யாக்ரகி. குண்டர்கள் அவரைப் பிடித்துக் கைகளைக் கட்டிவிட்டு, இரண்டு கண்களையும் விரித்து உள்ளே சுண்ணாம்பை அப்பிவிட்டனர். அவரை சத்யாக்கிரக முகாமுக்கு எடுத்துச் சென்று கழுவி உபசாந்தி செய்தோம். அவர் சாகும் வரையில் கண்ணாடி போட்டால்தான் படிக்க முடியும் என்று ஆகிவிட்டது.”

“சத்தியாகிரகம் நடந்த போது சுமார் பதினாறு நாட்கள் வைக்கத்தில் பெரிய வெள்ளம். அப்போதும் கழுத்தளவு வெள்ளத்தில் நின்று கொண்டு, இரண்டு மணிக்கு ஒரு குழு வீதம், இரண்டு, மூன்று நாட்கள் மறியல் நடந்தது” என்று உணர்ச்சி வசப்பட்டுக் கூறினார் கோபாலன் தந்திரி.

“சத்தியாகிரகத்தில் பெரியார் வகித்த பங்கு என்ன?” என்று நான் கேட்டதுதான் தாமதம்;

“நாய்க்கரோ-அவருடைய கம்பீரமும், வாச்சாரமும் கொண்ட பிரசங்கங்கள் மலையாளக் கரையிலே

பிரதான கேந்திரங்கள் யாவற்றிலும் நடந்தது'' என்று கூறிப் பெரியாரின் கம்பீரமான தோற்றத்தை எங்கட்கு நடித்தே காட்டினார்.

நானும் நரசிம்மனும் உணர்ச்சி வசப்பட்டோம்.

''வாச்சாரம் என்றால் என்ன?'' என்று கேட்டேன்.

''நாய்க்கர் பிரசங்கத்தில் தாரை தாரையாக வார்த்தைகள் கொட்டும்'' என்று விளக்கிச் சொன்னார்.

''வைக்கத்தில் நான் இரண்டு, மூன்று பிரசங்கங்களைக் கேட்டேன். ஒரே வீராவேசம்; ஒரே உணர்ச்சி'' என்று மீண்டும் மீண்டும் கூறினார்.

திரு. கோபாலன் தந்திரி அவர்கட்கு ஸ்ரீ நாராயண குரு அவர்களிடம் நெருங்கிய ஈடுபாடு உண்டு.

ஆரம்பத்தில் தனிக்கோயில், தனிச் சிலைகள் பிரதிஷ்டை என்று உபதேசித்த ஸ்ரீ நாராயண குரு அவர்கள். சக்ரீஸ்வர க்ஷேத்திரம் என்கிற ஊரில் புதிதாக ஓர் கோயிலைப் பிரதட்சிக்க அங்குள்ளவர்கள் அழைத்த போது :

''நமக்கு இஷ்டமில்லா; நாம் வருமில்லா; க்ஷேத்திரங்கள் இனி வேண்டா; ஜனங்களுக்கு இனி தொழிலும், வித்யாப்பியாசமும், விவசாய சாலைகளும் உண்டாக்கிக் கொடுக்கா'' எனக் கூறி அவர் மறுத்து விட்டதாக, நூல் ஆதாரப்பூர்வமாக எங்கட்குக் கூறினார். இது 16.6.1927இல் ஸ்ரீ நாராயண குரு அவர்கள் தந்த முடிவான உபதேசம். அன்னார் 1928-இல் (1855-1928) மறைவுற்றார்.

வைக்கம் வீரரின் - தந்தை பெரியாரின் கம்பீர உரைகளை வைக்கம் வாழுநர் கூறக் கேட்ட நான், அவர் தம் வைக்கம் சத்தியாக்கிரக உரைகளை, அவருடன் சத்தியாகிரகத்தில் ஈடுபட்ட பலரையும் நேரில் கண்டு கேட்க வேண்டுமென்ற பேராவலுடன் - கோபாலன் தந்திரி அவர்களிடமிருந்து விடை பெற்றேன்.


எங்கள் இருவரையும் கட்டித் தழுவி அப்பெரியவர் விடை தந்தார்.

இப்படிப்பட்ட பெரியவர்களை-பெரியாரின் ஆரம்ப கால தியாகத்தை - அவர்தம் வரலாற்றின் இருண்ட காலப் பகுதியை விளக்கவல்ல வைக்கம் சத்தியாகிரகிகள் வி.கே. மாதவன், வாசு பணிக்கர், சாத்துக்குட்டி நாயர், குரூர் நீலகண்டன் நம்பூத்ரி பாத் போன்ற பலரையும் காண நான் விருப்பங்கொண்டு, மீண்டும் நான்கு வார காலம் கேரளப் பயணம் செல்ல விரும்புகிறேன்.

எனக்கு வசதியும் வாய்ப்பும் நேராவிட்டாலும் பெரியாரின் வரலாற்றில் இருண்ட பகுதிக்கு ஒளி தேடிச் செல்வதைப் பெருமகிழ்ச்சி தரும் பணியாகக் கருதித் தொடர்ந்து நான் ஈடுபடுவேன்.

● - (சிந்தனையாளன் - 06.01.1973)

# வேலூர் தா. இரவி மறைந்தார்



வேலூர் யுனைடெட் ஆட்டோ எலக்ட்ரிக் ஓர்க்ஸ் உரிமையாளரும் மார்க்சியப் பெரியாரியப் பொதுவுடைமைக் கட்சித் தோழருமான தோழர் தா. இரவி 11.03.2023 அன்று இயற்கையானார்.

தோழர் தா.இரவியின் கண்கள் கொடையளிக்கப் பட்டன. தோழர் தா. இரவி மா.பெ.பொ.க. தொடக்கம் முதல் கட்சியின் உறுப்பினர் ஆவார். 1991இல் கட்சியினர் ஒரு குழுவாக புதுதில்லி, உ.பி., பீகார், மே.வங்கம் ஆகிய இடங்களுக்கு பெரியாரின் கொள்கை மற்றும் பிற்படுத்தப்பட்டோர் இடஒதுக்கீடு பரப்புரைப் பயணம் மேற்கொண்டதில் பங்கேற்றவர்.

தோழர் தா. இரவியின் துணைவியார் தேன்மொழி, மகள்கள் அல்பேனியா (எ) அருணா மற்றும் குருப்ஸ்கயா (எ) சமரிசைக்கும் மார்க்சியப் பெரியாரியப் பொதுவுடைமைக் கட்சியின் சார்பில் ஆழ்ந்த இரங்கலை உரித்தாக்குகிறோம்.



நடுவில் தோழர் வே.ஆனைமுத்து இடப்புறம் வேலூர் சா.குப்பன் அவர் அருகில் தா.இரவி

# இந்தியப் பொருளாதார வீழ்ச்சி முந்திரா ஊழல் முதல் அதானி ஊழல் வரை

- பேராசிரியர் **மு.நாகநாதன்**

அமெரிக்காவின் இன்டன்பர்க் அறிக்கை வெளி வந்த பிறகு அதானி குழுமம் செய்த மோசடிகள் வெடித்துக் கிளம்பிய வண்ணமே உள்ளன. ஆயுள் காப்பீட்டுக் கழகம், பொதுத் துறை வங்கிகள், தொழிலாளர்களின் வருங்கால வைப்பு நிதி ஆகியவற்றின் நிதியை அதானி குழுமம் ஒன்றிய அரசின் உதவியோடு பெற்றிருப்பது பெரும் அதிர்ச்சி அலைகளையும் அச்சத்தையும் உருவாக்கி வருகிறது.

இந்தியப் பொருளாதாரம், திட்டமிடல் பொருளா தாரத்தைக் கைவிட்ட காலத்திலிருந்து தனியார் முதலாளித்துவ நிறுவனங்கள் செய்யும் மோசடிகள் பெருமளவில் மூடிமறைக்கப்பட்டு வருகின்றன. ஏடுகள், தொலைக்காட்சி ஊடகங்கள் முழு அளவில் பெருமுதலாளிகளின் கட்டுப்பாட்டிலேயே இயங்கி வருவதால் அதானி குழுமம் செய்த உலகளவிலான பெரும் நிதி மோசடி மூடி மறைக்கப்பட்டு வருகிறது. அங்கொன்றும் இங்கொன்றுமாகச் சில ஊடகங்கள் மட்டுமே இன்டன்பர்க் அறிக்கையின் முதன்மையான கருத்துகளையும் அதனால் முதலீட்டாளர்களுக்கு ஏற்பட்ட பாதிப்பையும் பங்குச் சந்தை சரிவுகளையும் வெளியிட்டன. மூலதனச் சந்தை வழியாகத்தான் முதலாளித்துவம் தனக்கான நிதியாதாரங்களைப் பெற்றுவருகிறது. ஊக வணிகத்தின் அடிப்படையில் இயங்கும் பங்குச் சந்தை இதற்குப் பெருமளவில் உறுதுணையாக உள்ளது.

18ஆம் நூற்றாண்டில்தான் இங்கிலாந்து போன்ற ஐரோப்பிய நாடுகளிலும் வடஅமெரிக்க நாடுகளிலும் பங்குச் சந்தை அமைப்பு முறை காலூன்றத் தொடங்கியது. முதல் கோணல் முற்றிலும் கோணல் என்ற தமிழ் முதுமொழியின் கருத்துக்கேற்ப பங்குச் சந்தை தொடங்கிய காலம்தொட்டு இன்றுவரை குழப்பங்களும் மோசடிகளும் தொடர்ந்த வண்ணமே உள்ளன. இதன்தொடர்பாக ஒட்டுமொத்தப் பொருளாதாரத்தில் ஏற்பட்ட சரிவுகளையும் பொருளாதார வரலாற்றின் வழியாக அறிய முடிகிறது. இணையத்தின் வழி பார்த்தால் பங்குச் சந்தை மோசடிகள் வரிசைக்கட்டி நிற்கின்றன.

இதற்கு முதன்மைக் காரணம் பங்குச் சந்தை இயங்கும் முறை சூதாட்ட வடிவத்தின் அனைத்துக் கூறுகளையும் பெற்றிருக்கிறது. பணவியல் பொருளாதார நூல்களில் மக்கள் ஏன் பணத்தைத் தேடுகிறார்கள்? சேமிக்கிறார்கள்? என்ற கருத்தியல் பொருளாதார அறிஞர்களால் விளக்கப்படுகிறது. பணம் கீழ்க்கண்ட காரணிகளின் அடிப்படையில் பணச்சுழற்சி முறை ஊக்குவிக்கப்பட்டு சந்தைப் பொருளாதாரத்திற்குத் தேவையான மூலதனத்தைப் பெற்றுத் தருகிறது. ஆனால் சந்தைப் பொருளாதாரத்தில் கள்ளப்பணமும் நல்லப் பணமும் சம அளவில் இயங்குகின்றன. இந்த உண்மையை 16ஆம் நூற்றாண்டிலேயே இங்கிலாந்து நாட்டின் அரச குடும்பத்து நிதி ஆலோசகராகப் பணி யாற்றிய கிரம்ஸ் கெட்டப் பணம் நல்லப் பணத்தைத் துரத்திவிடுகிறது (Bad money drives out good money) என்று அளித்த விளக்கம் நமக்கு வியப்பை அளிக்கிறது. இந்தக் கருத்துப் பல நூற்றாண்டுகள் கடந்த பின்னரும் பணத்தினுடைய பல பரிமாணங்கள் ஏற்பட்ட பிறகும் பொருளாதாரத்தில் பல பின்னடைவுகளை ஏற்படுத்தி வருகிறது.

## நாம் இருவர், நமக்கு இருவர்



பணத்தினுடைய குறிக்கோள்கள் எப்படி அமைய வேண்டும் என்பதைப் பொருளியலில் பல அறிஞர்கள் சுட்டிக்காட்டினர். அறிஞர் காரல் மார்க்சு தொழில் புரட்சிக்குப் பிறகு ஏற்பட்ட இயந்திரமயமான பொருள் உற்பத்தி பெருக்கத்தை விளக்குகிற போது பணப் பரிமாற்றத்தினுடைய அடிப்படைக் காரணங்களை விளக்கிக் கூறினார். பொருட்கள் உற்பத்தி செய்யும் போது மனிதர்களின் உழைப்பு அப்பொருட்களில் உறைந்து கிடக்கிறது. பொருளின் மதிப்பே உழைப்பு தான். முதலாளிகள் உழைப்புக்கு ஏற்ற கூலியை அளிக்காமல் உழைப்பாளிகளுக்கு அளிக்க வேண்டிய உரியக் கூலியை இலாபமாகச் சுரண்டிச் செல்கின்றனர். மார்க்சு, பணத்தைப் பற்றியும் பணப் பரிமாற்றத்தைப்

பற்றியும் அளித்த விளக்கங்கள் இன்று பெருமளவில் உண்மையாகி வருகின்றன. முதலாளித்துவம் உருவாக்கிய பண அமைப்பு முறை பொருளாதாரத்தில் பல பின்ன டைவுகளைத் தொடர்ந்து ஏற்படுத்தி வருகிறது. பல பொருளியல் அறிஞர்கள் பல்வேறு காலக்கட்டங்களில் பணத்தின் தேவையைப் பற்றியும் அதன் தாக்கங் களைப் பற்றியும் பின்வருமாறு குறிப்பிடுகின்றனர்.

1. பரிமாற்றத்திற்கான பணத்தேவை (Transaction Motive)
2. முன்னெச்சரிக்கை நோக்கத்திற்கான பணத்தேவை (Precautionary Motive)
3. ஊக நோக்கத்திற்கான பணத்தேவை (Speculative Motive)

தொழில் புரட்சியின் விளைவாக இயந்திரமய மாக்கப்பட்ட தொழில் உற்பத்தி முறை செல்வாக்குப் பெறத் தொடங்கிய பிறகு தனியார்த் துறையினர் பங்களிப்புப் பெருகியது. தனியார்த் துறையின் மூல தனத் தேவைக்காகப் பங்குச் சந்தை வலிமைமிக்க ஒரு பணவியல் கருவியாக உருமாறியது. பொருளா தாரச் சுதந்திரம் என்ற பெயரில் மூலதனத்தைப் பெருக்க முதலாளிகள் முற்பட்ட போது, மோசடிகளும் பயிரை ஒட்டி வளர்கின்ற களைகளாக வளர்ந்தன. ஒரு பக்கம் பணப் பெருக்கம், மற்றொரு பக்கம் நிதி மோசடி என்பது நடைமுறையாயிற்று. இந்த மோசடி பணத்தையும் பங்குச் சந்தைகள் ஏற்றுக்கொள்ளும் நிலை ஏற்பட்டது. பங்குச் சந்தைகளைக் கட்டுப்படுத்து வதற்கும் ஒழுங்குபடுத்துவதற்கும் பங்குச் சந்தையில் பல விதிகள் உருவாக்கப்பட்டாலும் மோசடிப் பணத்தி னுடைய செல்வாக்கினைக் குறைக்க முடியவில்லை. இது முதலாளித்துவ முறையின் பெரும் தீங்காகக் கருதப்படுகிறது.

பங்குச் சந்தையில் முதலீடு செய்பவர்கள் பங்குச் சந்தைக்குள் நடைபெறும் மோசடிகளை உடனடியாக அறிந்து கொள்ளும் நிலை இல்லாத காரணத்தினால் பங்குச் சந்தை தரகர்கள் செய்யும் பல தில்லுமுல்லுகள் பொதுவெளியில் தென்படுவதில்லை. சான்றாக. அறிவியல் பேரறிஞரான ஐசக் நியூட்டனும் 1720லேயே இந்த ஊக சூதாட்ட வணிகத்தில் ஈடுபட்டு பெரும் தொகையை இழந்தார். முதன்முதலாக இங்கிலாந்தின் தென்கடல் குழுமம் (Southsea Company) பங்குச் சந்தை நூறு விழுக்காடு இலாபம் தரும் குழுமமாக இருந்ததால் முதலில் ஏழாயிரம் பவுண்டுகளை ஐசக் நியூட்டன் முதலீடு செய்திருந்தார். சில மாதங்களிலேயே இன்றைய ரூபாய் மதிப்பில் 30 கோடிக்கு மேல் இழப்பைச் சந்தித்தார். அசைவுகளை அறிவியல்வழி அறிந்து தெளிந்த ஐசக் நியூட்டன் ஒவ்வொரு விசைக்கும் சமமான நேரடியான எதிர்விசை உண்டு என்று சுட்டிய அறிவியல் பெருமகனையும் பங்குச் சந்தை ஏமாற்றியது. இதைப் பற்றி ஐசக் நியூட்டன் குறிப்பிடும் போது நட்சத்திரங்களின் அசைவிலிருந்து மற்ற பொருட்களின் அசைவுகளை அறிவியல் வழியாக அறிய முடிந்த என்னால் மக்களின் பைத்தியக்காரத்தனத்தை அறிந்து கொள்ள முடியவில்லை என்று குறிப்பிட்டார்.

இந்தியாவில் 1875ஆம் ஆண்டிலிருந்து ஆசியா விலேயே மிகப்பெரிய பங்குச்சந்தையாக மும்பை பங்குச்சந்தை (Bombay Stock Exchange) இயங்கி வந்தது. 1992ஆம் ஆண்டு தேசிய பங்குச்சந்தை (National Stock Exchange) தனியார்த் துறையால் உருவாக்கப்பட்டது. 2013ஆம் ஆண்டு சித்ரா ராம கிருஷ்ணா தேசிய பங்குச்சந்தையின் மேலாண்மை இயக்குநராகவும் முதன்மைச் செயல் அலுவலராகவும் பணிபுரிந்தார். பதவி ஏற்றதிலிருந்து பங்குச் சந்தையில் அவர் வைத்ததே சட்டம் என்ற நிலை உருவானது. தனக்கு ஆன்மிக குரு சிரோன்மணி என்றும் இவர் இமயமலையில் தவம் புரிகிறார் என்றும் அவரின் அறிவுறுத்தலின்படியே செயல்பட்டதாகவும் பல முடிவு களை எடுத்ததாகவும் தெரிவித்தார். அவர் பயன் படுத்திய கணினி அமைப்புகளுக்கு ரிக் வேதம், சாம வேதம் என்றும் பெயரிட்டு மின்னஞ்சல் வழியாக சித்து விளையாட்டுகளை இமயமலை சித்தபுருஷ் யோகியுடன் விளையாடியுள்ளார். போதிய கல்வித் தகுதியும் நிதிநிறுவனங்களில் பணியாற்றிய முன்னனு பவமும் இல்லாத-ஆண்டு ஊதியம் சில இலட்ச ரூபாயாகப் பெற்ற ஆனந்த் சுப்ரமணியத்திற்குக் கோடிக்கணக்கில் ஆண்டு ஊதியம் அளித்து, தனக்குத் துணை உயர் அலுவலராக நியமித்துக்கொண்டார்.

கணினி வழியாகப் பங்குச்சந்தையின் ஏற்ற இறக்கங்கள், இரகசியங்கள் ஆகியவற்றை வெளிப்படுத்து கிறார் என்று சிங்கப்பூரைச் சேர்ந்த பங்குச்சந்தையில் ஈடுபட்ட ஒருவர் குறிப்பிட்டதைத் தொடர்ந்து இரு பத்திரிக்கையாளர்கள் ஆய்வு மேற்கொண்டு ஊழல் களை வெளியிட்ட பிறகுதான் செபி மற்றும் ஒன்றிய அரசின் புலனாய்வுத் துறை மெல்ல மெல்ல தங்களின் கவனத்தைத் தேசியப் பங்குச்சந்தையின்மீது திருப்பியது. ஒன்றிய புலனாய்வுத் துறை ஆனந்த் சுப்ரமணியத்திடம் கடுமையான முறையில் விசாரணையை மேற்கொண்ட பிறகுதான் அந்த இமயமலை யோகி ஆனந்த் சுப்ர மணியம்தான் என்பது ஊடகங்களில் வெளிவந்தது. இதற்குப் பிறகு பல நாட்கள் கழித்துத்தான் சித்ரா ராமகிருஷ்ணா கைது செய்யப்பட்டார். இந்தப் பங்குச் சந்தை இரகசியங்கள் முன்னதாகவே பல பங்குச் சந்தை தரகர்களுக்குத் தெரிவிக்கப்பட்டதால் ஏற்பட்ட விளைவுகள் என்ன? என்பது யாருக்கும் தெரியாது.

எத்தனை இலட்சம் கோடி ரூபாய் இழப்பு ஏற்பட்டது? யார் யார் பாதிக்கப்பட்டார்கள் என்ற விவரங்கள் எல்லாம் இதுவரை யாராலும் பெறமுடியவில்லை. ஒன்றிய அரசும் சங்கி சாமியார்கள் போன்று ஆழ்ந்த தவக்கோலத்தில் அமைதி காத்து வருகிறது.



பங்குச் சந்தை சித்து விளையாட்டில் ஈடுபடுபவர்கள் பெரும் பணக்காரர்களே ஆவர். பங்குச் சந்தை என்பதே முதலா ளித்துவம் நடத்தும் சூதாட்டம் என்பதைப் பல பொருளியல் அறிஞர்கள் சுட்டிக்காட்டி யுள்ளனர். பங்குச் சந்தை மோசடிகளைத் தனித்துப் பார்க்க முடியாது. வங்கி மோசடிகள், நிதிநிறுவன மோசடிகள், அரசுத்துறை வங்கிகளில் பல ஆயிரம் கோடி ரூபாயைக் கடன் பெற்றுத் திருப்பி செலுத்தாமல் ஐரோப்பிய நாடுகளில் மகிழ்ச்சியாக வலம் வரும் பல பெருமுதலாளிகள் செய்த மோசடிகளும் இதில் அடங்கும். இந்தத் தனியார்ப் பங்குச்சந்தையின் வளர்ச்சிக்கு சித்ரா ராமகிருஷ்ணா பெரும் பங்காற்றினார் என்று ஊழல் மோசடி வழக்கில் அவர் கைதான பிறகும் ஊடகங்கள் அவர் புகழைப் போற்றுவதில் சனாதனத்தை உயர்த்திப் பிடிக்கின்றன.

இதுபோன்ற பங்குச்சந்தை சூதாட்டமும் மோசடிகளும் முதலில் சவகர்லால் நேரு காலத்தில் முந்திரா ஊழலி லிருந்து தொடங்கியது. இந்த ஊழல் பெருமளவில் நாடாளுமன்றத்திலும் ஊடகங்களிலும் மக்கள் மன்றத் திலும் விவாதப் பொருளாயிற்று. 1950களில் கொல்கத் தாவைச் சேர்ந்த பங்குச் சந்தை ஊக வணிகராக இருந்த அரிதாஸ் முந்திரா திடீரென்று சில ஆண்டுகளி லேயே பெருமுதலாளியாக வலம் வந்தார். இந்தியாவின் பல முதலாளிகளுக்குப் பங்குச் சந்தையில் எப்படி மோசடி செய்து, திடீரென்று பெருமுதலாளியாக மாறலாம் என்ற முதல் மோசடிப் பாடத்திட்டத்தையே வழங்கியவர்தான் அரிதாஸ் முந்திரா.

பொய்யான தகவல்களை அளிப்பது பங்குகளின் உண்மை மதிப்பைப் பல மடங்கு போலியாக உயர்த்தி முதலீட்டாளர்களை ஏமாற்றுவது, சிறு தொழில் செய்வோரின் பணத்தைப் பெறுவதற்காகத் தனக்கு அரசு ஆதரவு இருப்பதாகக் கூறி அவர்களின் பணத் தைக்கொண்டும் தனது வணிக நிறுவனத்தின் பங்கு களை வாங்கச் செய்வது, பங்குச் சந்தை கட்டுப்பாடு களை ஊழல் செய்து தனக்கு சாதகமாக பயன்படுத்துவது போன்ற மோசடி செயல்களில் ஈடுபட்டார் முந்திரா. இதுதான் ஒரு ஊக வணிகத் தரகர் உயர் முதலாளி யான முதல் நிகழ்வாகும். இதன் பிறகு பல பங்குச் சந்தை மோசடிகளும் நிதி நிறுவன மோசடிகளும் இந்தியாவில் தொடர்ந்தவண்ணமே உள்ளன. பங்குச் சந்தையைக் கண்காணிக்கும் செபி (Securities and Exchange Board of India-SEBI) என்கிற இந்தியப் பங்குச்சந்தை ஒழுங்காற்று மையம் 1988ஆம் ஆண்டு உருவாக்கப்பட்டது. இன்று வரை இந்த அமைப்பும் கள்ளப்பணத்தை முதலீடு செய்பவர்களையும் பண மோசடிகளைச் செய்துவரும் பங்குச் சந்தைத் தரகர்களையும் பங்குச் சந்தையில் பணிபுரியும் உயர் அலுவலர்களையும் உரிய முறையில் கண்காணிக்கத் தவறிவிட்டது. இதற்கு ஒன்றிய அரசுதான் பொறுப்பேற்க வேண்டும். ஆனால் முதலாளிகளின் தரகராகவே ஒன்றிய அரசின் பல நிர்வாக அமைப்புகள் தற்போது மாறிவிட்ட பிறகு, அதானி போன்ற பெருமுதலாளிகள் எதைப் பற்றியும் கவலைப்படாமல் தங்கள் நிறுவனங் களின் மோசடிகளுக்குத் துணிச்சலுடன் பொதுத்துறை வங்கிகளையும் ஆயுள் காப்பீட்டுக் கழகத்தையும் ஒன்றிய அரசின் பல நிர்வாக அமைப்புகளையும் பயன்படுத்தி யுள்ளனர் என்பதை இன்டன்பர்க் அறிக்கை தெளிவாக்கு கிறது.

பொதுத் துறை வங்கிகளும் ஆயுள் காப்பீட்டுக் கழகங்களும் ஒன்றிய அரசின் துணையோடு அதானி குழுமங்களில் நிதி முதலீடுகளை மேற்கொண்டதால் முதலீட்டாளர்களின் நம்பிக்கையை அதானி குழுமம் பெற முடிந்தது. மேலும் ஒன்றிய அரசின் கட்டுப்பாட்டிற் குள் உள்ள வானூர்தி நிலையங்கள், துறைமுகங்கள் ஆகியன ஒப்பந்த அடிப்படையில் அதானி குழுமம் மேலாண்மை செய்வதற்கு ஒன்றிய அரசால் அனுமதி அளிக்கப்பட்டது. மேலும் பிரதமர் நரேந்திர மோடி வெளிநாட்டுப் பயணத்தின்போது அதானியையும் அழைத்துச் சென்றார் என்பதையும் இதன் காரணமாக ஒன்றிய அரசின் பல சலுகைகளை அதானி குழுமம் பெற்றது என்பதையும் இராகுல் காந்தி நாடாளுமன்றத்தில்

சுட்டிக்காட்டினார். இராகுல் காந்தி பேசிய பிறகு பிரதமர் நரேந்திரர் மூன்று மணி நேரம் பேசினார். ஒரு வரியிலும் ஒரு சொல்லில் கூட அதானியைப் பற்றிக் குறிப்பிடவே இல்லை என்பதுதான் உலகளவில் பலருக்கு அதிர்ச்சியை அளித்தது.

1957ஆம் ஆண்டு இந்திய ஆயுள் காப்பீட்டுக் கழகம் முந்திரா குழுமம் உட்பட 6 நிதி மோசடியில் ஈடுபட்ட குழுமங்களில் அன்றைய ரூபாய் மதிப்பில் ஒரு கோடியே 24 இலட்சம் அளவிற்கு முதலீடு செய்தார்கள். ஆயுள் காப்பீட்டுக் கழகம் சீரான முறையில் இயங்குவதற்காகவும் நிதி முறைகேடுகளைத் தவிர்ப்பதற்காகவும் ஒரு மேலாண்மை முதலீட்டுக் குழு இந்திய ஆயுள் காப்பீட்டுக் கழகத்தில் இயங்கி வந்தது. இந்தக் குழுவினுடைய பரிந்துரைகளுக்கு உட்படுத்தாமல் ஒன்றிய அரசின் நிதித்துறை அழுத்தத்தால் இந்தப் பெரும் நிதியுதவி மோசடிக் குழுமங்களுக்கு வழங்கப்பட்டது. 60 விழுக்காட்டிற்கு மேலான ஆயுள் காப்பீட்டுக் கழகத்தின் நிதியுதவி முந்திரா குழுமத்திற்கு வழங்கப்பட்டது. அப்போது காங்கிரசின் நாடாளுமன்ற உறுப்பினராக இருந்த பெரோஸ் காந்தி இந்த ஊழலை நாடாளுமன்றத்தில் பிரதமர் நேரு முன்னிலையில் ஆதாரங்களோடு ஆவணங்களை வழங்கி திடுக்கிடச் செய்தார். இந்திரா காந்தியின் கணவர் என்கிற முறையிலும் நேருவின் மருமகன் என்ற தகுதியிலும் செல்வாக்குப் பெற்றிருந்த பெரோஸ் காந்தி இத்தகைய ஊழல் குற்றச்சாட்டைச் சுமத்துவார் என்று யாரும் எதிர்பார்க்கவில்லை. உடனடியாக இந்த ஊழல் பற்றிய விசாரணையை மேற்கொள்ள மும்பை உயர்நீதிமன்றத் தலைமை நீதிபதியாகப் பணியாற்றிய எம்.சி. சாக்லா தலைமையில் ஒரு நபர் குழுவை பிரதமர் நேரு அமைத்தார்.

இந்திய நீதி விசாரணை வரலாற்றிலேயே முதன்முதலாக நீதிபதி சாக்லா 24 நாட்களில் தனது விசாரணையை முடித்து அறிக்கையை ஒன்றிய அரசிற்கு அளித்தார். மேலும் விசாரணை வெளிப்படைத்தன்மையோடு இயங்க வேண்டும் என்பதற்காகப் பொது விசாரணை முறையைப் பின்பற்றினார். முந்திரா நிதி மோசடி செய்ததும் அதற்குத் துணையாக ஒன்றிய அரசின் நிதித்துறையின் உயர் அலுவலர்கள் இருந்ததும் அறிக்கையில் சுட்டப்பட்டது. அப்போது ஒன்றிய அரசின் நிதி அமைச்சராக இருந்த தமிழ்நாட்டைச் சேர்ந்த டி.டி. கிருஷ்ணமாச்சாரி பதவியில் இருந்து விலகினார். ஜனநாயக முறையையும் நாடாளுமன்றத்தையும் மதிக்கின்ற உயர் நோக்கும் பிரதமர் நேருவிடம் இருந்ததால் ஊழலைத் தடுப்பதற்கு விரைந்து நடவடிக்கைகளை மேற்கொண்டார்.

ஆனால் இன்று இந்த முந்திரா ஊழலைவிடப் பல நூறு மடங்கு பெரிய அளவில் நடைபெற்ற பல இலட்சம் கோடி ரூபாய் ஊழலை அதானி குழுமம் செய்துள்ளது என்று இன்டன்பர்க் அறிக்கை ஆதாரத்தோடு வெளியிட்ட பிறகும் பிரதமர் மோடி நாடாளுமன்றத்தில் பதிலளிக்கவில்லை. எல்லாவித ஜனநாயக நெறிகளையும் காலில் போட்டு மிதிக்கும் அளவிற்கு இந்த ஊழலை மூடி மறைப்பதற்காகத் திசை திருப்பும் நோக்கத்தோடு அவசர அவசரமாக இராகுல் காந்தியின் நாடாளுமன்ற உறுப்பினர் பதவியைப் பறித்திருப்பது இந்த ஊழல் மோசடிக்கு ஒன்றிய பாஜக அரசும் பிரதமர் நரேந்திர மோடியும் துணை போயிருக்கின்றனர் என்பதை வெளிச்சம் போட்டுக் காட்டுகிறது.

மற்றொரு பங்குச் சந்தை மோசடி இந்தியாவையே உலுக்கியது. 1992இல் குசராத் மாநிலத்தைச் சேர்ந்த ஹர்ஷத் மேத்தா பங்குச் சந்தைதரகராகத் தனது வாழ்க்கையைத் தொடங்கி ஏறக்குறைய 24,000 கோடி ரூபாய் அளவிற்குப் பங்குச்சந்தையில் மோசடி செய்தார். இவரும் பொதுத் துறை வங்கிகளைப் பயன்படுத்திப் பண இரட்டிப்பு மோசடி செய்து பங்குச் சந்தையைப் பெரும் வீழ்ச்சிக்குள்ளாக்கினார். ஆனால் இவர் கைது செய்யப்பட்டு நீதிமன்றத்தால் சிறைத் தண்டனை அளிக்கப்பட்டு 2001இல் சிறையிலேயே மறைந்தார்.

இந்தியாவின் வேளாண் தொழில் பணித் துறைகளுக்குத் தேவையான அடிப்படைக் கட்டமைப்புகளை உருவாக்கியவர் நேரு. பொதுத் துறை நிறுவனங்கள்தான் இந்தியப் பொருளாதாரத்தின் வழிகாட்டி என்றும் வலியுறுத்திப் பல பொதுத் துறை நிறுவனங்களை உருவாக்கியவரும் அவரே. ஆனால் நேருவின் மீது காழ்ப்புணர்ச்சியையும் வெறுப்புணர்ச்சியையும் தொடர்ந்து கொட்டி வருகின்றன சங் பரிவாரங்கள். இதன் உச்சம்தான் 75ஆம் ஆண்டு விடுதலை விழாவில் நேருவின் உருவப் படத்தைக் கூட வைக்காமல் மறைத்ததாகும். என்னதான் மறைத்தாலும் நேருவின் உணர்வும் பெரோஸ் காந்தியின் ஆளுமையும் இராகுல் காந்தியின் வடிவில் எதிரொலிக்கின்றன. ஆர்.எஸ்.எஸ். என்ற அமைப்பு மத அரசியலைத் தூண்டி சமூகத்தைப் பிளவுபடுத்துகிறது என்று வெளிப்படையாகக் குற்றம் சாட்டி வருகிறார் இராகுல். இதைப் பொறுக்கமுடியாமல் நாளுக்கு நாள் அவர் பெற்றுவரும் செல்வாக்கினைத் தடுக்கும் நோக்கோடுதான் இராகுலை நாடாளுமன்ற உறுப்பினர் பதவியிலிருந்து தகுதி நீக்கம் செய்து விட்டனர். தங்களை நேரிடையாக எதிர்ப்பவர்களையும் எதிர்க்கட்சிகளைச் சார்ந்த தலைவர்களை அழிக்கும் நோக்கத்தோடு வருமான வரித்துறை, அமலாக்கத் துறை, புலனாய்வுத் துறைகள் ஆகியன என்றும் இல்லாத அளவிற்கு ஒன்றிய அரசால் பயன்படுத்தப்பட்டு வருகிறது. இந்தியாவினுடைய மாண்பும் மரியாதையும் உலகளவில் சிதைந்து கேலிக்குரியதாக மாறி வருகிறது.

இந்தியாவினுடைய பொருளாதாரம் நாளும் சரிந்து வருகிறது. மறைமுக வரி என்ற பெயரில் ஏழை நடுத்தர மக்களுடைய பணம் சூறையாடப்படுகிறது. பொதுத்துறை நிறுவனங்கள் சீர்குலைக்கப்படுகின்றன. மோசடிகள் செய்யும் அதானி குழுமம் போன்ற பெரு நிறுவனங்கள் ஊக்குவிக்கப்படுகின்றன. இந்தியா-சீனா வருங்கால பொருளாதார வளர்ச்சியடையும் நாடுகள் என்ற தலைப்பில் மார்ச் 16, 2023 நாளிட்ட இந்து ஏட்டில் மா ஜியா (இந்தியாவிற்கான சீன தூதரகத்தின் பொறுப்பு உயர் அலுவலர்) ஒரு கட்டுரையை எழுதி யுள்ளார். அக்கட்டுரையில் சீனா 2022ஆம் ஆண்டு 3 விழுக்காடு வளர்ச்சியைப் பெற்று ஒரு கோடியே 20 இலட்சம் நபர்களுக்கு நகர்ப்புற வேலைவாய்ப்பு அளித் துள்ளது. சீனாவினுடைய ஒட்டுமொத்த உள்நாட்டு உற்பத்தி இந்திய ரூபாய் மதிப்பில் ஏறக்குறைய 1479 இலட்சம் கோடியாகும் 18 டிரில்லியன் அமெரிக்க டாலர்). கடந்த ஐந்தாண்டுகளாகப் பொருளாதார வளர்ச்சி 5.2 விழுக்காடாகும். இந்த வளர்ச்சியின் பயன்கள் சீனாவில் அடிப்படை வறுமையை ஒழித்து விட்டது. 70 விழுக்காடு அரசின் பொதுச் செலவு மக்களின் நல்வாழ்விற்காகச் செலவிடப்படுகிறது. 10 கோடி ஊர்ப்புற மக்களை வறுமையில் இருந்து விடுவித்துள்ளது. முதியோர் காப்பீட்டுத் திட்டத்தின் வழியாக 100 கோடி மக்கள் பயன் பெற்று வருகின்றனர். தொடர்ந்து மக்களுடைய வாழ்நிலை உயர்ந்து வருகிறது. நாட்டின் ஒட்டுமொத்த வரி விதிப்பு குறைந்து வருகிறது. சான்றாக வரிச்சுமை 9.8 விழுக்காட்டிலிருந்து 7.4 அளவிற்குக் குறைந்துள்ளது.

உலகப் பொருளாதார வளர்ச்சியில் சீனாவின் சராசரி பங்களிப்பு 38.6 விழுக்காடாகும். அமெரிக்கா, இங்கிலாந்து, பிரான்சு, ஜெர்மனி, இத்தாலி, கனடா, ஜப்பான் ஆகிய நாடுகளின் ஒட்டுமொத்தப் பங்களிப்பு 25.7 விழுக்காடு மட்டும்தான். இந்தியா சீனாவின் ஒட்டுமொத்த வர்த்தகத்தின் மதிப்பு 108.9 இலட்சம் கோடி ரூபாய் (136 பில்லியன் அமெரிக்க டாலர்). ஆனால் சீனாவின் இந்தியாவிற்கான ஏற்றுமதி கடந்த 10 மாதங்களில் 6 இலட்சம் கோடி ரூபாய் அளவிற்கு உயர்ந்துள்ளதாக மார்ச் 30, 2023 இந்து நாளேட்டில் புள்ளிவிவரங்கள் வெளிவந்துள்ளன.

சீனத் தூதரக உயர் அலுவலர் தனது கட்டுரையில் (மார்ச் 16) சீனாவிலிருந்து தொடர்ந்து இறக்குமதி செய்யப்படும் பொருட்களால் இந்தியாவில் உற்பத்தி செய்யப்படும் பொருட்களின் அளவு (Made in India) குறைந்து வருகிறது என்று குறிப்பிட்டுள்ளார். இந்தியாவில் உற்பத்தி செய்யாமல் சீனாவில் உற்பத்தி செய்யப்படும் பொருட்களை இறக்குமதி செய்து அவற்றை இணைக்கும் மையமாக இந்தியா மாறி வருகிறது. இதைத்தான் மோடி அடிக்கடி Make in India என்று குறிப்பிடுகிறார். Made in China என்பது Make in India என்று மாறி வருகிறது என்பதுதானே உண்மை.

இது நேரு பின்பற்றிய தற்சார்பு கொள்கையை அடியோடு வீழ்த்திவிட்டது. பெருமளவில் வேலை வாய்ப்பையும் குறைத்து வருகிறது. இதுபோன்று பற்றி எரியும் பிரச்சினைகளில் சிறிதும் அக்கறை கொள்ளாமல், கவலைப்படாமல், அதானி என்கிற பெரு முதலாளிக் காக பிரதமரும் அவரது எடுபிடிகளும் வால் பிடிக்கும் கொள்கைதான் இந்தியாவில் அரங்கேற்றப்படுகிறது.

அதானியின் மோசடிகள் பற்றி ஆதாரங்களோடு, ஆவணங்களோடு வெளிவந்த பிறகும் அதானி மீது எந்தவித நடவடிக்கையும் எடுக்காமல் எதிர்க்கட்சிகளைப் பழிவாங்குவதுதான் இன்றைய மோடி அரசின் முதல் வேலையாக இருக்கின்றது.

இந்தியா எங்கே சென்று கொண்டிருக்கிறது? எப்போது வீழப் போகிறது என்பதுதான் எதிர்காலத்தில் எழப்போகின்ற அச்சந்தரும் வினாக்களாகும். முந்திரா நிதி மோசடி வெளிவந்த போது நேரு கையாண்ட முறையைப் பற்றியும் இன்று அதானி மோசடி வெளி வந்த போது நரேந்திர மோடி கையாளுகிற முறையைப் பற்றியும் எந்த ஊடகங்களும் எடுத்துரைக்காமல் கொத்தடிமைகளாக வலம் வந்து கொண்டிருக்கின்றன. ஜனநாயகம் வீழ்த்தப்பட்டால் பொருளாதாரம் மேலும் சரிவுப் பாதையில் செல்லும் என்பது பல நாடுகளின் வரலாறு கற்பிக்கும் பாடமாகும். ●

## மேதை அம்பேத்கர் 133ஆம் பிறந்த நாள்



சாதிமுறையைப் பின் பற்றுவது மக்களின் தவறு அல்ல. சாதிமுறையை அவர்கள் உள்ளத்தில் ஊறவைத்திருக்கும் மதத்தைத்தான் இதற்குக் குறை கூறவேண்டும். இது சரியான கருத்து என்றால் நீங்கள் எதிர்த்துப் போராட வேண்டியது சாதி முறையைப் பின்பற்றும் மக்களை அல்ல; சாதியைப் போற்றுகின்ற மதத்தைக் கற்பிக்கும் சாத்திரங்களைத்தான் நீங்கள் எதிர்க்க வேண்டும்.

சாத்திரங்கள் புனிதமானவை என்ற நம்பிக்கையை ஒழிப்பதே இதற்குச் சரியான வழியாகும்.

**- பாபாசாகேப் டாக்டர் அம்பேத்கர்**

நூல் தொகுப்பு : தொகுதி 1. பக்கம் எண்.100

# கருவறைத் தீண்டாமையை உறுதிப்படுத்தும் நீதிமன்றத் தீர்ப்புகள்

- வாலாசா வல்லவன்

2021ஆம் ஆண்டு நடைபெற்ற தமிழ்நாடு சட்டமன்றத் தேர்தலில் வெற்றி பெற்று ஆட்சி அமைத்த தி.மு.க. அரசு ஆட்சி அமைத்த நூறாவது நாளில் 14.8.2021 அன்று பெரியார் ஈ.வெ.ரா. அவர்களின் கோரிக்கையான அனைத்துச் சாதியினர் அர்ச்சகர் ஆகும் செயல்பாட்டை நடைமுறைப்படுத்தியது. தமிழ் நாட்டின் முதலமைச்சர் மாண்புமிகு மு.க. ஸ்டாலின் அவர்கள் கோயில் பணியாளர்கள் 58 பேருக்கு பணி ஆணை வழங்கினார். அதில் தமிழ்நாட்டு அரசின் ஆகமப் பள்ளிகளில் பயின்று தகுதி படைத்தவர்கள் இருபத்து நான்கு பேர்கள் ஆவர்.

தமிழ்நாட்டின் முதலமைச்சரால் பணியமர்த்தம் செய்யப்பட்டவர்களில் மூவர் திருச்சி மாவட்டம், திருவரங்கம் வட்டம், குமார வயலூர் சுப்பிரமணியர் திருக்கோயிலில் பணியில் சேர்ந்தனர். மூவரில் கே. கைலாசு என்பவர் பார்ப்பனர். எஸ்.செயபாலன், எஸ்.பிரபு இருவரும் பார்ப்பனர் அல்லாதவர்கள். இந்த இருவரின் பணிநிய மனத்தை எதிர்த்த அதே கோயிலில் பணிபுரியும் அர்ச்சகரின் உறவினர்கள் கார்த்திக், பரமேசுவரன் இருவரும் அர்ச்சகர் பணிக்கான நேர்காணலில் தோல்வியுற்றவர்கள். அது மட்டுமல்ல, அவர்கள் ஆகமப் பயிற்சி பெறாதவர்கள். ஆதி சைவர்கள் என்ற பிறப்பின் அடிப்படையில் தங்களுக்குத் தான் அக்கோயிலில் பூசை செய்ய உரிமை உண்டு என்று சென்னை உயர் நீதிமன்றத்தின் மதுரைக் கிளையில் அவ்விருவரும் வழக்குத் தொடுத்தனர்.

‘‘குமார வயலூர் சுப்பிரமணியர் கோயில் காமிக ஆகமத்தின் அடிப்படையில் அமைந்தது. இங்கு சிவாச்சாரியார்கள் ஆகிய நாங்கள் தான் பூசை செய்ய உரிமை உள்ளவர்கள். மற்ற பிரிவினர் இக்கோயிலின் சிலையைத் தொட்டுப் பூசை செய்தால் கடவுள் தன் சக்தியை இழந்துவிடுவார்; எனவே ‘‘அர்ச்சகர் பணி நியமன ஆணையை நீக்க வேண்டும்’’ என்று வழக் காடினர். கார்த்திக், பரமேசுவரன்.

24.2.2023 அன்று இவ்வழக்கில் தீர்ப்பு வழங்கிய சென்னை உயர்நீதிமன்றத்தின் மதுரைக் கிளையின் பார்ப்பன நீதிபதி ஜி.ஆர். சுவாமிநாதன் சுமார்த்தப் பிரிவைச் சார்ந்த நானே கோவில் கருவறைக்குள் செல்ல முடியாது. ஆகவே மற்றவர்கள் எப்படி நுழைய முடியும்? ஆகமத்தின் அடிப்படையில் ஆதி சிவாச்சாரியார் பிரிவைச் சேர்ந்தவர்கள்தான் அர்ச்சகராக இருக்க முடியும் என்றும் தமிழ்நாட்டு அரசின்-இந்து சமய அறநிலையத்துறை சார்பில் நியமிக்கப்பட்ட பார்ப்பன ரல்லாத இரு அர்ச்சகர்களையும் ஒரு மாத கலத்திற்குள் நீக்கிவிட்டு, மனுதாரர்களான பார்ப்பனர்களுக்கு அந்த அர்ச்சகர் பணியை வழங்க வேண்டும் என்று ஜி.ஆர். சாமிநாதன் தீர்ப்பளித்துள்ளார்.

மதுரை மக்கள் பாதுகாப்பு மையத்தின் சார்பில் வழக்குரைஞர் வாஞ்சிநாதன் பார்ப்பனரல்லாத அர்ச்சகர்களுக்காக வாதாடினார். ஆனால் அவருடைய வாதத்தை நீதிபதி ஏற்றுக்கொள்ளவில்லை.

தமிழ்நாட்டைப் பொறுத்த வரையில் அனைத்து சாதியினரும் அர்ச்சகராக வேண்டும் என்ற போராட்டம் அய்ம்பதாண்டு கால வரலாறு உடையது.

அனைத்துச் சாதியினரும் அர்ச்சகர் ஆகவேண்டும் என்பதற்காக தந்தை பெரியார் 1969-இல் கருவறை நுழைவுப் போராட்டத்தை அறிவித்தார்.



“இந்துக்கள் என்கிற சமுதாயத்தில் பார்ப்பனர் அல்லாத மக்களாகிய நாம் எல்லோரும் “சூத்திரர்கள்”, “கீழ்ப் பிறவியாளர்” என்று சட்டம், சாத்திரம் முதலிய வற்றில் குறிப்பிடப்பட்டிருப்பதோடு, “கோவில்கள் முதலிய வற்றின் மூலஸ்தானம், கர்ப்பகிரகம் என்பவற்றில் பிரவேசிக்கக் கூடாதவர்கள்” என்று இழிவுபடுத்தப் பட்டிருக்கிறோம்...

ஆகவே தமிழ்நாட்டில் தமிழ்நாட்டுப் பார்ப்பனர் அல்லாத மக்களாகிய நம்மை இழிவுபடுத்தவும், கீழ்மைப்படுத்தவும் சட்டத்தின் மூலம் செய்து கொண்டி ருக்கிற ஏற்பாட்டை நாம் உடைத்தெறிய வேண்டியது நம் ஜீவிதக் கடமையாக இருக்கிறது” என்று எழுதினார் (விடுதலை 13.10.1969).

“தமிழர்களின் பிறவி இழிவு நீக்கக் கிளர்ச்சிக்கு அதாவது, கோயில்களில், “சூத்திரர் செல்லக்கூடாத இடம்”, “கர்ப்பக்கிரகம்”, “மூலஸ்தானம்” என்று பார்ப்பனர் அல்லாத இந்து மக்களுக்குத் தடுக்கப்பட்டிருக்கும் இடத்திற்குள் செல்லும் கிளர்ச்சியில் கலந்து கொள்ள இஷ்டமுள்ள ஆண், பெண் ஆகியோர் தயவுசெய்து உடனே தங்கள் பெயரைக் கையொப்பத்துடன் எனக்கு அனுப்பிக் கொடுக்க வேண்டுகிறேன்” (விடுதலை 10.10.1969).

16.11.1969-இல் திருச்சியில் நடைபெற்ற தி.க. மத்தியக் குழுக் கூட்டத்தில் 26.1.1970 அன்று கருவறை நுழைவுப் போராட்டம் நடத்துவது என்று முடிவு செய்யப்பட்டது.

அப்போதைய முதலமைச்சர் கலைஞர் அவர்கள் 17.1.1970 அன்று “அனைத்துச் சாதியினரையும் அர்ச்சகர்களாக்கிட இந்த அரசு முயற்சி செய்யும். எனவே பெரியார் அவர்கள் போராட்டம் நடத்த வேண்டாம்” என்று அறிக்கை வெளியிட்டார்.

தமிழ்நாடு முதலமைச்சர் கலைஞரின் வேண்டுகோளை ஏற்று, பெரியார் 19.1.1970 அன்று கருவறை நுழைவுப் போராட்டக் கிளர்ச்சியை ஒத்தி வைத்தார்.

தமிழ்நாட்டு அரசின் சட்டமன்றத்தில் 30.11.1970 அன்று அனைத்துச் சாதியினரும் அர்ச்சகர் ஆக ஏற்ற வகையில் சட்ட முன்வடிவு முன்மொழியப்பட்டு, 2.12.1970 அன்று ஒருமனதாக நிறைவேற்றப்பட்டது. சட்டமன்றத் தீர்மானத்தையொட்டி 1971-ஆம் ஆண்டில் தமிழ்நாட்டு அரசு அனைத்துச் சாதியினரும் அர்ச்சகராக வருவதற்கு வழிவகை செய்யும் சட்டத் திருத்தத்தைக் கொண்டு வந்தது.

இந்தச் சட்டத் திருத்தத்தை எதிர்த்து சேசம்மாள் உள்ளிட்ட 12 பேர் உச்சநீதிமன்றத்தில் வழக்குத் தொடுத்தனர்.

அப்போதைய தலைமை நீதிபதியாக இருந்த எம்.எஸ்.சிக்ரி தலைமையில் அய்ந்து நீதிபதிகள் அடங்கிய அமர்வு 14.3.1972 அன்று தீர்ப்பளித்தது.

அந்தத் தீர்ப்பில் “பரம்பரை அர்ச்சகர் முறையை ஒழிக்கும் தமிழக அரசின் சட்டத்தை வரவேற்ற போதிலும், ஆகம விதிகளை மீறக்கூடாது; அப்படி மீறுவது இந்திய அரசியல் சட்டம் 25(1)-இல் அளிக்கப் பட்டுள்ள மத உரிமைகளுக்கு எதிரானது என்று கூறப்பட்டது.

உச்சநீதிமன்றத்தின் தீர்ப்பை பெரியார் வன்மை யாகக் கண்டித்தார். உச்சநீதிமன்றத்தின் தீர்ப்பு “ஆபரேஷன் வெற்றி; நோயாளி செத்தார்” என்று விடுதலையில் 15, 16.3.1972-இல் ஆசிரியர் கி.வீரமணி அந்தத் தீர்ப்பை விமர்சனம் செய்து தலையங்கம் எழுதி இருந்தார்.

தமிழ்நாட்டைச் சார்ந்த எஸ்.இராசேந்திர பாபு, துரைசாமி ராசு இரண்டு நீதிபதிகள் உச்சநீதிமன்ற அமர்வு இந்திய அரசியல் சட்டம் நடைமுறைக்கு வந்துவிட்ட பிறகு சாதியைக் காரணம் காட்டி அவர்கள் பணிநியமனத்தை எதிர்ப்பது தவறானது. அவர்கள் பயிற்சி பெற்று, தீட்சை பெற்று உள்ளனர். அவர்கள் பணிநியமனம் செல்லும் என்று 3.10.2002 அன்று ஆதித்தன் வழக்கில் தீர்ப்பு கூறியது.

இதன் அடிப்படையில் கேரளாவில் சிவன் கோயிலில் ஆதி திராவிடர் அர்ச்சகராக நியமிக்கப்பட்டனர்.

1979இல் அ.தி.மு.க. அரசு நீதிபதி மகராசன் தலைமையில் குழுவை அமைத்தது. அதன் அறிக்கை 1982இல் வெளியிடப்பட்டது. பயிற்சி பெற்ற பார்ப்பனர் அல்லாதார் அர்ச்சகர் ஆகலாம் என அக்குழு பரிந்துரைச் செய்தது. ஆகமங்கள் எவ்வாறெல்லாம் மீறப்பட்டுள்ளன என்ற செய்தியையும் கள ஆய்வில் கண்டு வெளிப்படுத்தியது.

2006ஆம் ஆண்டில் தி.மு.க. அரசு நீதிபதி ஏ.கே.இராசன் தலைமையில் குழு அமைத்து, அனைத்துச் சாதியி னரும் அர்ச்சகராக்கும் சட்டத்தை 29.8.2006-இல் மீண்டும் இயற்றியது. இதை எதிர்த்து ஆதி சிவாச்சாரி யார்கள் உச்சநீதிமன்றத்தில் வழக்குத் தொடுத்தனர்.

இதில் தீர்ப்பளித்த இரஞ்சன் கோகாய், என்.வி. ரமணா அமர்வு 1972-இல் சேசம்மாள் தீர்ப்பில் வழங் கப்பட்டுள்ள தீர்ப்பைச் சுட்டிக்காட்டி ஆகம விதிப்படியே அர்ச்சகர்கள் நியமிக்கப்பட வேண்டும் என்று தீர்ப்பளித் தனர். மேலும் இந்த அரசின் சட்டத்தால் பாதிக்கப்படும் அர்ச்சகர்கள் கீழ் நீதிமன்றத்தை அணுகி தீர்வு காணலாம் என்று கூறினர்.

ஆதி சிவாச்சாரியார்களின் மனுவைத் தள்ளுபடி செய்த போதிலும், ஆகம விதி கடைப்பிடிக்க வேண்டும் என்பதை வலியுறுத்தினர்.

2021-இல் மு.க. ஸ்டாலின் தலைமையிலான தி.மு.க. அரசு பயிற்சி பெற்ற அனைத்துச் சாதியினரையும் அர்ச்சகர்களாக நியமித்தது. இதை எதிர்த்து ஆதி சிவாச்சாரியார்கள் சங்கத்தினர் மற்றும் சிலர் சென்னை உயர்நீதிமன்றத்தில் வழக்குத் தொடுத்தனர்.

இந்த வழக்கை விசாரணைக்கு ஏற்றுக்கொண்டு 22.8.2022 அன்று தலைமை நீதிபதி முனுசுவரநாத் பண்டாரி, நீதிபதி என். மாலா அமர்வு ஆகமப்படி அமைந்த கோவில்களில் அந்தந்த ஆகமத்தில் கூறப் பட்டுள்ள பிரிவினரைத்தான் அர்ச்சகர்களாக நியமிக்க வேண்டும் என்றும் எந்தெந்த கோவில்கள், எந்தெந்த ஆகமத்தின் அடிப்படையில் செயல்பட்டு வருகின்றன என்பதைக் கண்டறிய அய்வர் குழுவை அமைக்க வேண்டும் என்றும் தீர்ப்பளித்தனர். மேலும் சென்னை உயர்நீதிமன்றத்தின் ஓய்வுபெற்ற நீதிபதி எம்.சொக்க லிங்கம் அவர்கள் தலைமையில் சென்னை பல்கலைக் கழக சமற்கிருதத் துறைத் தலைவர் என்.கோபால சாமி அவர்களையும் அக்குழுவில் நியமனம் செய்தனர். அந்தத் துறைச் சார்ந்த வல்லுநர் ஒருவரையும் மற்ற இருவரையும் நியமனம் செய்து, தமிழ்நாட்டில் எந்தெந்த கோவில்கள் ஆகம அடிப்படையில் அமைந்தவை என்பதைக் கண்டறிய வேண்டும் என்றும் கூறினர்.

இந்தத் தீர்ப்பு தமிழ்நாட்டு அரசின் முயற்சிக்கு ஒரு பின்னடைவாகும். அரசு வழக்குரைகள், நீதிபதி மகராசன் குழு அறிக்கை மற்றும் நீதிபதி ஏ.கே. இராசன் குழு அறிக்கையைச் சுட்டிக்காட்டி சிறப்பாக வாதிடவில்லை என்பது வருத்தத்திற்குரியதாகும்.

தமிழ்நாடு அரசு சத்தியவேல் முருகனார் அவர் களை இக்குழுவில் சேர்த்தது. அவர் தமிழ் வழியில் குட முழுக்குகளை ஏராளம் நடத்தியவர். ஆகம அறிஞர், ஆகமப் பள்ளியில் ஆசிரியராகப் பணியாற்றியவர். ஆனால் சிவாச்சாரியார் சங்கம் அவர் ஆகமத்துக்கு எதிரானவர். அவரை இக்குழுவில் இருந்து நீக்கவேண்டும் என்று கூறி சென்னை உயர்நீதிமன்றத்தில் வழக்குத் தொடுத்தது. 8.2.2023-இல் நியமிக்கப்பட்ட அவரை ஒரே வாரத்தில் 15.2.2023 அன்று சென்னை உயர் நீதிமன்றத்தின் பொறுப்பு தலைமை நீதிபதி டி.ராசா, நீதிபதி பரத சக்ரவர்த்தி அமர்வு சத்தியவேல் முருகனார் நியமனத்தை நீக்கி உத்தரவிட்டது.

மேலும் ஆகமங்கள் குறித்து அவர் தயாரித்து அளித்த அய்ம்பது கேள்விகளையும் தடை செய்து உத்தரவிட்டது.

இவ்வாறு தமிழ்நாட்டு அரசின் செயல்பாடுகளுக்கு எதிராக நீதிமன்றங்கள் தொடர்ந்து செயல்பட்டு வருகின்றன. அரசமைப்புச் சட்டத்தில் இடம்பெற்றுள்ள 25(1), 26 பிரிவுகள் பழக்கம், வழக்கம் (custom and usage) என்பதும் தனித்த பிரிவினர் (Denomination) என்பதையும் பார்ப்பனர்கள் பயன்படுத்திக் கொள்கின்றனர்.

இந்த ஆகமம் என்பது பல கோயில்களில் மீறப் பட்டுள்ளதை நீதிபதி இராச மன்னார் குழு அறிக்கையிலும், நீதிபதி ஏ.கே.இராசன் குழு அறிக்கையிலும் வெளியிட்டுள்ளனர்.

ஆகமப்படி சுமார்த்தப் பார்ப்பனர்கள் எந்தக் கோயில்களிலும் அர்ச்சகர்களாக இருக்கக்கூடாது. பல கோயில்களில் அவர்கள் அர்ச்சகர்களாக இருப்பதை இக்குழுவினர் ஆய்வில் கண்டறிந்துள்ளனர். எந்த ஆகமத்திலும் குறிப்பிட்ட இந்தச் சாதியினர்தான் அர்ச்ச கர்களாக இருக்க வேண்டும் என்று எழுதப்படவில்லை என்பதையும் இக்குழுவினர் தெரிவித்துள்ளனர்.

தமிழ்நாடு அரசினர் இத்தீர்ப்பை எதிர்த்து மேல் முறையீடு செய்ய வேண்டும். சிறந்த வழக்குரை ஞர்களை அமர்த்தி வழக்காடி அனைத்துச் சாதியினர் அர்ச்சகர் சட்டத்திற்குப் பின்னடைவு ஏற்படாமல் செயல்பட வேண்டும்.

ஆகமம் என்பது தமிழ்நாட்டைத் தவிர வேறு எந்த மாநிலத்திலும் இல்லை. பார்ப்பனர்கள் வழிவழி யாக (பரம்பரையாக) அர்ச்சகர் தொழிலைக் கைப்பற்றிக் கொள்வதற்காக ஏற்படுத்தப்பட்டதாகும். மநுநீதியை எதிர்ப்பதுபோல் ஆகமத்தையும் எதிர்த்துப் போராட வேண்டும்.

மக்கள் திறள் போராட்டங்கள்தான் நீதிமன்றத் தீர்ப்புகளையும் மாற்றியமைக்கப் பயன்படும். ●


**2023 மே 1 அன்று வெளிவர உள்ளது**




★

ஆசிரியர் :

**வே.ஆனைமுத்து**

★

பக்கங்கள்

80

★

விலை

ரூ.70.00

★

**வைக்கம் கிளர்ச்சி பற்றிய**
**அரிய தகவல்கள் பல அடங்கிய நூல்**

வெளியீடு

**மார்க்சியப் பெரியாரியப் பொதுவுடைமைக் கட்சி**

2/12, சி.என்.கே.சந்து, சேப்பாக்கம்,
சென்னை – 600 005. பேச : 866109047

# மாதவிடாய் விடுப்பு

- மரு. சா. மா. அன்புமணி

கல்வி நிறுவனங்கள் மற்றும் பணிபுரியும் இடங்களில் பெண்களுக்கு மாதவிலக்கு நாட்களில் விடுப்பு அளிக்க வேண்டும் என்ற கோரிக்கை பல நாடுகளில் பல காலகட்டங்களில் எழுப்பப்பட்டுள்ளது. அண்மையில் இந்திய உச்சநீதிமன்றத்தில் இதுகுறித்த ஒரு வழக்கை, சைலேந்திர மணி திரிபாதி என்பவர் தொடுத்துள்ளார். பெண்களுக்கு மாதவிலக்கு நாட்களில் அவர்களின் உடல் நலனைப் பாதுகாக்கும் பொருட்டு அவர்களுக்குத் தேவையான ஓய்வை அளிக்க வேண்டும் என்ற நோக்கிலும் இதுதொடர்பாக பெண்ணிய அமைப்புகள் நீண்டகாலமாகத் தொடர்ந்து குரல் எழுப்பி வருகிறார்கள். இவ்வழக்கு தலைமை நீதிபதி சந்திர சூட் தலைமையிலான மூன்று நீதிபதிகள் அடங்கிய அமர்வு முன்பு பிப்ரவரி 24, 2023 அன்று விசாரணைக்கு வந்தது. மாதவிலக்கு நாட்களில் விடுப்பு அளிக்க உத்தரவிட்டால், பெண்களை வேலைக்கு எடுப்பதில் நிறுவனங்கள் தயக்கம் காட்டலாம் என சட்டக் கல்லூரி மாணவர் ஒருவர் மனு தாக்கல் செய்துள்ளதைச் சுட்டிக்காட்டிய தலைமை நீதிபதி சந்திர சூட், இவ்விவகாரம் பல்வேறு பரிமாணங்களைக் கொண்டிருப்பதாகக் குறிப்பிட்டார்.

மனுதாரரின் வழக்கறிஞர், மாதவிலக்குச் சுழற்சி என்பது ஓர் உயிரியல் செயல்பாடு. அதற்காக, அதைக் காரணம் காட்டி பெண்களிடம் பாகுபாடு காட்டக்கூடாது என்று வாதிட்டார். இதற்குப் பதில் அளித்த நீதிபதி, நீங்கள் கூறுவதை மறுக்கவில்லை. ஆனால், இந்தச் சிக்கல் பல்வேறு பரிணாமங்களைக் கொண்டிருப்பதால், திட்டத்தைக் கொள்கை வகுப்பாளர்களிடம் விட்டு விடுவோம். முதலில் அவர்கள் இதற்கான கொள்கைகளை வகுக்கட்டும். அதன்பிறகு, நாம் இதுபற்றி பரிசீலிப்போம் என தெரிவித்தார். இதுகுறித்து ஒன்றிய அரசின் பெண்கள் மற்றும் குழந்தைகள் வளர்ச்சித் துறை முடிவெடுக்க உத்தரவு பிறப்பித்துள்ளது உச்ச நீதிமன்றம்.

### மாதவிடாய் நல சட்ட முன்வடிவு

காங்கிரசு கட்சியின் அருணாசலப்பிரதேச நாடாளுமன்ற உறுப்பினர் திரு.நினாங் எரிங் என்பவர் 2017இல் மாதவிடாய் விடுப்பு தொடர்பான ஒரு சட்ட முன்வடிவு கொண்டு வந்தார். அதில் நிறுவனங்கள் தங்கள் பெண் ஊழியர்களுக்கு மாதத்தில் இரண்டு நாட்கள் மாதவிடாய் விடுப்பு அளிக்க வேண்டும் என்று கூறப்பட்டுள்ளது. ஆனால் அது சட்டமாகவில்லை. மீண்டும் 2022ஆம் ஆண்டு நிதி நிலை அறிக்கை கூட்டத்தொடரின் முதல் நாளிலேயே இந்த சட்ட முன்வடிவு அறிமுகப்படுத்தப்பட்டது. ஆனால், அலுவல் ஆய்வுக் குழு அசுத்தமான தலைப்பு (Unclean Topic) என்று விவாதத்திற்கு எடுத்துக் கொள்ளாமல் ஒதுக்கி விட்டது. வலதுசாரி ஆண் மைய கருத்தியலாளர்கள் நிரம்பி வழியும் இந்திய நாடாளுமன்றத்தின் இப்போக்கு வியப்பானதல்ல.



இந்திய ஒன்றியத்தில் இரண்டு மாநிலங்களில் கேரளா மற்றும் பீகார் மாநிலங்களில் மட்டுமே மாதவிலக்கு விடுமுறை அளிக்கப்படுகிறது. மாநில அரசு, ஒன்றிய அரசு அலுவலகங்கள், பொதுத்துறை நிறுவனங்கள், 99.9 விழுக்காடுக்கு மேலான தனியார் நிறுவனங்கள் இந்நாள் வரை தங்கள் நிறுவனங்களில் பணியாற்றும் பெண்களுக்கு மாதவிடாய் விடுப்பு அளிக்கவில்லை.

உலக அளவில் இங்கிலாந்து, வேல்சு, ஸ்பெயின், செர்மனி, சப்பான், தைவான், தென்கொரியா, இந்தோனேசியா, சாம்பியா ஆகிய நாடுகளில் மாதவிடாய் விடுப்பு வழங்கப்படுகிறது.

இந்தியாவில் பெண்களுக்கு மாதவிடாய் விடுப்பு அளித்த முதல் மாநில அரசு என்ற பெருமை பீகார் மாநிலத்திற்குச் சேரும். பல்வேறு மனித வள, சமூகக் குறியீடுகளில் பின்தங்கி இருக்கும் பீகார் மாநிலம், இந்த விடயத்தில் நாட்டுக்கே முன்மாதிரியாக உள்ளது. 1991-இல் பீகார் மாநில அரசு ஊழியர்கள் ஊதிய உயர்வு கோரி போராட்டம் நடத்திய போது, பல கோரிக்கைகளில் மாதவிடாய் விடுப்புக் கோரிக்கையும் ஒன்றாக இருந்தது. சிறு தீப்பொறியாக எழுந்த இக்கோரிக்கை, ஆசிரியர்கள், பல்கலைக்கழக பேராசிரியர்கள், அரசு ஊழியர்கள், மருத்துவர்கள், செவிலியர்கள், கடைநிலை ஊழியர்கள் என்று அனைத்துப் பெண் ஊழியர்களின்

கோரிக்கையாக பெரு நெருப்பாகப் பற்றிக் கொண்டது. பிறகு பேச்சுவார்த்தையின் போது அன்றைய பீகார் முதல்வர் மாண்புமிகு லாலு பிரசாத், மூன்று நாட்கள் விடுப்பு எல்லாம் தர முடியாது; அதிகபட்சம் இரண்டு நாட்கள் விடுப்பு தர அரசு முடிவு செய்துள்ளது என்று அறிவித்தார். சமூக நீதிக் காவலர் லாலு பிரசாத் அவர் களுடைய முக்கிய சாதனைகளில் இது ஒன்றாகும். பீகார் அரசு ஊழியர்களின் வரலாற்று வெற்றி ஆகும். இதுகுறித்து இந்திய பொது சமூகம் இந்நாள் வரை அறியாமலே இருக்கிறது. பீகாருக்கு அடுத்து கேரளா மாதவிடாய் விடுப்பு வழங்கி வருகிறது. இந்தியாவில் கார்ப்பரேட் பெரு நிறுவனங்கள் இதுகுறித்து சிந்தித்த தாகத் தெரியவில்லை.

ஆனால் 9 தனியார் நிறுவனங்கள் தங்கள் பெண் ஊழியர்களுக்கு மாதவிடாய் விடுப்பு வழங்கியுள்ளன. அவை சொமோட்டோ, சுவிக்கி, மாத்ருபூமி, மாக்ஸ்டெர், கோசூப், ஃப்ளைமைபிஸ், இண்டஸ்ட்ரி ஏஆர்சி, பைஜூஸ் உள்ளிட்ட 9 நிறுவனங்கள் ஆகும். இந்த நிறுவனங்கள் மாதம் ஒரு நாள் ஊதியத்துடன் கூடிய மாதவிடாய் விடுப்பு வழங்குகின்றன. மேலும் வீட்டில் இருந்தபடியே வசதிப்பட்ட நேரத்தில் வேலை செய்து கொள்ளலாம் என்றும் அறிவித்துள்ளனர். மேலும் இரண்டு அரை நாள் விடுப்பாகவும் துய்த்துக் கொள்ளலாம் என்றும் தெரிவித்துள்ளார்கள். இது ஒரு சிறிய முதல் அடிதான் என்றாலும் இந்த நடவடிக்கை வரவேற்கத்தக்கதே.

### மாதவிடாய்

முதல் மாதவிடாய் என்பது பெண்கள் பருவம் எய்துவதை (menarche) குறிக்கும். பொதுவாக எட்டு வயது முதல் 18 வயதுக்குள் பெண்கள் பூப்பெய்து கிறார்கள். தமிழ் சமூகத்தில் இதனை பெண் பெரியவள் ஆகிவிட்டாள், வயதுக்கு வந்து விட்டாள் என்று பேச்சு வழக்கில் கூறுகிறார்கள். அன்று முதல் ஒவ்வொரு மாதமும் உதிரப்போக்கு இயற்கை சுழற்சியாக திங்கள் தோறும் 3-5 நாட்கள் நடைபெறுகிறது. சுமார் 45 வயதை ஒட்டி மாதவிடாய் நின்று விடுகிறது. இது மெனோபாஸ் என்று ஆங்கிலத்தில் அழைக்கப்படுகிறது. இவ்வுயிரியல் செயல்முறை கருவகம், கருப்பை, இயக்குநீர்கள் செயல்பாடுகளின் மூலம் நடக்கின்றது. ‘‘உயிரினப் பெருக்கத்திற்கு இயற்கை பெண்களுக்கு ஏற்படுத்தி உள்ள இந்த ஏற்பாடு பெருமளவு பெண் களுக்கு மிகப்பெரிய துன்பங்களை மாதந்தோறும் ஏற்படுத்துகிறது. நாடு, இனம், நிறம் வயது, காலம் வேறுபாடுகள் இன்றி அனைத்துப் பெண்களும் காலம் காலமாக அவதிப்பட்டு வருகின்றனர். இந்தச் சுழற்சி யின்போது பெண்களுக்கு உடல் மற்றும் மனதளவில் பல்வேறு மாற்றங்கள் விரைவாக ஏற்படுகிறது.

### மாதவிடாய் கால அறிகுறிகள்

‘‘மாதவிடாய் தொடங்கும் முன்பே பலருக்கு உடல், உள்ள மாறுதல்கள் ஒவ்வொரு மாதமும் தொடங்கி விடுகிறது. இதனை மருத்துவத் துறையில் pre menstrual symptoms என்று கூறுகிறார்கள்.

அடி வயிற்றில் வலி ஏற்படுதல் மிகவும் முக்கிய மான ஒரு அறிகுறி ஆகும். மார்பகங்களில் இறுக்கம், வலி உணர்தல், இடுப்பு வலி, மூட்டு வலி, தசை வலி, உடல் வலி, சோர்வு, வயிறு உப்புசம், செரிமான கோளாறுகள், அதிகப் பசி, பசியின்மை, தலைவலி, மனச்சோர்வு, எரிச்சல், கோபம், கவனச் சிதறல் என்று ஒன்று அல்லது பல அறிகுறிகள் கூடுதலாகவோ, குறைவாகவோ ஏற்படும். சிலருக்கு தொடர்ந்து ஒவ்வொரு மாதமும் ஒரு சிலருக்கு ஒரு சில மாதங்களில் மட்டும் இவை ஏற்படும். திருமணம் ஆனவர் ஆகாதவர், குழந்தை பெற்றவர் பெறாதவர்கள், யாருக்கு வேண்டு மானாலும் எப்போது வேண்டுமானாலும் இந்தத் துன்பங்கள் ஏற்படலாம். சுமார் 28 முதல் 78 விழுக்காடு பெண்கள் இந்த துன்பங்களை அனுபவிப்பதாக ஆய்வுகள் தெரிவிக்கின்றன. இலண்டன் பல்கலைக்கழகக் கல்லூரி வெளியிட்ட ஆய்வுக் கட்டுரை ஒன்றில் மாதவிடாய் காலத்தில் வரும் வலியானது இலேசானது முதல் ஒரு மனிதனுக்கு மாரடைப்பால் ஏற்படும் நெஞ்சு வலியைப் போன்று தீவிரமான அளவு வரை இருக்கலாம் என்று குறிப்பிடப்பட்டுள்ளது. தீவிர வலியானது பாதிக்கப்பட்ட பெண்களைத் தற்கொலை முயற்சிக்குக்கூட கொண்டு சென்றுள்ளது.

மேலும் ஒரு சில பெண்களுக்கு ஏற்படும் அதிக அளவிலான குருதிப் போக்கு பெண்களுக்கு அனீமியா எனப்படும் இரத்தசோகை நோயை ஏற்படுத்துகிறது. ஆண்களை விட பெண்கள் இரத்த சோகை நோய்க்கு ஆளாவதற்குக் காரணம் அடிக்கடி பிள்ளைப் பேறு, அதிக அளவு மாதவிடாய் இரத்தப்போக்கு, சரிவிகித உணவு கிடைக்காமை ஆகியவை முக்கியப் பங்கு வகிக்கின்றன.

மாதவிலக்கு பற்றிய சமூகத்தின் பார்வை மிகவும் பிற்போக்கானதாகவே இன்று வரையில் உள்ளது. இன்றளவும் தீட்டு என்று சொல்லும் வழக்கம் உள்ளது. அதையொட்டி பெண்களை வீட்டில், சமூகத்தில், மதம், கோயில், (ஐயப்பன் கோவில் நுழைவு) திருவிழா பண்டிகை தொடர்பான நிகழ்வுகளில் ஒதுக்கி வைக்கும் போக்கு தீவிரமாகக் கடைப்பிடிக்கப்படுகிறது.

ஒதுக்கி வைப்பது சரிதான் என்றும், தாமாகவே முன்வந்து ஒதுங்கிக் கொள்ளும் அடிமைச் சிந்தனையும் பெண்களின் மூளையில் ஏற்றப்பட்டுள்ளது.

“அந்த நாட்களைப்” பற்றி வெளிப்படையாகப் பேசுவதற்குக் கூட பெண்களிடம் தயக்கம் நிலவுகிறது. மருத்துவமனையில் ஒரு மருத்துவரிடம் கூட சொல் வதற்கு, தனக்குத் தேவையான மருத்துவ உதவிகளைப் பெறுவதற்குக்கூட கூச்சப்படுகிற மனப்போக்கு நிறைய பெண்களிடம் வயது வேறுபாடு இன்றி நிலவுகிறது. சமூக வெளியிலும் கல்விப் புலத்தில் பள்ளி கல்லூரி களில் ஊடகங்களில் இது குறித்தான அச்சமற்ற, கூச்சமற்ற உரையாடல்களைப் பெண்கள், ஆண்கள் இடையே நடத்த வேண்டும்.

சில மாதங்களுக்கு முன்பு பீகாரில் யுனிசெஃப் நிறுவனம் நடத்திய கருத்தரங்கு ஒன்றில் ஒரு பள்ளி மாணவி அர்ஜோத் கவுர் பம்ரா என்ற அரசு உயர் அதிகாரியிடம், அரசு இலவச சானிடரி நாப்கின்களை தரவேண்டும் அல்லது குறைந்த செலவில் பத்து இருபது ரூபாய்க்கு வழங்க வேண்டும் என்று கேட்டார். அதற்கு அந்த அதிகாரி, அரசாங்கம் இலவசமாக எல்லாவற்றையும் தர வேண்டும் என்று ஏன் எதிர் பார்க்கிறீர்கள் என்று கேட்டபோது நாம் அனைவரும் அவருடைய பார்வை குறித்து அதிர்ச்சி அடைந்தோம். இப்படித் தான் இந்திய உயர் அதிகார வர்க்கத்தில் ஒரு சில பிரிவினரின் பார்வை உள்ளது.

அதேவேளையில் தமிழ்நாட்டில் அரசுப் பள்ளிகளில் மாணவியர்க்கு இலவச சானிடரி நாப்கின்களை வழங்கும் திட்டம் வெற்றிகரமாகச் செயல்பட்டு வருகிறது. தமிழகத்தின் அனைத்து கிராமங்களில் உள்ள வளர் இளம் பெண்கள், பிரசவித்த தாய்மார்கள் மற்றும் சிறைச்சாலைகளில் உள்ள பெண் கைதிகள் ஆகியோர் நலனுக்காக இலவசமாக மாதவிடாய் பஞ்சுகள் (Sanitary Napkins) வழங்கிட 2011 நவம்பர் மாதத்தில் அன்றைய முதல்வர் ஜெயலலிதா உத்தரவு பிறப்பித்தார். அத்திட்டம் இன்று வரையில் வெற்றிகரமாகச் செயல் பட்டு வருகிறது. இத்திட்டத்தின் கீழ் 10 வயது முதல் 19 வயது வரையிலான வளர் இளம் பெண்கள் குறித்த பதிவேடு பராமரிக்கப்படுகிறது. அதில் அவர்களின் எடை, உயரம், இரும்புச்சத்து அளவு பார்க்கப்படுகிறது. வளரிளம் பெண்களுக்கு வாரந்தோறும் ஒரு இரும்புச் சத்து போலிக் அமில மாத்திரை வழங்கப்பட்டு வருகிறது. தன் சுத்தம் பேணுதல், சுகாதார விழிப்புணர்வு வழங்கப்படுகிறது. இதன்மூலம் கருப்பைப் பாதை தொற்று ஏற்படாமல் தவிர்க்கப்படுகிறது.

இந்திய அளவில், மகப்பேறு விடுப்பு அதிக அளவு வழங்கும் மாநிலமாக தமிழ்நாடு திகழ்கிறது. மகப்பேறு விடுப்பு ஓராண்டு வழங்கப்படுகிறது. ஆனால், தமிழ்நாட்டில் மாதவிடாய் விடுப்பு வழங்க வேண்டும் என்ற குரல்கள் ஏதும் பெரிதாக எழவில்லை. பீகார், கேரளாவைப் பின்பற்றி தமிழ்நாடு அரசே முன்வந்து மாதவிடாய் விடுப்பு வழங்க வேண்டும். பணி இடங்களில் பெண்களுக்கென தனியாகக் கழிவறை யுடன் கூடிய ஓய்வறை ஏற்படுத்தித் தரவேண்டும். மாதவிடாய் காலங்களில் விடுப்பு எடுக்க/அளிக்க இயலாத சூழலில் சில மணி நேரங்கள் ஓய்வு எடுக்க அலுவலகங்களில் அனுமதி தேவை.

பெண்களுக்கான மாதவிடாய் விடுப்பு விடுமுறை அவர்கள் மீதான அனுதாபத்தால் தந்ததாக இல்லாமல் அது அவர்களின் உரிமை; நாம் அவர்களைப் புரிந்து கொண்டோம், மதிக்கிறோம் என்பதால் தரப்பட வேண்டும்.

ஒவ்வொரு பெண் பணியாளரும் மாதவிடாய் விடு முறையைப் பெறுவதற்கான உரிமையை தனியார் நிறுவனங்கள், பொது நிறுவனங்கள் உறுதிப்படுத்த வேண்டும். ஒருவரின் ஆரோக்கியத்தைக் கெடுப்பதன் மூலம் எந்த வேலையும் நிறைவேறாது! எல்லாவற்றிற் கும் மேலாக, அனைத்து வகையான பணிகளைச் செய்யும் தொழிலாளர்களாக ஆவதற்கு முன் நாம் அனைவரும் மனிதர்கள். இதுபோன்ற சின்ன சின்ன அக்கறைகளைக் காட்டி பெண்களுக்கு சமூகம் உதவ வேண்டும். இது அசாதாரணமான மாற்றங்களைக் கொண்டு வரும். ●

## சங்கராபுரத்தில் தமிழ்வழிக் கல்வி இயக்கப் பொதுக் கூட்டம்



தமிழ்வழிக் கல்வி இயக்கம் மற்றும் சங்கை தமிழ்ச் சங்கம் சார்பில் தமிழ்மீட்பு ஈகியர் நாள், தாய்மொழி நாள், உயர் அற மன்றத்தில் தமிழ், கல்வி முற்றுரிமையும் தமிழ்நாட்டுக்கே வேண்டும். தமிழ்வழியில் படித்தவர்க்கு 100 விழுக்காடு வேலை வாய்ப்பு வழங்க வலியுறுத்தி கள்ளக்குறிச்சி மாவட்டம், சங்கராபுரம் பேருந்து நிலையத் தில் ம.சுப்பராயன் தலைமையில் 18.02.2023 அன்று பொதுக்கூட்டம் நடைபெற்றது. ந.வெற்றிவேல் வரவேற்பு ரையாற்றினார்.


அ.சி. சின்னப்பா தமிழர் நோக்கவுரையாற்றினார். வழக்குரைஞர் கு.ஞா. பகவத்சிங் உயர் அறமன்றத்தில் “ஏன் வேண்டும் தமிழ்” என்ற தலைப்பில் உரையாற்றி னார். தோழர்கள் சிலம்பூர்க்கிழான், பகுத்தறிவு இலக்கிய மன்றம் பெ.பாலசண்முகம், தி.க., அ.தலித்சந்திரன், வி.சி.க., அ. முகமத்ரபி, சு.டி.பி.ஐ. ஆ. இராமலிங்கம், மக்கள் அதிகாரம், க. மதியழகன், தி.வி.க., செ. பிரபு, த.பெ.தி.க., நாகராசன். தி.வி.க. உள்ளிட்ட தோழர்கள் உரையாற்றினர். வாலாசா வல்லவன் சிறப்புரையாற்றினார்.

## அகவை 90 – பெருஞ்சித்திரனார்

# அநீதி கொய்யவும் நீதியை நெய்யவும் வாழ்ந்த தன்மானப் புலவர்

- **இரணியன்,** கோவை

ஏறத்தாழ இரண்டாயிரத்து ஐநூறு ஆண்டுகளாக இந்தியாவில் வேதிய சனாதன அதர்மத்துக்கு எதிரான சிந்தனைப் போர் நடந்து கொண்டேயிருக்கிறது. இந்த மாபெரும் சிந்தனைப் போரின் உச்சமாய் முகிழ்த்தது திராவிட இயக்கம். இதுவரை தோன்றிய சனாதன எதிர்ப்பாளர்களின் சிந்தனைகள் அனைத்தையும் உள்வாங்கிக் கொண்டு இது மேலெழுந்தது. பெரியாரும் புரட்சிப் பாவேந்தரும் அண்ணாவும் மட்டுமல்லர்; தமிழறிஞர்கள் பலரும். இந்தியத் துணைக் கண்டத்தின் சமூகவியல் அறிஞர்கள் பலரும் இதன் வேர்களும் விழுதுகளுமாய் விளங்கினர். இந்த இயக்கமாகிய ஈட்டியின் கூர்முனையாக முகிழ்த்ததுதான் “தென்மொழி இயக்கம்”.



தென்மொழி என்பது ஓரிதழ்தான். ஆனால், அது ஆற்றல் மிக்க ஒரு பேரியக்கமாகத்தான் உலகத் தமிழர் உள்ளங்களில் கிளர்ந்தெழுந்தது.

திராவிட இயக்கச் சிந்தனைகளில் ஊறித் திளைத்த இளைஞர்களே தென்மொழியை நெஞ்சிலும் தோளிலும் தாங்கினர். அவர்களின் உள்ளங்களில் அது நெருப்பாய்க் கிளர்ந்தெழுந்து, தென்மொழியைப் பரப்புவதை இந்த இளைஞர்கள் தம் உயிர்ப் பணியாய்க் கொண்டனர்.

ஏன் இது நிகழ்ந்தது?

வடமொழி முதலான எந்த மொழியின் உதவியுமின்றித் தனித்தியங்கவல்ல ஆற்றலுடையது தமிழ்மொழி என்பதை முனைவர் கால்டுவெல் ஆராய்ந்துரைத்தார். அவருடைய ஆய்வின் முடிவை முழுமையான மெய் என நிலைநாட்டியது தென்மொழி. தமிழைச் சிதைத்து. அது கலவை மொழிதான் எனக் காட்ட முயன்றனர் ஆரியப் பார்ப்பனரும் வடவரும். அவர்களை ஏறி மிதித்துத் தமிழ் சொல்வளமும் தனிப் பேராற்றலும் உடைய மொழி என்பதைப் பறைசாற்றியது தென்மொழி.

தமிழைச் சிதைப்பதையும், மனிதகுல நலத்தைப் போற்றக்கூடிய தமிழ்ப் பண்பாட்டைச் சிதைப்பதையும், தமிழரை ஆரிய மடமையில் ஆழ்த்துவதையும் தமிழ் இலக்கண, இலக்கியங்களுக்கு வடமொழி மூலம் எனக் காட்டுவதையும் தம் தலையாய கடமைகளாகக் கொண்டிருந்தோரின் பற்களை உடைத்து அவர்களை ஊரம்பலத்தில் உரித்து நிறுத்தியது தென்மொழி.

தமிழ்மொழி, தமிழினம், தமிழ்நாடு என்னும் முந்நிலை உரிமைக்கும் நலத்திற்கும் உயர்விற்கும் இடையறாது தொண்டாற்றியது தென்மொழி.

தமிழ்மொழிக்கும் இனத்திற்கும் நிலத்திற்கும் உண்மையான தொண்டாற்றும் அறிஞர்களையும் தலைவர்களையும் தமிழினத்திற்கு அடையாளம் காட்டியது தென்மொழி. பொய்யர்களின் முகமூடிகளைப் போட்டு உடைத்தது தென்மொழி.

தமிழின் நலத்திற்கான ஆக்க வழித் திட்டங்களை அறிமுகம் செய்தது தென்மொழி. நல்ல தமிழ்ப் படைப்பாளிகளை அடையாளம் கண்டு ஊக்கமளித்தது தென்மொழி.

தமிழ்மொழியின் விடுதலை மண் விடுதலை மூலமே மெய்யாகும் என்றும், அதற்காக மாபெரும் மாநாடுகளைத் திருச்சி, மதுரை, சென்னை நகரங்களில் நடத்திக் காட்டியது தென்மொழி.

தென்மொழியின் அட்டைப்பாடல் ஒவ்வொன்றும் படிப்போரின் நாடி நரம்புகளை முறுக்கேற்றுவதாக இருக்கும்.

“ஊழி பெருகி உலகம் புரண்டாலும்
உளம்திருந்த மாட்டீர்கள் ஓ! ஓ! ஓ! பார்ப்பனரே!”

போன்ற வரிகள் குதிரை வீரனின் சாட்டை அடிகள் போல் செவிகளை உசுப்பும்.

அட்டையைத் திறந்தால், தென்மொழி ஒரு மா மத வேழம் என்பதைக் காட்டும் படம்! தென்மொழியின் கொள்கை முழக்கப் பாடல் :

**“கெஞ்சுவ தில்லை பிறர்பால்! அவர்செய் கேட்டினுக்கும்
அஞ்சுவ தில்லை! மொழியையும் நாட்டையும் ஆளாமல்
துஞ்சுவ தில்லை! எனவே தமிழர் தோலெழுந்தால்
எஞ்சுவ தில்லை உலகில் எவரும் எதிர்நின்றே”**

தென்மொழியின் கொள்கைப் பேரறிவிப்பாக இப்பாடல் வரிகள் முழங்கி நிற்கும்.

அதனை அடுத்து, தென்மொழியின் இலக்கைச் சொல்லும் வரிகள் : "இந்தியா ஒன்றாக இருக்கும் வரை இந்து மதம் இருக்கும்....." எதிரிகளைக் குலை நடுங்கச் செய்யும் இந்த வரிகளை அடுத்து, குகையிலிருந்து பாய்ந்து வரும் அரிமாவின் முழக்கமாய் ஆசிரிய உரை திறவாக் கண்களையும் திறந்துவிடும் சொற்கள். தென்மொழியின் தனிச்சிறப்பே ஆசிரிய உரைகள்தாம்.

ஏறத்தாழ ஐம்பது ஆண்டுக்காலம் தமிழ் நிலத்தில் தென்மொழி என்னும் இதழாக உலவிய அரிமா பாவலரேறு பெருஞ்சித்திரனார்.

"ஈராயிரம் ஆண்டு வரலாற்றில் தமிழ் இனத்திற்கு வாய்த்த உண்மைத் தலைவர்கள் இருவர். ஒருவர் திருவள்ளுவர்; மற்றொருவர் பெரியார்."

"தமிழுக்குத் தலைவர்கள் என்றால் மறைமலை யடிகளும் மொழிஞாயிறு தேவநேயப் பாவாணரும்தாம்!"

"தமிழ் உரிமைக்கு முழங்கிய பாவலர் என்றால், அவர் புரட்சிப் பாவேந்தர் பாரதிதாசனே!"

என்று வரையறை செய்தவர் பெருஞ்சித்திரனார்.

தமிழ்மொழியின் முழு வலிமையையும் காட்டும் இதழாக அவர் தென்மொழியை நடத்தினார்.

அவருடைய மொழித்திறம், மொழி ஆளுமை கம்பரோடும், இளங்கோவோடும், சங்கப் புலவர்க ளோடும் ஒப்பிடக் கூடியது. பெருஞ்சித்திரனாரின் பாடல்களாயினும் உரைநடையாயினும் தினவெடுத்த சொற்களை ஏந்திவரும் இரணியன் வதைப்படலத்தில் இரணியன் கூற்றாகக் கம்பர் பாடுவார்.

"ஆரடா சிரித்தாய்? சொன்ன
அரிகொலோ? அஞ்சிப் புக்க
நீரடா போதா தென்று
நெடுந்தறி நேடி னாயோ?
போரடா பொருதி யாயின்
புறப்படு புறப்ப டென்றான்"

கம்பரின் இந்த வீச்சைப் பாவலரேறு அவர்களிடம் தான் காணமுடியும்.

மதுரையில் தமிழக விடுதலை மாநாடு! விடுதலை முழக்கமிட்டபடி ஊர்வலம் சென்று கொண்டிருக்கிறது. அதனைக் காட்சிப்படுத்துகிறார் பாவலரேறு.

"சென்றுகொண் டிருந்தது விடுதலை மாப்படை!
செவ்வரி படர்ந்தது நெடுங்கூர் விழிகளில்!
தின்றுகொண் டிருந்தனர் பகையினை வாயினால்!
தினவுநீர் ஊறித் தெறித்தது பேச்சிலே!
என்றுகண் டிருக்கும்அப் பாண்டியன் மாநகர்?
எதிர்த்தவர் யாவரும் யாவரும் வியந்தனர்!
நின்றுகொண் டிருந்தனர் பகைவர்கள் விதிர்ப்புற
நெட்டுயிர்ப் பெய்தினர் நீடுற நடுங்கியே!"

உணர்ச்சி கொப்பளிக்க விடுதலை மாநாட்டு ஊர்வலத்தைக் காட்சிப்படுத்தும் பாவலரின் தமிழ், கம்பனை நினைவூட்டுகிறது.

"என்றெழுவும் தமிழர்படை?
என்றெமது தோள்புடைக்கும்?
இளைஞர்களும் பெண்டிர்களும் எழுந்துவந்தே
ஒன்றிணைவ தெந்தநன்னாள்?
உயர்நிலத்தை மீட்பதெந்நாள்?"

என்று ஏங்கித் தவித்தவர் பெருஞ்சித்திரனார்.

எழுத்தோடு அவர் நின்றுவிட்டவர் அல்லர். தம் இலக்கை எட்டுவதற்காக இயக்கங்களை உருவாக்கியவர் அவர். மொழிக்காக உலகத் தமிழ்க் கழகம், இன மீட்சிப் போருக்காக உலகத் தமிழின முன்னேற்றக் கழகம், அரசியல் மீட்சிக்காகப் பல்வேறு இயக்கங் களுடன் ஒத்துழைப்பு என இயங்கிக் கொண்டே இருந்தவர்.

தமிழீழ விடுதலைப் போர் முனைப்புற்ற வேளையில், போராளிகளுக்கும் இயக்கங்களுக்கும் மாபெரும் உந்து விசையாகத் திகழ்ந்தவர் பாவலரேறு. தமிழகத்திலும் ஈழத்திலும் தமிழர் வாழும் அயல் நிலங்களிலும் தமிழருக்குப் போர்க் குணத்தை ஊட்டியவை பாவலரேறு அவர்களின் கட்டுரைகளும் பாடல்களும் ஆகும். மாதத்தின் முதற்கிழமையில் தென்மொழி வந்துவிட்டால், அடுத்த தென்மொழி இதழ் எப்போது வரும் வரும் என்று தவித்துக் கொண்டிருந்தனர் தென்மொழி நேயர்கள்.

சத்தியமங்கலம் நாகராசன், தோழர் வே.ஆனைமுத்து, எஸ்.வி. இராசதுரை, சாலை. இளந்திரையன், புலவர் கலியபெருமாள் முதலான அரசியல் அறிஞர்களுடன் இணக்கமாகச் செயல்பட்டவர் பாவலரேறு. தேவநேயர் என்னும் மாபெரும் மொழிஞாயிற்றை உலகிற்கு அடையாளம் காட்டியதும் தென்மொழியே.

பகை ஆற்றல்களுடன் எந்த நிலையிலும் நட்பு பாராட்டாத புகழ் வாழ்வு பாவலரேறுக்குரியது. ஆரிய சனா தனிகளுக்கு எப்போதும் அச்சம் தரும் சொற்க ளென்றால், அவை தென்மொழி என்பதும், பெருஞ் சித்திரனார் என்பதும்தான்.

குடும்ப உறுப்பினர்கள் அனைவரையும் கொள்கை உரவோர்களாக வளர்த்தெடுத்த பெருமைக்குரியவர் பாவலரேறு மட்டுமே.

மொழி உரிமை, நாட்டு விடுதலை, பிராமணிய எதிர்ப்பு எனப் பல நிலைகளில் இயங்கி வந்தாலும், அவர் மாபெரும் மனிதநேயர். மனித வாழ்வியலின் நுட்பங்களை அவர்போல் நுட்பமாக விளம்பிய பாவலர்கள் மிகவும் குறைவு.

“புடவிபல! ஒன்றுகடல்
புன்மணல்இந் ஞாலம்!
அடவிஎன மீன்செறிவாம்!
அண்டம்பல் கோடி!
இடவரைகள் எண்திசைகள்
இவ்வுலக ஆக்கம்!
கடவிடைகள் நேர்ச்சிக்
கணிப்பு!”

**இயற்கையின் இயங்கலையும், சார்பு உண்மை களையும் மிக நுட்பமாகக் கூறிச் செல்கிறார்.**

“சென்ற தடத்திலே சென்றுகொண் டிராதே!
சேற்றில் சகதியில் நடந்துபார்! – முள்
சிரிக்கும் கடும்புதரில் நுழைந்துபார்! – பெருங்
குன்றுண்டு! மலையுண்டு! காடுண்டு! கடலுண்டு!
குனிந்து நிமிர்ந்துநடந் தோடுவாய்! – உயிர்க்
குலங்கள் வாழ்களனப் பாடுவாய்!”

**நமது மக்கட்குலத்தின் ஏற்றத்திற்குப் புதிய பட்டறிவு களின் தேவையை எவ்வளவு நுண்ணோக்குடன் கூறுகிறார் பாவலரேறு.**

**மனிதகுல ஏற்றத்திற்காகச் செயல்படுவோருக்குப் பாவலரேறு கூறும் சிந்தனை நுட்பங்கள் நேர்த்தி மிக்கவை.**

“இன்றைய நாள்நினை!
இனிவரும் நாள்நினை!
என்றும் புதியன் நீ!
யாவும் புதியன!
அன்றன்றும் புதுநாள்!
அனைத்தும் இனியன!
ஒன்று கை போகின்
ஒன்றுஉன் கைவரும்!”
“முழுவதும் அறிந்துகொள்!
முடிவு செய்யாதே!
தொழுவது நன்று! எனின்
அடிமை ஆகாதே!
விழுவதும் இயல்பு! உடன்
விசும்பென நின்றுகொள்!
அழுவது கோழைமை!
அயர்வு கொள்ளாதே!”

**அநீதி கொய்யவும், நீதியை நெய்யவும் விட்டுக் கொடுக்காத தன்மானப் புலவர் ஒருவர் வாழ்ந்திருந் தார் என்பது ஒரு வரலாற்று விந்தைதான்!** ●

## மா.பெ.பொ.க. காஞ்சிபுரத்தில் நடத்திய தமிழர் உரிமைக் காப்பு கருத்தரங்கம் தமிழ்நாட்டரசின் பாவேந்தர் விருது பெற்ற தோழர் வாலாசா வல்லவன் அவர்களுக்குப் பாராட்டு விழா



மார்க்சியப் பெரியாரியப் பொதுவுடைமைக் கட்சியின் சார்பில் 26.2.2023 ஞாயிறு மாலை 4 மணிக்கு காஞ்சிபுரம் இராஜபவன் கூட்ட அரங்கில் தமிழர் உரிமைக் காப்பு கருத்தரங்கமும் தமிழ்நாட்டரசின் பாவேந்தர் விருது பெற்ற தோழர் வாலாசா வல்லவன் அவர்களுக்குப் பாராட்டுக் கூட்டமும் காஞ்சி மாவட்டச் செயலாளர் தோழர் சி. நடராசன் தலைமையில் நடைபெற்றது.

காஞ்சி மாவட்டத் துணைச் செயலாளர் தீ. கோபாலகிருட்டிணன் வரவேற்புரையாற்றினார். மா.பெ.பொ.க. பொறுப்பாளர்கள் தி. துரை சித்தார்த்தன், மோ.சி. சங்கர், மீ. தில்லிபாபு, மு. சுவாமிநாதன், நா. மதனகவி, க. குப்புசாமி, த. இளவரசன், சம்பந்த சிவக்குமார் ஆகியோர் உரையாற்றினர். தோழமை அமைப்பினர் காஞ்சி அமுதன், காரை கு. அருளானந்தம், பாசறை செல்வராஜ், ச. மகேசு, இரவி பாரதி, பூ. இராஜி, பெ. பழனி, வி.கே. பொன்மொழி, ஜே. கமலநாதன், அ.வெ. முரளி ஆகியோர் உரையாற்றினர். இறுதியில் பேராசிரியர் சோம. இராசேந்திரன் சிறப்புரையாற்றினார். இரா. நாராயண மூர்த்தி நன்றி கூறினார்.

# தூக்குத் தண்டனையை நிறைவேற்ற மாற்றுமுறை காண்பதா மாண்பு!

- சா.குப்பன்

இந்திய உச்சநீதிமன்றத்தில் இப்போது ஒரு மீளாய்வு நடத்தப்படுகிறது. அது என்னவெனில் மரண தண்டனையை அநாகரிகமான முறையில் மாந்த நேயமில்லாமல் கொடுமையான வகையில் தூக்கிலிட்டு நிறைவேற்றாமல் அமெரிக்காவில் உள்ளதைப் போல ஊசி மூலம் நஞ்சு செலுத்தி நிறைவேற்றலாமா அல்லது மின்சாரம் பாய்ச்சுவதன் மூலம் நிறைவேற்றுவதா அல்லது இன்றைய அறிவியல் நுட்ப வளர்ச்சியைப் பயன்படுத்தி அறிவார்ந்த வலி குறைவான, கண்ணிய மான புதிய முறை ஒன்றைக் கண்டறிந்து, அந்தப் புதிய முறையில் நிறைவேற்றலாமா என்பதே ஆகும்.

ரிஷி மல்ஹோத்ரா என்பவர் குற்றவியல் நடைமுறைச் சட்டம் பிரிவு 354(5)அய் நீக்க வேண்டும்; அது அரசமைப்புச் சட்டம் கூறு 21 அளித்துள்ள உயிர்வாழ் வதற்கான உரிமைக்கு எதிரானது என்றும் 2003ஆம் ஆண்டு அளித்துள்ள சட்ட ஆணையத்தின் 187ஆம் அறிக்கையில் பரிந்துரைத்துள்ளபடி தூக்கிலிட்டு சாகச் செய்யும் முறை ஒழிக்கப்பட வேண்டும் என்றும் இந்திய ஒன்றிய அரசுக்கு எதிராக 2017 அக்டோபர் 6இல் உச்சநீதிமன்றத்தில் வழக்குத் தொடுத்தார். "ஒருவருக்கு சாவுத் தண்டனை அளிக்கப்பட்டால், அவர் சாகும் வரை தூக்கிலிடப்படல் வேண்டும்" என குற்றவியல் நடைமுறைச் சட்டம் 354(5) கூறுகிறது.

மேற்படி வழக்கை விசாரணை செய்யும் உச்ச நீதிமன்றத் தலைமை நீதிபதி டி.ஒய்.சந்திரசூட் அவர் களும் நீதிபதி பி.எஸ். நரசிம்மா அவர்களும் அடங்கிய அமர்வு 21.3.2023 அன்று, மரண தண்டனையை நிறைவேற்ற, தற்போதுள்ள தூக்கிலிடும் முறைக்கு மாற்று முறையைப் பரிந்துரைக்க தேசியச் சட்டப் பல்கலைக்கழக வல்லுநர்களையும் மருத்துவர்களையும் அறிவியலாளர்களையும் கொண்ட குழு அமைக்க லாமா என ஒன்றிய அரசின் தலைமை வழக்குரை ஞரான ஆர். வெங்கடரமணியிடம் கேட்டுள்ளது.

சாகப் போகிறவர் துன்பத் துடிப்பைக் குறைக்க வேண்டுமாம்; விலங்காண்டித்தனமான கொடூரத் தன்மையில்லாத, பண்பார்ந்த மாற்றுமுறை வேண்டு மாம்.

மரண தண்டனை பண்பார்ந்த முறையா? மனிதநேயமா? கொடுமையற்றதா? என்பதே மாந்த உரிமைகள் காக்கப்பட வேண்டும் என்போர் எழுப்பும் வினா. மரண தண்டனை என்பதே நாகரிகமற்ற



விலங்காண்டித்தனமான - கொடுமையான ஒன்று. எனவே மரண தண்டனை முற்றாக ஒழிக்கப்பட வேண்டும்.

1860ஆம் ஆண்டு பிரித்தானியர் ஆட்சியில் இயற் றப்பட்ட இந்திய குற்றவியல் நடைமுறைச் சட்டத்தில், இன்றைக்கு 125 ஆண்டுகளுக்குமுன் 1898-இல் சேர்க்கப்பட்ட பிரிவே மரண தண்டனை ஆகும். 1973இல் இந்தியக் குற்றவியல் நடைமுறைச் சட்டத்தில் பல மாற்றங்கள் செய்யப்பட்டிருப்பினும் மரண தண்டனையில் மாற்றம் ஏதும் செய்யப்படவில்லை. இந்திய குற்றவியல் நடைமுறைச் சட்டத்தில் மரண தண்டனை விதிப்பது பற்றிக் கூறும் பிரிவுகள் 120B, 121, 132, 194, 302, 305, 364A, 376A, 396 மற்றும் பிரிவு 31A அனைத்தும் நீக்கப்பட வேண்டும்.

சட்ட ஆணையத்தின் 262ஆம் அறிக்கை, பயங்கர வாதச் செயல்களில் ஈடுபடுவதைத் தவிர மற்ற குற்றங் களுக்கு மரண தண்டனை ஒழிக்கப்பட வேண்டும் எனக் கூறுகிறது. ஆனால் சட்ட ஆணையத்தின் 187ஆவது அறிக்கை குற்றவியல் நடைமுறைச் சட்டம் பிரிவு 354(5)-இல் திருத்தம் செய்து தூக்குத் தண்ட னைக்கு மாற்றாக ஊசி மூலம் நஞ்சு செலுத்தலாம் என்று கூறுகிறது.

2020-இல் இருந்த நிலைப்படி உலகில் 108 நாடு களில் அதாவது 70 விழுக்காடு நாடுகளில் மரண தண்டனை என்பது முற்றாக இல்லை. வங்கதேசம், சீனா, எகிப்து, எத்தியோப்பியா, இந்தியா, இந்தோனேசியா, ஈரான், சப்பான், நைஜீரியா, சவூதி அரேபியா, தென் கொரியா, இலங்கை, தாய்வான், வடஅமெரிக்கா

முதலான நாடுகளில் இன்னமும் மரண தண்டனை நீடிக்கிறது.

மரண தண்டனை நீடிக்க வேண்டும் என்போர் கொடிய குற்றங்களுக்கு தண்டனையும் கடுமையாக இருந்தால் தான் எதிர்காலத்தில் கொடுங்குற்றங்கள் நிகழ்வது குறையும் எனக் கூறுகின்றனர். ஆனால் தண்டனை கடுமையாக இருந்தும் கொடிய குற்றங்கள் இழைக்கப்படுவது பெருகிக் கொண்டுள்ளதைப் புள்ளி விவரங்கள் தெரிவிக்கின்றன. எனவே இந்தக் காரணம் ஏற்புடையதாக இல்லை.

மரண தண்டனை என்பது இந்திய அரசமைப்புச் சட்டத்தின் கூறு 21 உறுதி செய்துள்ள குடிமக்கள் உயிர் வாழ்வதற்கான அடிப்படை உரிமையை மறுப்பதாகும். குற்றம் எதுவாயினும் அதற்குத் தண்டனை அம்மனி தனைக் கொல்வது என்பது நாகரிக உலகத்தில் ஏற்கத்தக்கதன்று.

பிழையான ஆதாரங்கள் அடிப்படையிலோ சான் றாளரின் பிழையான சான்றுரை அடிப்படையிலோ மரண தண்டனை நிறைவேற்றப்பட்ட பின்னர் உண்மை வெளிப்பட்டால் தண்டனைக்கு உள்ளானவருக்கு நியாயம் வழங்க முடியுமா என்பதும் கருத்தில் கொள்ளப்பட வேண்டும். தண்டனை எதுவாயினும் ஏதோ ஒரு சூழலில் குற்றமிழைத்த ஒருவர் திருந்தி வாழ்வதற் கான வாய்ப்பு அளிப்பதாக இருக்க வேண்டும்.

அய்க்கிய நாடுகள் அவையின் மனித உரிமை அமைப்பு மரண தண்டனை கூடாது என்ற கருத்தை உறுதி செய்கிறது. பெரும்பான்மை மக்களின் பொதுக் கருத்தும் மரண தண்டனைக்கு எதிரானதாகவே உள்ளது.

உச்சநீதிமன்றம் மாற்றுமுறைத் தேடாமல் மரண தண்டனையை முற்றாக ஒழித்திட முன்வர வேண்டும்.

**மரண தண்டனை ஒழிப்போம்!**
**மனிதம் காப்போம்!** ●

## அவர்தாம் பெரியார்



அவர்தாம் பெரியார் – பார்
அவர் தாம் பெரியார்!
அன்பு மக்கள் கடலின் மீதில்
அறிவுத் தேக்கம் தங்கத் தேரில்
(அவர்தாம்)

மக்கள் நெஞ்சின் மலிவுப்பதிப்பு
வஞ்சகர்க்கோ கொடிய நெருப்பு
மிக்க பண்பின் குடியிருப்பு
விடுதலைப் பெரும்படையின் தொகுப்பு (அவர்தாம்)

– புரட்சிக் கவிஞர் பாரதிதாசன்

## பாவேந்தர் தமிழ் மன்றத்தின் 27ஆம் ஆண்டு தொடக்க விழா, பொங்கல் விழா, தமிழ்ப்புத்தாண்டு விழா



பாவேந்தர் தமிழ் மன்றத்தின் 27ஆம் ஆண்டு தொடக்க விழா, பொங்கல் விழா, தமிழ்ப்புத்தாண்டு விழா 19.02.2023 ஞாயிறு காலை 10 மணியளவில் இராணிப் பேட்டை சிப்காட்டில் வ.உ.சி நகர் அரசு பள்ளி வளாகத்தில் நடைபெற்றது. தமிழ்நாடு அரசின் 2022ஆம் ஆண்டிற் கான பாவேந்தர் விருது பெற்ற புதிய சிந்தனையாளன் இதழின் ஆசிரியர் தோழர் வாலாசா வல்லவன் அவர் களைப் பாராட்டி நினைவுப் பரிசு வழங்கப்பட்டது.

மன்றத்தின் ஒருங்கிணைப்பாளர் தோழர் தமிழன்பன் தலைமை தாங்கினார். தோழர் வீராசாமி வரவேற்பு ரையாற்றினார். பேராசிரியர் தமிழ்வேள், பெற்றோர் ஆசிரியர் சங்கத் தலைவர் ஜி.சுப்ரமணியம், முனைவர் யாழினி, மா.பெ.பொ.க. தோழர் சா.குப்பன், கல்வெட்டு ஆய்வாளர் ப.வெங்கடேசன், உட்பேக் நிறுவனர் பழனி, இராமலிங்கம், மா.பெ.பொ.க. இராணிப்பேட்டை மா.செ.க.குப்புசாமி இராமு ஆகியோர் வாழ்த்துரை வழங்கினர். தோழர் வாலாசா வல்லவன் ஏற்புரை ஆற்றினார். மாணவர்களுக்கான பேச்சுப் போட்டி, பாடல் போட்டி, திருக்குறள் ஒப்புவிப்புப் போட்டி, ஓவியப் போட்டிகள் நடத்தப்பட்டன. கலந்து கொண்ட மாணவர்களுக்கு புத்தகம் பரிசாக வழங் கப்பட்டது. அனைவருக்கும் புத்தகம் நினைவுப் பரிசு வழங்கப்பட்டது. முடிவில் தமிழ்க்கனல் நன்றி கூறினார். மாலை 4 மணிக்கு பேராசிரியர் சுந்தரவள்ளி அவர்கள் பங்கேற்ற சிறப்புக் கருத்தரங்கம் நடைபெற்றது. தோழர் தியாகராசன் வரவேற்புரையாற்றினார். ஆசிரியர் முகிலன் தலைமை தாங்கினார். பேராசிரியர் தமிழ்வேள், உடற்கல்வி ஆசிரியர் பால்சத்தியன், பெல்.கி.சேகர், தமிழ்வாணன் ஆகியோர் உரையாற்றிய கருத்தரங்கம் நடைபெற்றது. 10க்கும் மேற்பட்ட பாவேந்தர் பாடல்களுக்கு 80க்கும் மேற்பட்ட மாணவர்கள் நடனம் ஆடினர். மாணவர்களின் கலை நிகழ்ச்சி சிறப்பாக நடைபெற்றது. முடிவில் பாண்டியன் நன்றி கூறினார். 500க்கும் மேற்பட்டோர் கலந்து கொண்டனர். திருமதி. மகேசுவரி அவர்கள் நிகழ்ச்சியை தொகுத்து வழங்கினார். ஏராளமான பெண்கள் மாண வர்கள் கலந்து கொண்டது மிகவும் சிறப்பாகும்.

# சாதியத்துக்கு எதிரான போராட்டத்தில் அம்பேத்கர், காந்தி முரண்

**தியாகு,** பொதுச்செயலாளர்,
தமிழ்த்தேசிய விடுதலை இயக்கம்



பிறப்பு முதல் சாதியச் சமூகத்தின் இழிவுக்கும் கொடுமைகளுக்கும் முகங்கொடுத்த பீமாராவு அம்பேத்கர் எல்லாத் தடைகளையும் வென்று கல்வியில் முன்னேறிய தோடு, தக்கவர்கள் துணைகொண்டு அயல்நாடுகளிலும் கல்வியைத் தொடர்ந்தார். அமெரிக்காவில் கொலம்பியப் பல்கலைக்கழகத்திலும், இலண்டன் பொருளியல் கல்விக் கழகத்திலும் ஆராய்ச்சிகள் செய்து பட்டங்கள் பெற்றார். அப்போதும் எப்போதும் தாயகத்தில் சாதிக் கொடுமைகளால் நசுக்கப்படும் மக்களை மறவாமல் நினைந்து, அவர்களின் விடியலுக்கு வழிதேடினார்.

**அம்பேத்கர் வருகை**

இந்தியாவுக்கு, சரியாகச் சொன்னால் தாய்மண் மராத்தி யத்துக்குத் திரும்பியது முதலே 1920களின் தொடக்கத்தி லிருந்தே அம்பேத்கர் சாதி எதிர்ப்புக் களத்தில் இயங்கத் தொடங்கினார், தாழ்த்தப்பட்ட சமுதாய மக்களையும் சாதியெ திர்ப்பில் மெய்யாகவே அக்கறை கொண்ட மற்றவர்களையும் திரட்டி சத்தியாகிரக வழியில் இந்துச் சமூகத்தில் மாற்றம் கொண்டுவர முடியும் என்று முதலில் நம்பினார்.

**காந்தி வருகை**

சற்றொப்ப அதேகாலத்தில் அம்பேத்கருக்குச் சற்று முன்னதாக அருகிலுள்ள குசராத்தில் வந்திறங்கிய ஒருவர் 1916ஆம் ஆண்டு அகமதா பாத்தில் தீண்டாமை இழிவுக்கு எதிராகச் செய்த முழக்கம் நாடெங்கும் அதிர்வலைகளைப் பரப்பிக் கொண்டிருந்தது. அவர்தாம் மோகன்தாஸ் கரம்சந்த் காந்தி. பனியா வகுப்பில் பிறந்து சட்டம் படித்து வழக்கறிஞர் தொழில் செய்வதற்காக தென்ஆப்பிரிக்கா சென்றவர் அப்போதுதான் இந்தியாவுக்கு, சரியாகச் சொன்னால் தாய்மண் குசராத்துக்குத் திரும்பியிருந்தார்.

**தென்ஆப்பிரிக்காவில் காந்தி**

அம்பேத்கர் தாமே நேராகத் தீண்டாமைக் கொடுமைக்கு ஆளானவர். தம்மக்களின் துயரத்தையும் பட்டுணர்ந்தவர். காந்தி பனியா மேல்சாதிக்காரர். அம்பேத்கர் போல் தீண்டாமைக் கொடுமைக்கும் இழிவுக்கும் ஆளாகிற வாய்ப்பு காந்திக்கு இல்லை. ஆனால் தென்ஆப்பிரிக்காவில் வெள்ளை நிற வெறியின் இனஒதுக்கலை அவரே சந்தித்தார். அவரைப் போல் இந்தியத் துணைக்கண்டத்திலிருந்து வந்த குசராத்தி கள் மட்டுமல்ல, மற்றவர்களும் கடவுச் சட்டம் போன்ற நிறவேற்றுமைச் சட்டங்களுக்கும் பல விதமான இழிவுகளுக் கும் ஆளாகக் கண்டார். இந்திக்காரர்கள், பத்தானியர்கள், அனைவரிலும் முக்கியமாகத் தமிழர்கள் இருந்தார்கள்.

இந்தியாவிலேயே, தமிழ்நாட்டிலேயே சுரண்டலுக்கும் ஒடுக்குமுறைக்கும் ஆட்பட்டு அல்லலுற்ற தமிழர்கள் இலங்கை, பிஜித்தீவுகள், மொரிசஸ் போன்ற பிரித்தானியக் குடியேற்ற நாடுகளுக்கு ஒப்பந்தக் கூலிகளாகச் சென்றது போலத்தான் தென் ஆப்பிரிக்காவுக்கும் கப்பலேறி, நட்டால் கடற்கரையில் வந்திறங்கினார்கள். பெருந்தோட்டங்களில் மட்டுமல்ல, நாடெங்கும்தோண்டப்பட்டுக் கொண்டிருந்த கனிமச் சுரங் கங்களிலும் அவர்கள் அடிமைகளாக வேலை வாங்கப் பட்டார்கள். தென்ஆப்பிரிக்காவில் தமிழ் மக்கள் அடைந்த துன்பங்களை பாரதியார் தமிழச்சாதியில் பட்டியலிட்டார். காந்தி தென் ஆப்பிரிக்காவில் சத்தியாகிரகம் என்ற எளிய வரலாற்று நூலில் விரிவாக எடுத்துரைக்கிறார்.

தென்ஆப்பிரிக்காவில் இந்தியர்கள் அல்லது ஆசியர்கள் என்று இனங்குறிக்கப்பட்ட மக்களில் இந்துக்களும் இருந் தார்கள்; இசுலாமியர்களும் இருந்தார்கள்; அதேபோல் பனியாக்களும் இருந்தார்கள்; பிற்படுத்தப்பட்ட, தாழ்த்தப்பட்ட மக்களும் இருந்தார்கள். மொழியால், சாதியால், மதத்தால் வேறுபட்ட இம்மக்களை ஓரணியில் திரட்டி நிறுத்தாமல், கொடிய வெள்ளை நிறவெறியரசை எதிர்த்து எதுவும் செய்யமுடியாது. பலதரப்பட்ட இந்த மக்களை ஒன்றுபடுத்தும் வரலாற்றுப் பொறுப்பு இளம் காந்தியைச் சார்ந்தது, எஞ்சிய தெல்லாம் நாமறிந்த வரலாறு. புதுமக்காலத்தில் தென்ஆப்பிரிக்க மக்களின் விடுதலைப் போராட்டத்துக்கு முன்னோடியாகத் திகழ்ந்த தென்ஆப்பிரிக்க இந்தியர்களின் உரிமைப் போராட்டத்தை வழிநடத்தியவர் காந்தி! வழி நடந்தவர்கள் தமிழர்கள்! மற்றவர்கள் எல்லாம் இதற்குப் பிறகுதான்! இதன் வரலாற்றுக் குறியீடுதான் தில்லையாடி வள்ளியம் மையின் ஈகம்.

**காந்தியின் மூன்று உத்திகள்**

இந்தச் செறிவான பட்டறிவோடு தாயகம் திரும்பினார் காந்தியார். அவருக்காகக் காத்திருந்தது இந்தியத் தேசிய இயக்கத்தின் தலைமைப் பொறுப்பு. படிப்பாளிகள், தொழில் முனைவர்கள், அதிகார வகுப்பார் ஆகியோரின் சபையாக

இருந்த காங்கிரசின் தலைமையிலான இந்தியத் தேசிய இயக்கத்தைப் பெருந்திரளான மக்களின் இயக்கமாக மாற்றியதுதான் காந்தியாரின் வரலாற்று வகிபாகமாக அமைந்தது. இதற்கு அவரது மூன்று உத்திகள் அல்லது அணுகு முறைகள் அடிப்படை ஆயின.

(1) இந்தியாவின் பன்மொழி இயல்பை அறிந்தேற்கும் வகையில் காங்கிரஸ் அமைப்பை மொழிவழி அலகுகளாகப் பிரித்தமைத்தல்; (2) இந்து-முஸ்லிம் ஒற்றுமையை வலியுறுத்தல்; (3) இந்துச் சமூகத்தின் ஓர்மைக்குத் தடையான தீண்டாமைக்கு எதிரான இயக்கம். மூன்றாவதில் ஈண்டு கவனம் கொள்கிறோம்.

## இந்து என்றால் என்ன?

இந்து என்ற சொல் (1) ஒரு புவியியல் பெயராகவும், (2) ஓர் இறையியல் கருத்தினமாகவும், (3) ஒரு சமூகப் பொருளியல் கட்ட மைப்பாகவும் இருப்பதை அம்பேத்கர் தெளிவாக வெளிப்படுத்தினார்,

முதல் இரு கூறுகளிலும் தீண்டத்தகாத மக்களுக்கும் இடமிருப்பினும் மூன்றாவது கூறாகிய இந்துச் சமூகக் கட்டமைப்பில் அம்மக்களுக்கு இடமில்லை. இந்தப் பொருளில் தாழ்த்தப்பட்ட மக்கள் இப்போதுள்ளபடி தலித்து மக்கள் இந்துக்கள் அல்ல என்றாகிறது. அவர்களுக்கு இது விருப்பத் தேர்வு இல்லை. இதுதான் கட்டாயமாகச் சுமத்தப்பட்ட தகுநிலை. இந்துச் சமூகத்தின் சாறமே நால்வர்ணச் சாதியம்தான் என்பது அம்பேத்கரின் பார்வையாக இருந்தது. இந்தச் சாதிச் சமூக அமைப்பின் நச்சு விளைச்சல்களில் ஒன்றுதான் தீண்டாமை. வர்ணம் உள்ளவரை சவர்ணர்களும் அவர்ணர்களும் இருப்பார்கள். வர்ண அமைப்பைக் கலைக்காமல் அவர்ணர்களை ஏற்றுக்கொள்ளும்படி சவர்ணர்களிடம் மன்றாடுவதால் நால்வர்ண அமைப்பை ஒழித்துவிட முடியாது. சாதிகள் உள்ளவரை சாதி கெட்டவர்கள் இருப்பார்கள், அவர்களுக்கு எதிரான இழிவும் கொடுமையும் நீடிக்கும். சாதிகள் இருக்கும் வரை புறச்சாதிகளும் இருக்கத்தான் செய்யும். வர்ண சாதியமைப்பைப் பாதுகாத்துக் கொண்டே தீண்டாமை ஒழிப்பு என்பது வெறுங்கனவே.

## கடவுளின் குழந்தைகள்

இதற்கு மாறாக, காந்தியார் தீண்டாமையை இந்துச் சமூகத்தின் ஒரு பிறழ்வாக மட்டும் பார்த்தார். அவர் இந்துச் சனாதனத்தைப் போற்றினார். நால்வர்ண அமைப்பை நியாயப் படுத்தினார். தீண்டாமையைக் கைவிடும்படி இந்துக்களிடம் விண்ணப்பித்தார். அது பாவம் என்றார்; கொடுங்குற்றம் என்றார். பஞ்சமர்களை - தாழ்த்தப்பட்ட மக்களை - கடவுளின் குழந்தைகள் என்ற பொருளில் அரிஜன் என்று பெயரிட்டழைத்தார். அரிஜன் அல்லாதவர்களைக் கொண்டு அரிஜன் சேவா சங்கம் அமைத்தார். காந்தியின் அணுகுமுறை தீண்டத்தகாத மக்களை அன்பினால் கொல்வதாகும் என்றார் அம்பேத்கர்.

## காந்தி-அம்பேத்கர் கருத்து முரண்

காந்திக்கும் அம்பேத்கருக்கும் இடையே சாதியம் தொடர்பான இந்தக் கொள்கை முரணே தொடக்கம் முதல் இறுதிவரை இருவருக்கும் இடையிலான கருத்தியல்-அரசியல் பிணக்கின்மைய இழையாக ஓடிக்கொண்டிருந்தது. சாதியம், அதன்விளைவான தீண்டாமை இவைகுறித்து அம்பேத்கருக்கும் காந்திக்கும் இருந்த கருத்து முரணுக்குச் சான்றாக ஒரு நிகழ்வைச் சுட்டிக்காட்டலாம் :

## இழிதொழில் புனிதமா?

காந்தியார் துப்புரவுத் தொழிலாளர்களை இந்தச் சமூகத்தின் தாய் என்று வர்ணித்தார். குழந்தைக்கு அன்னை செய்யும் கடமைகளை அவர்கள் செய்வதாகச் சிறப்பித்துச் சொன்னார். காந்தியார் நிறுவி நடத்திய ஆசிரமங்களில் அனைவரும் தமது கழிப்பறைகளைத் தூய்மை செய்து கொள்ளவேண்டும். காந்தியார் தன்னை ஒரு பங்கி என்று சொல்லிக் கொண்டார். பங்கிதான் தோட்டி என்பதுபோல் மலம் அள்ளும் தொழிலாளி. ஒருமுறை அம்பேத்கருடன் உரையாடும்போது காந்தி சொன்னார்: அடுத்த பிறவியில் மலம் அள்ளும் தொழிலாளியாகப் பிறக்க விரும்புகிறேன்.

அம்பேத்கர் சொன்னார்: இந்த இழிவான தொழிலை இந்தப் பிறவியிலேயே ஒழித்துவிட வேண்டும் என விரும்புகிறேன். நீங்கள் அடுத்த பிறவி வரை நீடிக்க விரும்புகிறீர்கள்.

மனித மலத்தை மனிதர் கையால் அள்ளும் இழிதொழிலைப் புனிதப்படுத்துவதைத்தான் இன்றளவும் நரேந்திர மோதி செய்துவருகிறார். இன்றளவும் மலக்குழியில் மூச்சுத் திணறிச்சாகும் மனிதனுக்கு இந்தியக் குடியரசில் விடிவுகாலம் பிறக்கவில்லையே! மலக்குழியில் சாவதுதான் இந்தப் புண்ணிய பூமியில் புனிதச்சாவோ?

## மகத் போராட்டம்

சாதி ஒடுக்குமுறையாளர் திருந்த விண்ணப்பம் செய்வதல்ல, ஒடுக்குண்ட மனிதர்களை அணி திரட்டிப் போராடுவதே விடிவுக்கு வழிகாட்டும் என அம்பேத்கர் நம்பினார். தாழ்த்தப்பட்ட வகுப்பு மக்களை அணிதிரட்டி அவர்வழி நடத்திய முதல் போராட்டம்தான் 1927ஆம் ஆண்டு நடைபெற்ற மகத் சத்தியாகிரகம். இதற்காக முதலில் ஒரு மாநாடுதான் நடைபெற்றது. மகத் மாநாட்டைத் திட்டமிட்டு ஒழுங்கு செய்த இளைஞர் பிற்காலத்தில் தோழர் மோரே என்று புகழ்பெற்ற இராமசந்திர பாபாஜி மோரே. மகத் மாநாட்டில் சற்றொப்ப மூவாயிரம் தலித்து மக்கள் கலந்து கொண்டார்கள். அவர்களில் பலர் 1914-18 முதல் உலகப் போர்க் காலத்தில் பிரித்தானியப் படையாட்களாக இருந்தவர்கள்.

1927 மார்ச்சு 20ஆம் நாள் மகத் மாநாட்டுப் பேராளர்களிடம் அம்பேத்கர் சொன்னார்: நாம் சௌதார் குளத்துக்குச் செல்வது தண்ணீர் அள்ளிக் குடிப்பதற்காக மட்டுமன்று. மற்றவர்களைப் போல் நாமும் மனிதப் பிறவிகளே என்று சாற்றப் போகிறோம். நிகர்மை நெறியை நிலைநாட்டப்

போகிறோம். மகத் குளத்திலிருந்து திரும்பிவந்த பேராளர்கள் மீது இந்து மதவெறிக்கும்பல் ஒன்று தாக்குதல் தொடுத்தது. பெண்கள் உட்பட அறுபது எழுபது பேர் காயமுற்றனர். இதுபோதாதென்று பார்ப்பனர்கள் மகத் குளத்துக்குத் தீட்டுக் கழிக்கவும் செய்தனர். எப்படித் தெரியுமா? 108 சட்டிகளில் பசுஞ்சாணம், பசுமூத்திரம், பால், நெய், தயிர் கலந்து குளத்தில் கொட்டி வேதமந்திரங்கள் முழுங்கத் தீட்டுக்கழித்து முடித்தனர். இது அம்பேத்கரை சீற்றங் கொள்ளச் செய்தது. அவர் ஒரு போராட்டத்துக்குத் திட்டமிடலானார். தாழ்த்தப் பட்ட மக்களின் சத்தியாகிரகத்துக்காகப் பத்தாயிரத்துக்கு மேற்பட்ட தொண்டர்களைத் திரட்டினார். சௌதார்குளம் தனியாருக்குச் சொந்தமென்று பொய்சொல்லி சாதி இந்துக்கள் சிலர் நீதி மன்றத்தில் தடையாணை பெற்றனர்.

**மனுஸ்மிருதி எரிப்பு**

அம்பேத்கர் கூட்டிய இரண்டாம் மகத் மாநாடு 1927 திசம்பர் 25ஆம் நாள் கூடியது. இந்த மாநாட்டில் பார்ப்பனியக் கொள்கைக் கையேடாகிய மனுஸ்மிருதி கொளுத்தப்பட்டது. கொளுத்தியவர் முற்போக்குப் பார்ப்பனர் பாபுசாகப் சகஸ்ரபுத்தே. முதல் உலகப் போரின் முடிவுக்குப்பின் அரசியல் களத்தில் எழுந்த புதிய வாய்ப்புகளின் பக்கம் அம்பேத்கரின் கவனம் திரும்பியது. அரசியல் அதிகாரத்தில் தாழ்த்தப்பட்ட மக்கள் பங்குபெறுவதற்கான வாய்ப்புகள் அவை. பிரித்தானிய அரசின் நோக்கங்கள் குறித்து அம்பேத் கருக்கு எவ்வித மயக்கமும் இல்லை. 1930 ஆகஸ்டில் நடைபெற்ற அனைத்திந்திய தாழ்த்தப்பட்ட வகுப்புகள் மாநாட்டுத் தலைமையுரையில் அம்பேத்கர் இதனைத் தெளிவாக்கினார் :

வருந்தத்தக்க நிலைமைகள் நிலவுவதை பிரித்தானியர் விளம்பரப்படுத்த முடிவெடுத்தது அவற்றை அகற்றும் நோக்கத்துடன் அல்ல. இதனைச் சாக்கிட்டு இந்தியாவின் அரசியல் முன்னேற்றத்தை மந்தப்படுத்த வேண்டும் என்பதற்காகவே.

**அரசியல் அதிகாரம்**

தாழ்த்தப்பட்ட மக்கள் அரசியல் அதிகாரம் பெறாமல் அவர்களுக்கு விடியலில்லை என்ற முடிவுக்கு அம்பேத்கர் வந்திருந்தார். அவர் சொன்னார் :

"உங்கள் குறைகளைப் போக்க உங்களால் மட்டுமே முடியும், உங்கள் கையில் அரசியல் அதிகாரம் இல்லாமல் உங்களால் இதைச் செய்யமுடியாது. பிரித்தானிய அரசு இப்படியே இருக்கும்வரை இந்த அரசியல் அதிகாரத்தில் எவ்விதப் பங்கும் உங்களைச் சேராது. சுயராஜ்ய அரசமைப் பில்தான் நீங்கள் அரசியல் அதிகாரம் பெறச் சிறிதாவது வாய்ப்புள்ளது. இஃதல்லாமல் உங்கள் மக்கள் விடியல் பெறமுடியாது." 1909 மின்டோ-மார்லி சீர்திருத்தம், 1919 மாண்டேகு செம்ஸ்ஃபோர்டு சீர்திருத்தம் ஆகியவற்றுக்குப் பின் ஒரு புதிய அரசமைப்பு பற்றிய விவாதங்கள் நடந்து கொண்டிருந்தன. புதிய அரசமைப்பில் தலித் மக்களின் குரல் ஒலிக்கச் செய்ய வேண்டும் என்பதற்கான முயற்சிகளில் அம்பேத்கர் முனைப்புடன் ஈடுபட்டார்.

1909 சீர்திருத்தச் சட்டத்தில் முஸ்லிம்கள் ஒரு தனிக் குழுவாக ஏற்கப்பட்டு அவர்களுக்குச் சட்டமன்றத்தில் தனி ஒதுக்கீடு வழங்கப்பட்டிருந்தது. தீண்டப்படாத மக்களும் பழங்குடிகளும் இந்துக்கள் அல்ல என்ற கருத்தை அப்போதே முஸ்லிம் லீக் முன்வைத்தது.

**தனி ஒதுக்கீட்டுக் கோரிக்கை**

முஸ்லிம்கள் இந்துச் சமூகத்துக்கு வெளியே இருப்பது போலவே தாழ்த்தப்பட்ட மக்களும் இந்துச் சமூகத்துக்கு வெளியேதான் உள்ளனர். அவர்களுக்கும் தனிஒதுக்கீடு தேவை என்று இப்போது அம்பேத்கர் கேட்டார். காந்தி இதை வன்மையாக மறுத்தார். அவர்களும் இந்துச் சமூகத்தின் அங்கமே என்று வாதிட்டார். தீண்டாமை ஒழிப்பு என்பது இந்துச் சமூகத்துக்குட்பட்ட சீர்திருத்தமே, அரசியலில் அவர் களைத் தனிக்குழுவாக கருதுவது இந்து தர்மத்தை அழித்து விடும் என்று அச்சப்பட்டார்.

**சைமன் ஆணையம்**

பிரித்தானிய அரசு 1927ஆம் ஆண்டு சைமன் ஆணை யத்தை அமைத்தபோது காங்கிரஸ் அதனைப் புறக்கணிப்ப தாக அறிவித்தது. அம்பேத்கர் சைமன் ஆணையத்துக்கு ஒத்து ழைப்பு வழங்கி தாழ்த்தப்பட்ட மக்களின் கோரிக்கைகளை வலுவாக முன்வைத்தார். 1930 மே மாதம் சைமன் ஆணையம் அறிக்கை அளித்தது. அதன் பரிந்துரைப்படி இலண்டனில் வட்டமேசை மாநாடு கூட்டப்பட்டது. தாழ்த்தப்பட்ட மக்கள் சார்பில் அம்பேத்கரும் இரட்டைமலை சீனிவாசனும் கலந்து கொண்டனர். மாகாண சட்டமன்றங்களில் தாழ்த்தப்பட்ட மக்களுக்கென்று இடங்கள் ஒதுக்கப்பட வேண்டும் என்ற கோரிக்கையை பிரித்தானிய அரசு ஒப்புக்கொள்ளுமாறு செய்வதில் அம்பேத்கர் வெற்றி கண்டார்.

**வகுப்புவாரித் தீர்வு**

1932 ஆகஸ்டு 16ஆம் நாள் பிரித்தானியத் தலைமை யமைச்சர் இராம்சே. மக்டொனால்டு அறிவித்த வகுப்புவாரித் தீர்வு (Communal Award):

முற்பட்ட சாதிகள், முஸ்லிம்கள், சீக்கியர்கள், ஐரோப்பியர்கள், இந்தியக் கிறித்தவர்கள், ஆங்கிலோஇந்தியர்கள், தீண்டப் படாதார் என்று ஒவ்வொரு குழுவுக்கும் தனிவாக்காளர் தொகுதிகள் ஒதுக்கீடு செய்யப்பட்டன. கொதித்தெழுந்தார் மகாத்மா! மற்ற எந்தக் குழுவுக்கும் ஒதுக்கீடு வழங்குவது பற்றி அவர் கவலைப்படவில்லை. ஆனால் தாழ்த்தப்பட்ட மக்களுக்குத் தனி ஒதுக்கீடு வழங்குவதை மட்டும் ஒப்புக் கொள்ளமாட்டேன் என்று உறுதியாக அறிவித்தார். வெறும் அறிவிப்போடு நிற்கவில்லை. சாகும்வரை பட்டினிப் போராட்டம் தொடங்கிவிட்டார்.

**காந்தியின் வன்முறை**

அம்பேத்கருக்கு மிகப்பெரும் நெருக்கடி! காந்தி உயிரிழந்தால் பழி அம்பேத்கரைச் சாரும். அதைவிடவும்

மோசம், இந்துக்களின் சினம் தாழ்த்தப்பட்ட மக்கள்மீது திரும்பும். பெரும் படுகொலைகள் நிகழலாம். நெருக்கடி அம்பேத்கருக்குத்தானே தவிர, பிரித்தானிய அரசுக்கல்ல, விட்டுக்கொடுங்கள் என்று தேசியத் தலைவர்களும் தலித் தலைவர்களும் கூட அம்பேத்கரை வலியுறுத்தலானார்கள். என்ன நடந்தாலும் விட்டுக்கொடுக்காதீர்கள் என்று அம்பேத் கருக்கு அறிவுரை சொன்ன ஒரே ஒருவர் பெரியார் மட்டுமே. கடைசியாக அம்பேத்கர் விட்டுக்கொடுக்க வேண்டிய தாயிற்று. தாழ்த்தப்பட்ட மக்களுக்கான தனி வாக்காளர் தொகுதி என்ற அம்பேத்கர் கனவைப் பலியிட்டு காந்தி பிழைத்துக் கொண்டார்.

காந்தியின் அகிம்சைக் கொள்கை பொய்மையானது என்பதற்குச் சான்றாகச் சில நிகழ்வுகளை அவரின் குற்றாய் வர்கள் எடுத்துக்காட்டு வதுண்டு. ஆனால் என் பார்வையில் அவரது பூனா உண்ணாநோன்புதான் மிகப்பெரும் சான்று. அது ஒரு வன்முறை அச்சுறுத்தல், அம்பேத்கரை வீழ்த்து வதற்காக பாமர தலித்துகளுக்கு காந்தி விடுத்த வன்முறை மிரட்டல். உளத்தியல் வன்முறை.

**பூனா ஒப்பந்தம்**

1932 செப்டம்பர் 24ஆம் நாள் ஒப்பமிடப்பட்ட பூனா ஒப்பந்தப்படி, தனிவாக்காளர் தொகுதி இல்லாமல் தலித்து களுக்கு ஒதுக்கீடு செய்யப்பட்ட இடங்களின் எண்ணிக்கை 70இலிருந்து 148 ஆக உயர்த்தப்பட்டது. தேர்தலுக்குமுன் நான்கு வேட்பாளர்களடங்கிய பட்டியலை முன்வைக்க தலித்துகளுக்கு உரிமை உண்டு. இவர்களில் ஒருவர் பொதுத் தொகுதியிலிருந்து தேர்ந்தெடுக்கப்படுவார் என்று சமரசம் செய்யப்பட்டது.

பூனா ஒப்பந்தம் என்பது தலித்துகளுக்கு காந்தி செய்த இரண்டகமே! அம்பேத்கர் ஆழ்ந்த ஏமாற்றமடைந்தார். 1933ஆம் ஆண்டு காந்தி அரிஜன் இதழைத் தொடங்கினார். அம்பேத்கரிடம் வாழ்த்துச் செய்தி கேட்ட போது, தீண்டத் தகாதவனின் செய்தியை இந்துக்கள் மதிக்கமாட்டார்கள் என்று விடையளித்தார். வாழ்த்துச் செய்திக்கு மாற்றாக வேறொரு செய்தியை அனுப்பி அதனை வெளியிடுமாறு கேட்டார் :

சாதியமைப்பின் துணை விளைபொருளே புறச்சாதி! சாதிகள் உள்ளவரை புறச்சாதிகளும் இருக்கும். சாதியமைப்பை அழிக்காமல் புறச் சாதியை எதனாலும் விடுதலை செய்யமுடி யாது. இந்துச் சமயத்தின் இந்த நச்சுக்கொள்கையைக் களை யெடுக்காமல் வரவிருக்கும் போராட்டத்தில் இந்துக்களைக் காப்பாற்றவும் அவர்களைத் தப்பிப்பிழைக்கச் செய்யவும் எதனாலும் முடியாது.

**சாதியொழிப்பு**

காந்தியார் தீண்டாமையைக் களைய வேண்டும் என்று பேசிக்கொண்டே தீண்டாமையையும் அதற்கடிப்படையான வர்ண சாதியமைப்பையும் புனிதக் கட்டளைகளாகக் கொண்ட வேதங்கள், ஸ்மிருதிகள், உபநிடதங்கள், புராணங்கள், கதைகள் உள்ளிட்ட இந்து சாத்திரங்கள் எதையும் கண்டிக்கவில்லை என்பது மட்டுமல்ல, அவற்றைப் புனிதம் என்றும் போற்றிக் கொண்டிருந்தார். மாறாக, அம்பேத்கர் இந்து சாத்திரங் களைக் கூர்மையாகச் சாடினார் என்பதை சாதியொழிப்பு என்ற அவரது உரையிலிருந்து அறியலாம். இந்து மதத்தை சீர்திருத்தம் செய்யும் நோக்கம் கொண்ட ஆரியசமாஜிலிருந்து கிளைவிட்ட ஜத்பத்தொடக் மண்டல் அம்பேத்கரைப் பேச அழைத்தனர். அவர் எழுதியனுப்பிய உரையின் வெப்பம் அவர்களை மிரளச்செய்துவிட்டது. அவர்கள் அதைத் திருத்தக் கேட்டபோது அம்பேத்கர் உறுதியாக மறுத்துவிட்டு அதே உரையை நூலாக வெளியிட்டார். அதுதான் 1936 மே மாதம் வெளிவந்த சாதியொழிப்பு!

**தற்சார்புத் தொழிலாளர் கட்சி**

1935ஆம் ஆண்டின் இந்திய அரசாங்கச் சட்டத்தின்படி 1937இல் மாகாணச் சட்டமன்றங்களுக்குத் தேர்தல் நடக்க விருந்தது. 1936 ஆகஸ்டு மாதம் அம்பேத்கர் ஒரு தொழிலாளர் கட்சியை நிறுவினார். அது தற்சார்புத் தொழிலாளர் கட்சி எனப்பட்டது. இதற்கிடையில் தாழ்த்தப்பட்ட மக்களை இந்து மதப் பிடியிலிருந்து விடுவிக்க அம்பேத்கர் விரும்பினார். நான் தீண்டத்தகாதவன் என்ற இழிவோடு பிறந்துவிட்டேன். அது என் குற்றமன்று. ஆனால் இந்துவாகச் சாகமாட்டேன். இது என் சக்திக்கு உட்பட்டதே. 1937 பொதுத் தேர்தலில் இந்திய தேசிய காங்கிரஸ் பரவலாக வெற்றி பெற்றது. தற்சார்புத் தொழிலாளர் கட்சி பெரிதாக வெற்றிபெறவில்லை.

1939இல் இரண்டாம் உலகப்போர் தொடங்கியது. நாட்டின் அரசியல் சூழல் அடியோடு மாறிவிட்டது. காங்கிரஸ் மாகாண அரசுகள் பதவி விலகின. போர் நெருக்கடியைப் பயன்படுத்தி அதிகாரத்தைப் பெற காங்கிரஸ் செய்தபேரம் பலிக்கவில்லை.

1942 ஏப்ரல் மாதம் அம்பேத்கர் தற்சார்புத் தொழிலாளர் கட்சியைக் கலைத்துவிட்டு அனைத்திந்திய அட்டவணைச் சாதிகள் கூட்டமைப்பை நிறுவினார். அதே ஆண்டு சூலை மாதம் வைசிராய் மன்றத்தில் சேர்ந்துகொள்ள அம்பேத்கர் அழைக்கப்பட்டார். அவர் தொழிலாளர் நலனுக்குப் பொறுப் பேற்றார்.

**அமைச்சரவைத் தூதுக்குழு**

இரண்டாம் உலகப்போர் முடிந்தபின் அதிகாரக் கை மாற்றம் பற்றிப் பேச பிரித்தானிய அரசு அமைச்சரவைத் தூதுக்குழுவை அனுப்பி வைத்தது. அதிகாரக் கை மாற்றப் பேச்சுக்களில் அம்பேத்கரும் தாழ்த்தப்பட்ட மக்களும் அடி யோடு புறக்கணிக்கப்பட்டார்கள். அமைச்சரவைத் தூதுக் குழுத் திட்டம் ஆறு கோடி தீண்டப்படாத மக்களுக்கு இரண்டகம் என்று அம்பேத்கர் சாடினார். விடுமைபெற்ற இந்தியா வுக்கான அரசமைப்புப் பேரவை கூட்டப்பட்ட விதத்ததையும் அவர் கண்டித்தார்.

1946 மார்ச் மாதத்தில் வயது வந்தோரில் 20 முதல் 24 விழுக்காட்டினருக்கு மட்டுமே வாக்குரிமை அளித்து நடத்தப் பட்ட தேர்தலில் தெரிவு பெற்ற மாகாணச் சட்டமன்றங்களி லிருந்து அரசமைப்புப் பேரவையின் பெரும்பாலான

உறுப்பினர்கள் தேர்ந்தெடுக்கப்பட்டனர். அவர்களில் 82 விழுக்காடு காங்கிரஸ் உறுப்பினர்கள். மத அடிப்படையில் 83 விழுக்காடு இந்துக்கள். அவர்களில் 45 விழுக்காடு பார்ப்பனர்கள்.

**வரைவுக்குழுத் தலைவர்**

அம்பேத்கர் தாழ்த்தப்பட்ட மக்களின் நலன் கருதி, அரசமைப்புப் பேரவையில் இடம் பெறவே விரும்பினார். மறுபுறம் காந்திக்கும் காங்கிரசுக்கும் அம்பேத்கர் தேவைப் பட்டார். இதனால் விளைந்த ஏற்பாடுதான் அம்பேத்கர் அரசமைப்பின் வரைவுக்குழுவுக்குத் தலைவரான நிகழ்வு. அவர் நேரு அமைச்சரவையில் சட்டத்துறை அமைச்சரும் ஆக்கபட்டார்.

இந்திய அரசமைப்புச் சட்டம் நிறைவேற்றப்பட்டு இந்தியா குடியரசாக மலர்வதற்கு முன்பே 1948 சனவரி 30ஆம் நாள் காந்தியார் பார்ப்பன-இந்துத்துவ-ஆர்எஸ்எஸ் வெறியர் களால் சுட்டு வீழ்த்தப்பட்டார். முசுலிம்களோடு இணக்கத்தை வலியுறுத்தினார்; இந்தியாவை இந்துநாடாக்கத் தடையாக இருந்தார் என்பதுதான் கொலைகாரர்களின் குற்றச்சாட்டு.

**காந்தி கொலையின் உட்பொருள்**

காந்தியைக் கொன்றவர்கள் மதவெறியர்கள் என்பதில் ஐயமில்லை. ஆனால் இந்துமத வெறிக்குள் மறைந்திருப்பது சாதிவெறியே என்பதை விளங்கிக் கொள்ளவேண்டும். இந்து மதவாதிகள் இசுலாத்தையும் கிறித்துவத்தையும் வெறுப்பது ஏன்? அவர்கள் வெறுப்பது அல்லாவையோ இயேசுவையோ அல்ல. அந்த மதங்களில் சேர்ந்த கீழ்சாதியினர், இழிகுலத் தவர் மீதான வெறுப்புதான் அந்த மதங்களின் மீதான வெறுப்பாக வெளிப்படுகிறது. இப்படிப் பார்க்கும்போது காந்தி மீதான வன்மத்தின் வேர் மூலம் சிறுபான்மை, மதங்களில் சேர்ந்த மக்கள் மீதான வெறுப்பின் வெளிப்பாடுதான். முசுலிம்களிடம் காந்தியாரின் பரிவு என்பதும் முசுலிமாக மாறிய எளிய ஒடுக்குண்ட மக்கள் மீதான பரிவாகவே புரிந்து கொள்ளப்படும். இது காந்திக்குப் புரிந்ததோ இல்லையோ சவர்க்கருக்கும் கோட்சேக்கும் புரிந்திருந்தது. தெளிந்த சாதியொழிப்புப் பார்வையே இல்லா விட்டாலும் காந்தியாரின் உயிரீகம் இந்துமத வெறிக்கு எதிரானது மட்டுமல்ல; பார்ப்பன வர்ண-சாதிவெறிக்கும் எதிரான ஒன்று.

**அரசமைப்பின் அடிப்படைக் குறை**

அரசமைப்புச் சட்டவரைவில் அம்பேத்கரின் உழைப்பும் பங்களிப்பும், அடிப்படை உரிமைகள், சமூகநீதி தொடர்பான சில முகன்மைக் கூறுகளைச் சேர்ப்பதில் அவரது பங்கு, பேரவையில் ஒவ்வொரு விதியையும் முன்மொழிந்து விவாதங் களுக்கு விடைசொல்லி நிறைவேற்றிக் கொடுத்த பாங்கு எல்லாம் தெரிந்த செய்திகளே. ஆனால், இத்தனையும் இருப்பினும், அரசமைப்பின் அடிப்படைக் குறைபாட்டை அவர் நன்கு உணர்ந்திருந்தார் என்பதற்குப் பேரவையில் 1946 நவம்பர் 25ஆம் நாள் அவர் ஆற்றிய உரையே சான்று. சமூகப் பொருளியல் ஏற்றத்தாழ்வின் அடித்தளம் மீதுதான் அரசியல் குடியாட்சியம் கட்டப்பட்டுள்ளது என்றார். அரசியல் குடியாட்சியம் போதாது, சமூகக் குடியாட்சியம் தேவை என்றார். இந்திய அரசமைப்புச் சட்டம் என்பது இறுதிநோக்கில் வல்லரசிய அரசமைப்புகளின் தொடர்ச்சியே. 1935 இந்திய அரசாங்கச் சட்டத்தின் 321 உறுப்புகளில் 250 உறுப்புகள் புதிய (1950) அரசமைப்புச் சட்டத்திலும் பெரும்பாலும் அப்படியே பார்த் தெழுதப்பட்டன. புதிய சட்டத்தின் மொத்த உறுப்புகள் 395.

புதிய அரசமைப்புச் சட்டத்தின்மீது அம்பேத்கர் கொண்ட சார்பியல் நம்பிக்கையும் முழுதாக மூன்றாண்டு கூட நீடிக்கவில்லை. பிற்பட்டோர் நலன், பெண்ணுரிமை உள்ளிட்ட கோரிக்கைகள் மதிக்கப்படாததால் 1951 செப் டம்பரில் அவர் நேரு அமைச்சரவையிலிருந்து விலகினார். இந்திய அரசு யாருடைய பிடியில் இருக்கிறது என்ற தெளிவு அவருக்கிருந்தது. அவர் நாடாளுமன்ற மாநிலங்களவை யிலேயே சொன்ன செய்திகளைப் பாருங்கள் :

**பேய் புகுந்த கோயில்**

இந்த அரசமைப்பின் சிற்பி என்று என்னைச் சொல்லாதீர்! காங்கிரசார் இதனை எழுத என்னைக் கூலிக்காரனாக அமர்த்தியிருந்தனர்! இந்த அரசமைப்பினால் யாருக்கும் எவ்வித நன்மையும் இல்லை! இதைக் கொளுத்துவதா னால் முதல் ஆளாக நானே கொளுத்துவேன். கடவுளைக் குடிவைக்கக் கோயில் கட்டினோம். பேய் குடிபுகுந்துவிட்டது என்னும் போது கொளுத்தாமல் என்ன செய்ய? இவை எல்லாம் அம்பேத்கர் சொன்னவை!

இந்திய அரசமைப்பின் 17ஆம் உறுப்பு தீண்டாமை ஒழிக்கப்பட்டுவிட்டது என்று அறிவித்தது. ஆனால் தீண்டா மைக்கு அடிப்படையான சாதி ஒழிக்கப்படவில்லை. சாதியை ஒழிக்காமல் தீண்டாமையை ஒழிக்க முடியாது என்பது அம்பேத்கர் அறியாததன்று. இந்திய அரசமைப்புச் சட்டத்தை அம்பேத்கர் பெயரால் புனிதப்படுத்துவதும் நியாயப்படுத்து வதும் அபத்தம்.

இந்திய அரசமைப்புச் சட்டம் சாதி யொழிப்புச் சட்டமல்ல என்பதற்குப் பெரிய விளக்கம் தேவை இல்லை. இந்தச் சட்டம் நிறுவிய இந்தியக் குடியரசை சாதிக் குடியரசு என்றே குறிப்பார் ஆனந்த் தெல்க்தும்ப்தே.

**பௌத்தம்**

அம்பேத்கர் இறப்பதற்கு 53 நாள் முன்னதாக 1956 அக்டோபரில் 4 இலட்சம் பேருடன் பௌத்தத்தில் இணைந் தார். அது இந்துவியத்துக்கு எதிரான அவரது இறுதிக் கலகம் என்றுதான் சொல்ல வேண்டும். இது தான் சாதி ஒழிய வழி என்று அவர் வரையறுக்கவில்லை.

இந்துச் சமூகம் பற்றிய அவரது பகுத்தாய்வு, இந்திய அரமைப்பின் மீதான நம்பிக்கை இழப்பு, குமுகக் குடியாட் சியம் பற்றிய அவரது பார்வை அனைத்துக்கும் மேலாக கல்வி, கிளர்ச்சி, அமைப்பாக்கம் (அறிவூட்டி உணர்வூட்டி அணி திரட்டல்) ஆகியவற்றின் அடிப்படையில் சாதியொழிப்புக்கு வழிகாணும் பொறுப்பு நமக்குள்ளது.


● *(சிந்தனையாளன் பொங்கல் மலர்-2023 இடம் பெற்றக் கட்டுரை)*

## பெண் விடுதலைப் போராளி

# மூவலூர் மூதாட்டி இராமாமிர்தம் அம்மையார்

- மரு. க. சோமாஸ் கந்தன்

பத்தொன்பதாம் நூற்றாண்டில் பெண்களின் நிலை மிகவும் கவலை கொள்ளத்தக்கதாகவே இருந்து வந்துள்ளது. அந்நாளில் பெண்கள் அடிமைகளாயிருந்து ஆண்களுக்குப் பணிவிடை செய்து வாழ்ந்து வந்துள்ளனர். அவர்கள் பள்ளிப்படிப்பு ஐந்தாம் வகுப்போடு முடிந்துவிடும். அதன்பின் ஏட்டைத் தொடுவதும் தீமையென்று வீட்டில் பூட்டி வைக்கப் பட்டனர். சிறு வயதிலேயே பெண்களுக்குத் திருமணம் முடிக்கப்பட்டது. எண்ணத்தில், பேச்சில் செயலில் சிறிதும் தன்னுரிமை இல்லாத அவலத்துடன் வாழ்ந்து வந்துள்ளனர்.



மூவலூர் மூதாட்டி இராமாமிர்தம் அம்மையார்

அம்மட்டோ! பிற்காலச் சோழர் ஆட்சியில்தான் பல கோயில்கள் எழுப்பப்பட்டன. அந்தக் கோயில்களில் பணிசெய்வதற்கென்று ஒரு குறிப்பிட்ட சமூகப் பெண்களைச் சிறுவயதிலேயே கடவுளுக்குக் காணிக்கை யென்று பொட்டுகட்டி நேர்ந்துவிட்டு விடுவார்கள். அவர்கள் இசையும் நாட்டியமும் நன்கு பயின்றிருந்தனர். ஆனால் அவர்கள் திருமணம் செய்து கொள்ள உரிமையற்று இருந்தனர். அவர்கள் ஊர்ப்பெரிய மனிதர்களின் அல்லது செல்வந்தர்களின் ஆசை நாயகிகளாக வலுக்கட்டாயமாக ஆக்கப்பட்டனர்.

சோழப்பேரரசில் ஆலயங்கள் அனைத்துமே சனாதன பிராமணர்களின் வேத ஆகம ஆதிக்கத்துக்கு உட்படுத்தப் பட்டன. பிராமணர்களுக்கு தேவதானங்களாகவும் பிரமதேயங்களாகவும் ஏராளமான நிலங்கள் வழங்கப் பட்டன. அதனால் அவர்கள் செல்வச் சீமான்களாக-குட்டி ஜமீந்தார்களாக மனம் போன போக்கில் வாழ்ந்து வந்துள்ளனர்.

அத்தகைய கொடிய நாள்களில், பெண்ணடிமைத் தீருமட்டும் பேசுந்திருநாட்டு மண்ணடிமை தீருதல் முயற்கொம்பே என்றுணர்ந்த தமிழ்நாட்டுப் பெண்மணி ஒருவர் பெண்களின் உரிமைகளுக்கும் விடுதலைக்கும் குரல் கொடுத்தார்.

### பிறப்பு

பெண் விடுதலைக்குக் குரல் கொடுத்த அந்தப் பெண் இசைவேளாளர் குடும்பத்தில் திருவாரூர் மாவட்டம் கீரனூர் என்ற ஊரின் அருகில் இருந்த பாலூர் என்ற சிற்றூரில் 1883ஆம் ஆண்டு பிறந்தார். அந்தக் குழந்தையின் பெயர் இராமாமிர்தம். தந்தை கிருஷ்ணசாமி, தாய் சின்னம்மாள். பிறந்த ஊர் பாலூர் என்ற போதிலும் அவர் தன் இளமைக் காலத்தில் வாழ்ந்த ஊர் மூவலூர் ஆதலால் பிற்காலத்தில் மூவலூர் மூதாட்டி என அழைக்கப்பட்டார்.

### இளமைக் காலம்

கொடிது கொடிது வறுமை கொடிது அதனினும் கொடிது இளமையில் வறுமை - என்பதற்கிணங்க இராமாமிர்தம் அம்மையார் இளமைக் காலத்தில் வறுமையில் வாடினார். இசை வேளாளர் குடியில் பிறந்து வறுமையில் வாடிய போதிலும், இராமாமிர்தம் பெற்றோர், தங்களின் மகளை தேவதாசி வாழ்க்கையை மேற்கொள்ள அனுமதிப் பதில்லை என்று உறுதியுடன் இருந்தனர். அதனால் தம் மகளுக்கு இசையையும் நாட்டியத்தையும் கற்றுக் கொடுப்ப தில்லை என்று உறுதி கொண்டனர். உறவினரும், மற்றவர்களும் எவ்வளவோ சொல்லியும் தம் முடிவிலிருந்து மாறாமல் இருந்தனர். அதனால் ஊராரின் பகைக்கு ஆளானார்கள். அவர்களை அவர்களின் சமூகமும் கூட விலக்கி வைத்துவிட்டது. பொருளாதார ரீதியில் கிருஷ்ணசாமி தனிமைப்படுத்தப்பட்டார். வருமானத்திற்கு வழியில்லை; குடும்பத்தைக் காப்பாற்ற வழிவகை தெரியாமல் திகைத்தார். வாழ்க்கையில் வெறுப்புற்று மனைவி யையும் மகளையும் தவிக்கவிட்டு விட்டு, விலகி வேலை தேடி சென்னை நோக்கிப் போய்விட்டார்.

ஐந்து வயது குழந்தையுடன் தாய் சின்னம்மாள் ஆதரவற்ற நிலையில் தவித்தாள், தன் மகன் காணவில்லை என்றதும் கிருஷ்ணசாமியின் தாய் நோயுற்றாள்; அதே ஏக்கத்தில் மாண்டுவிட்டார். கண வனும் இல்லை; மாமியாரும் இறந்துவிட்டார். குழந் தையோடு தனிமரமாய் நின்றார் சின்னம்மாள். வறுமை அவர்களை வாழவிடவில்லை. குழந்தையை யாரிட மாவது கொடுத்து விடலாம்; குழந்தையாவது நலமாக வளரட்டும் என்று தாய் சின்னம்மாள் தீர்மானித்து விட்டார். இந்த எண்ணத்தோடு குழந்தையுடன்

மூவலூர் சென்றார். அங்கே ஒரு தேவதாசியிடம் பத்து ரூபாயும் ஒரு பழைய புடவையையும் பெற்றுக் கொண்டு அகவை ஐந்தே ஆன குழந்தை இராமாமிர்தத்தை அவரிடம் கொடுத்துவிட்டார்.

மூவலூர் இராமாமிர்தம் அம்மையாரின் இளமைப் பருவம் மூவலூரில் தொடங்கியது.

ஐந்தே வயதான குழந்தை இராமாமிர்தத்தைப் பெற்றுக் கொண்ட தேவதாசி ஆச்சிக்கண்ணு, தன் குலத்தொழிலுக்குத் தேவையான கல்வியைத் தர விரும்பி, அதற்காக ஏற்பாடு செய்தார். கர்நாடக இசை யையும் நாட்டியமும் கற்பிக்க பேரளம் சுயம்பு பிள்ளையை ஏற்பாடு செய்தார். அவரிடம் பயின்றதால், இராமாமிர்தம் அகவை பத்தில் இசையிலும் நாட்டியத்திலும் நன்கு தேர்ச்சி பெற்று விளங்கினார். அவர் தமிழ், தெலுங்கு, சமஸ்கிருதம் ஆகிய மொழிகளிலும் தேர்ச்சி பெற்று விளங்கினார்.

பதினேழாவது வயதில் இராமாமிர்தத்துக்குக் கோயிலில் பொட்டுக் கட்ட ஆச்சிக்கண்ணு விண்ணப்பம் செய்தார். அந்தக் கோயிலில் இருந்த தேவதாசிகள், இராமாமிர்தம் வெளியூரிலிருந்து வந்த ஆண்வழி வாரிசு என்று கூறி பொட்டுக் கட்ட எதிர்ப்புத் தெரி வித்தனர். இதனால் இராமாமிர்தம் தேவதாசியா வதிலிருந்து தப்பிப் பிழைத்தார்.

அதன்பின் வளர்ப்புத் தாய் ஆச்சிக்கண்ணு, எண்பது வயதான முதியவருக்கு இராமாமிர்தத்தை மணமுடிக்க முயற்சிகள் மேற்கொண்டார். இந்த விருப்பமில்லா கட்டாயத் திருமணத்திலிருந்து தப்பிக்கத் துணிவோடு வீட்டிலிருந்து வெளியேறி, இசையும் நாட்டியமும் கற்பித்த ஆசிரியர் பேரளம் சுயம்புப் பிள்ளையைச் சந்தித்துத் தன் நிலையை எடுத்துக் கூறியும், அவரைத் தான் மணந்து கொள்ள விரும்பு வதையும் எடுத்துக்கூறினார். அதன் பின் **இருவரும் வழுவூர் ஆலயம் சென்று நெய் விளக்கேற்றி, இருவரும் ஒருவரைவிட்டு ஒருவர் பிரிவதில்லை என்று உறுதி எடுத்துக்கொண்டு இணைந்தனர். இத்திருமணத்திற்கு சாட்சியாக இருந்தவர் மூவலூர் மார்க்கசகாய சுவாமி கோயிலின் காப்பாளராக இருந்த வேணுபடையாட்சி ஒருவர் மட்டுமே.**

**இந்தத் திருமணத்தில் சாதி சமயச் சடங்குகளை யும் மூடப் பழக்கங்களையும் மேற்கொள்ளாமல் இருவரும் மனமொத்த வாழ்க்கைத் துணைவர் களாக இணைந்தனர், இத்திருமணம் சுயமரியாதைத் திருமணங்களுக்கு முன்னோடியாக அமைந்தது.**

திருமணத்திற்குப் பின்னும் துன்பம் தொடர் கதையாகத் தொடர்ந்தது.

இந்தத் திருமணத்தை ஏற்க விரும்பாத தாசி வகுப்பார் அவர்களின் வாழ்வைச் சிதைக்க வழிசெய்தனர். இராமாமிர்தம் ஒரு இளம் பெண்ணைக் கொலை செய்துவிட்டார் என்று பழி சுமத்தி வழக்குத் தொடர்ந்தனர். காதல் கணவர் துணையுடன் வழக்கினை எதிர்கொண் டார். கொலை செய்யப்பட்டதாகக் கருதப்பட்ட பெண்ணைக் கண்டுபிடித்து நீதிமன்றத்தில் நிறுத்தினார்; சதிச் செயல் புரிந்தவர்களை இனங்கண்டு தண்டனையும் பெற்றுத் தந்தார் இராமாமிர்தம்.

இராமாமிர்தத்தின் வளர்ப்புத் தாய் ஆச்சிக்கண்ணு காலரா கண்டு இறந்துவிட்டார். அவர் தன்னுடைய சொத்துக்களை இராமாமிர்தம் பெயரில் எழுதி வைத் திருந்தார். அதனால் பொருளாதாரத்தில் சிறிது முன்னேற்றம் கண்டதும் தன் தாயையும் தந்தையையும் அழைத்துக் கொண்டார். அப்போது இராமாமிர்தத்துக்கு வயது இருபத்தைந்து (1908).

1917ஆம் ஆண்டுமுதல் கணவரின் துணையோடு மயிலாடுதுறையில் தேவதாசி முறைக்கு எதிரான தனது போராட்டத்தைத் தொடங்கினார். தேவதாசி முறைக்கு எதிராகத் தெருவோரப் பரப்புரைகளில் ஈடுபட்டார். தேவதாசி வாழ்க்கை இழிவானது. அந்த இழிவான வாழ்விலிருந்து தேவதாசிப் பெண்கள் தங்களை விடுவித்துக்கொள்ள வேண்டும் என்று பரப்புரையாற்றினார், தேவதாசிகள் வாழ்வியல் நெறிகள், மதம், சாஸ்திரம், சம்பிரதாயம், புராண இதிகாசங்கள் அடிப்படையில் அமைந்துள்ளன. ஆதலால் அவற்றின் மீது கொண்ட மூடநம்பிக்கைகள் ஒழிக்கப்பட்டு, தேவதாசிப் பெண்கள் விடுதலை பெறுதல் வேண்டும் என்றும் முழக்கமிட்டு வந்தார். அல்லும் பகலும் இராமாமிர்தம் அம்மையார் வழுக்கி விழுந்த பெண்களின் நிலை குறித்தே சிந்தித்துச் செயலாற்றி வந்தார். **அந்தப் பெண்களை உறுப்பினர்களாகக் கொண்ட நாகபாசத்தார் சங்கம் என்ற அமைப்பினை உரு வாக்கினார். அச்சங்கத்தின் முக்கிய நோக்கம், தேவதாசிப் பெண்களை விடுவித்து அவர்களை திருமண வாழ்வில் ஈடுபடுத்துவதாகும். இச்சங் கத்தின் சார்பில் இரண்டு மாநாடுகளை நடத்தினார். இச்சங்கத்தின் பெயர் பின்னர் இசை வேளாளர் சங்கம் என மாற்றப்பட்டது. இதனால் அவர் சந்தித்த எதிர்ப்புகள் ஏராளம்.**

காங்கிரஸ் தலைவர் சத்தியமூர்த்தி போன்ற சனாத னவாதிகள், பெருஞ்செல்வந்தர்கள், கோயில் அர்ச்சகர்கள் என்று பல தரப்பினரும் இராமாமிர்தத்தின் போராட்டத்தை ஒடுக்கவே முயன்றனர். யாரின் நல்வாழ்வுக்காகப் பாடுபட்டாரோ, அந்தத் தேவதாசி இனத்தவரேகூட அவருக்குக் கடும் எதிர்ப்புத் தெரிவித்தனர்.

தெருவோர மேடைப் பேச்சோடு நாடகக் கலையின் மூலமும் தன் கருத்துகளை வலியுறுத்தி வந்துள்ளார். அதனைப் பொறுக்காத பழைய பஞ்சாங்கங்கள் கடும் எதிர்ப்பைக் காட்டினர்; வன்முறையாளர் மேடை மீது ஏறி அவர் கூந்தலை அறுத்தனர். பின்னொரு முறை பாலில் நஞ்சு கலந்து கொலை செய்திடவும் முயன்றனர்.

ஆனாலும் அவர் மலை குலைந்தாலும் மனம் குலையா உறுதியுடன் தன் கொள்கைப் போராட்டத் தைத் தொடர்ந்தார்.

**காங்கிரஸில்**

அரசியல் பின்னணி இல்லாமல் சமூக மாற்றங் களைக் கொண்டுவருவது கடினம் என்று அம்மையார் புரிந்து கொண்டார். கணவர் சுயம்புப் பிள்ளை காங்கிரசுப் பற்றுடையவர் என்பதால் காங்கிரசு இயக்கங்களில் பங்கு கொண்டார். அம்மையாருக்கு விடுதலை வேட்கை நிரம்ப இருந்த போதிலும் பெண் விடுதலையையே முதன்மை நோக்கமாகக் கொண்டிருந்தார்; முதன்மைப் பணியாகவும் கொண்டு செயல்பட்டார். தமது முப்பத்து எட்டாவது அகவையின் போது காங்கிரசில் சேர்ந்தார் (1921). அப்போது காங்கிரஸ் கட்சியில் இருந்த பெரியார், திரு.வி.க., வரதராஜுலு போன்றவர்கள் தேவதாசி முறை ஒழிப்புக்காகக் குரல் கொடுத்து வந்தனர். அவர்களால் ஈர்க்கப்பட்டதும் காங்கிரசில் இராமாமிர்தம் இணைந்ததற்கு ஒரு காரணம்.

பேரளத்தில் காங்கிரசு மாவட்ட மாநாடு திரு.வி.க. தலைமையில் நடைபெற்றது. அந்நாளில் காங்கிரசின் ஒரே பெண் பேச்சாளரான இராமாமிர்தம் கலந்து கொண்டு தேவதாசிகளை மீட்டு அவர்களுக்கு நல் வாழ்வினை வழங்க வேண்டுமென்று சிறப்பாகச் சொற்பொழிவாற்றினார். அவர் பேச்சைக் கேட்ட தாசிகள் சிலர், தாசித் தொழிலை விட்டுவிட முன்வந்தனர், அம்மையார் மெத்த மகிழ்ந்தார்.

காந்தியார், வீட்டு வேலைகளுக்கு ஆதித்திராவிடர் களைப் பணியில் அமர்த்தவேண்டும், என்று அறிவித் தார். இராமாமிர்தம் அம்மையார் தன் வீட்டுப் பணி களுக்கு இரத்தினம் என்ற ஆதித்திராவிடப் பெண்ணை அமர்த்திக் கொண்டார்.

காங்கிரசில் பிராமணர்கள் ஆதிக்கம் மிகுந்திருந்தது. அவர்கள் தேவதாசி முறை ஒழிப்பிற்கு எதிராக இருந்தனர்.

பெரியாரின் வகுப்புரிமைத் தீர்மானம் அவர்களுக்கு எட்டிக்காயாக இருந்தது. 1919 முதல் 1925 வரை தொடர்ந்து காங்கிரஸ் மாநாடுகளிலும் கமிட்டிக் கூட்டங் களிலும் வகுப்புரிமைக்காகப் போராடி வந்தார் பெரியார். தமிழ்நாடு காங்கிரசின் செயலாளராகவும் தலைவரா கவும் திகழ்ந்த பெரியாரின் வகுப்புரிமை கோரிக்கை 1919 (திருச்சி), 1920 (திருநெல்வேலி), 1921 (தஞ்சை), 1922 (திருப்பூர்), 1923 (மதுரை, திருச்சி, சேலம்) ஆண்டுகளில் ஏற்கப்படவில்லை. பின்னர் 22-11-1925 இல் காஞ்சியில் நடைபெற்ற தமிழ்நாடு மாகாண காங்கிரசு மாநாட்டில் வகுப்புரிமைத் தீர்மானத்தைக் கொணர்ந்தார்; அத்தீர்மானம் வகுப்புவாதத் தீர்மானம் என்று சொல்லி நிராகரிக்கப்பட்டது. மாநாட்டுப் பந்தலி லேயே, காங்கிரசால் பிராமணர் அல்லாதார் நன்மை பெறமுடியாது, காங்கிரசை ஒழிப்பதே தம் வேலை என்று கூறி காங்கிரஸிலிருந்து பெரியார் வெளியேறினார். அவருடன் இராமாமிர்தம் அம்மையாரும் விலகினார்.

அன்றிலிருந்து சுயமரியாதை இயக்கம், திராவிடர் கழகம், திராவிட முன்னேற்றக் கழகம் எல்லாவற்றிலும் முறையே பணியாற்றி வந்திருக்கிறார். மூவலூர் இராமாமிர்தம் அம்மையாரும் டாக்டர். முத்துலட்சுமி ரெட்டி அவர்களும் நல்ல நண்பர்கள்.

மூவலூர் இராமாமிர்தம் அம்மையாரும், பெரியாரும், சுயமரியாதை இயக்கத்தாரும் தேவதாசி முறையை ஒழிக்கத் தீவிரமாக மக்களிடம் பரப்புரையாற்றி வந்த காலத்தில் டாக்டர். முத்துலட்சுமி ரெட்டி அவர்களும் சட்டமன்றத்தில், தேவதாசி முறை ஒழிப்புச் சட்ட மசோதாவை 1929ஆம் ஆண்டு பிப்ரவரி 2ஆம் நாள் பலத்த எதிர்ப்புகளுக்கிடையே நிறைவேற்றினார். இந்த மசோதாவை எதிர்த்து அன்றைய காங்கிரசு தலைவர் சத்தியமூர்த்தி ஐயர் பேசியது :

**“தாசிக்குலம் தோன்றியது நம்முடைய காலத்தில் அல்ல; நாமும் அந்தக் குலத்தைத் தோற்றுவிக்க வில்லை. வியாசர், பராசரர் காலத்திலிருந்து அந்தக் குலம் இருந்து கொண்டிருக்கிறது. இப்படிக் கூறுவதால் என்னைத் தாசிக்கள்ளன் என்றும் அழைக்கலாம். அதைப்பற்றி நான் கவலைப்படப் போவதில்லை. தாசிகள் இல்லையென்றால் சமூகத்தின் ஒழுக்கம் கெட்டுவிடும்.**

**எனவே இச்சமூகம் கெட்டுச் சீரழியாமல் இருக்க, தாசிகள் தேவை என்பதை திரும்பத் திரும்பச் சொல்ல விரும்புகின்றேன். தாசிகள் கோயில் பணிக்கென்று ஆண்டவனால் படைக்கப் பட்டவர்கள்.**

**அது சாஸ்திர சம்பந்தமானது. தாசிகளை ஒழித்துவிட்டால், பரதநாட்டியக் கலையும், சங்கீத மும் அழிந்துவிடும். ஆண்டவன் கட்டளையை மீறுவது அடாத செயலாகும். அநியாயமாகும். இன்று தேவதாசித் தொழிலை நிறுத்தினால், இராமசாமி நாயக்கர் அர்ச்சகர் தொழிலை நிறுத்தச் சட்டம் செய்ய வந்துவிடுவாரே” என்று பேசினார்.**

சத்தியமூர்த்தி, அந்நாளில் நாடறிந்த புகழ்பெற்ற, பேச்சாற்றல் மிக்க காங்கிரசு இயக்கத் தலைவர். அவர்

இவ்விதம் கேவலமாகப் பேசுவார் என்று எவரும் நினைத்திருக்கவில்லை.

இவர் பேச்சுக்கு டாக்டர் முத்துலட்சுமி ரெட்டி மிகத் தெளிவாகப் பதிலுரைத்தார். “கனம் எதிர்க்கட்சித் தலைவர் அவர்கள் தேவதாசி ஒழிப்புத் தீர்மானத்தைத் தீவிரமாக எதிர்த்துப் பேசியுள்ளார். உங்களுக்கு அக்கா, தங்கைகள் இல்லையா? பெண்கள் இல்லையா? மனைவி இல்லையா? உங்கள் குடும்பத்திலிருந்து எந்தப் பெண்களையாவது இதுபோன்ற தொழிலுக்கு அனுப்புவீர்களா? இதுநாள்வரை, பிற்பட்ட சமூகப் பெண்கள் தேவதாசிகளாக இருந்து கடவுளுக்குப் பணியாற்றியது போதும். இனி கோயில் பணிக்காக ஆண்டவனுக்குச் சேவை செய்திட மேல்சாதிப் பெண்கள் பொட்டுக் கட்டிக்கொள்ள முற்பட்டால், மகிழ்ச்சி” என்றார். அப்போது சட்டசபை அதிர்ந்து ஸ்தம்பித்து நின்றுவிட்டது.

இவ்வாறு 1929இல் தொடங்கிய தேவதாசி முறை ஒழிப்புக்கான முயற்சி 1947ஆம் ஆண்டு நவம்பர் 26ஆம் நாள் சட்டமாக்க தீர்மானித்து இப்பிரச்சனைக்கு முற்றுப்புள்ளி வைக்கப்பட்டது.

இராமாமிர்தம் அம்மையார் 1937 முதல் 1940 வரை நடைபெற்ற இந்தி எதிர்ப்புப் போரில் கலந்து கொண்டார்; அதற்காக 1938 நவம்பரில் ஆறு வாரங்கள் சிறையில் அடைக்கப்பட்டார்,

காங்கிரசு மேடைகளில் அந்த நாளில் ஒரே ஒரு பெண் மேடைப் பேச்சாளராக இருந்த மூவலூர் இராமாமிர்தம் அம்மையார் தேவதாசி முறை, குழந்தை மணம், உடன்கட்டை ஏறுதல் ஆகிய சமூகக் கொடுமைகளை எதிர்த்துப் பேசிவந்துள்ளார்; போராடி வந்துள்ளார்.

சுயமரியாதை இயக்கத்தில் பெரியாருடன் இணைந்து சமூகக் கொடுமைகளையும், சாதிய வேற்றுமைகளையும் கொடுமைகளையும், எதிர்த்துக் களமாடியுள்ளார்; மேலும் மூடநம்பிக்கைகள், மூடப்பழக்கவழக்கங்கள் ஆகியவற்றை எதிர்த்துப் பேசியும் எழுதியும் வந்துள்ளார்;

1936இல் தாசிகள் மோச வலை அல்லது மதிபெற்ற மைனர் என்ற புதினத்தை எழுதி வெளியிட்டார். இந்தப் புதினம் தேவதாசிகளின் அவல வாழ்வையும், தன் பட்டறிவுகளையும் அடிப்படையாகக் கொண்டு விறுவிறுப்பான நடையில் எழுதப்பட்ட நூலாகும். இந்த நூல் ஒரு வரலாற்று ஆவணமாகும்.

அவர் அண்ணா, சிவாஜி கணேசன், டி.வி. நாராயணசாமி ஆகியோரின் நாடகங்களில் அன்னை வேடத்தில் தொடர்ந்து நடித்தார்.

அவர் குடியரசு இதழில் பல பகுத்தறிவு கட்டுரைகள் எழுதியுள்ளார். அண்ணாவின் திராவிட நாடு இதழில் தமயந்தி என்றொரு சிறுகதையும் எழுதியுள்ளார். இஸ்லாமும் இந்தியர்களின் நிலைமையும் என்ற நூலையும் எழுதியுள்ளார்.

அரசியலிலும், கலைத்துறையிலும், சமுதாய சீர்கேடுகளை ஒழிப்பதிலும் அம்மையார் தளராது இறுதி வரை பணியாற்றியுள்ளார். கண்பார்வை மங்கி விட்ட நிலையில், மயிலாடுதுறையில் தன் மகனுடன் சிறுவர்களுக்குப் பாடம் போதித்தப்படித் தன் இறுதிக் காலத்தைக் கழித்தார்.

அந்த உறக்கமறியா பெண் விடுதலைப் போராளி தன் எண்பதாவது அகவையில் 26-6-1962 அன்று மறைவுற்றார்.

**நினைவுத் திட்டம்**

1989ஆம் ஆண்டு கலைஞர் திரு. மு. கருணாநிதி தலைமையிலான தமிழ்நாடு அரசு 8ஆம் வகுப்பு வரை படித்த இளம் பெண்களின் திருமண நிதி தொகை ரூபாய் 5,000/-த்தை 1500 பெண்களுக்கு வழங்க முடிவு செய்தது. அதற்கு மூவாட்டி இராமாமிர்தம் அம்மையாரின் நினைவாக மூவலூர் இராமாமிர்தம் அம்மையார் நினைவு திருமண உதவித் திட்டம் என்று பெயர் சூட்டப்பட்டது.

**வாழ்க மூவலூர் மூதாட்டி புகழ்!**

**ஆடுகளைத்தான் பலியிடுகிறார்கள்; சிங்கங்களை அல்ல**



“பணிவாக வேண்டுதல் மூலமோ, உரிமைகளைப் பறித்தவர்களின் மனம் நெகிழ வேண்டும் எனக் கோருவதாலோ நாம் இழந்த உரிமைகளை என்றும் பெற முடியாது; இடையறாத போராட்டங்களின் மூலம்தான் உரிமைகளைப் பெறமுடியும்”.

**- டாக்டர் பி.ஆர்.அம்பேத்கர்**

நூல் அறிமுகம்

# நரக மாளிகை

## ஓர் ஆர்.எஸ்.எஸ். முன்னாள் ஊழியரின் வாக்குமூலம் சுதீஷ் மின்னி மலையாளத்தில் எழுதியதன் தமிழாக்க நூல்

- சா.குப்பன்


கேரளத்தின் வடக்கில் கடலோர மாவட்டம் கண்ணூர். இம்மாவட்டத்தில் தலைச்சேரி வட்டத்தில் கண்டங்குந்து ஊரின் பகுதியான ஆயித்தரையில் நடுத்தர உழவர் குடும்பத்தில் பிறந்து, 5 அகவையில் வீட்டிலிருந்து ஒரு கி.மீ. தொலைவில் வயல்வெளியில் நடக்கும் சாகாவுக்கு தன் அம்மாவால் தூக்கிக் கொண்டு போய்விடப்பட்டவர் சுதீஷ் மின்னி.

5 அகவையில் தொடங்கி, கணிதத்தில் முதுநிலைப் பட்டம் பெற்று, ஆர்.எஸ்.எஸ்.இன் சுதேசி அறிவியல் இயக்கத்தினால் நடத்தப் பெறும் வேத கணிதத்தை 2½ ஆண்டுகள் கற்று, 'சாணக்கியா' என்ற தத்துவப் பிரிவில் 7 ஆண்டுகள் ஊழியராகப் பணியாற்றியவர் சுதீஷ் மின்னி. தலைமையிடமான நாக்பூரில் சிறப்புப் பயிற்சிப் பெற்று, 'பால கோகுலம்' அமைப்பின் கண்ணூர் மாவட்டத் தலைவராக ஓராண்டும் வடஇந்தியாவில் 2 ஆண்டுகளும் செயல்பட்டவர் சுதீஷ்.

ஆர்.எஸ்.எஸ்.இல் சுதீஷ் மின்னி கண்ட கொடுங் காட்சிகளையும் அடைந்த பட்டறிவையும் எடுத்துரைக் கும் "நரக மாளிகையின் இரகசிய அறைகள்" (நரகத் தின் உள்ளுறுப்புகள்) நூல் மலையாளத்தில் 2015இல் வெளியானது. கே. சதாசிவன் தமிழாக்கிய இந்நூல் "நரக மாளிகை" எனும் தலைப்பில் 2021-இல் வெளியிடப்பட்டது. மலையாளத்தில் வெளியிட்ட 4 மாத காலத்திற்குள் 15000 படிகள் விற்பனையான நூல், ஓர் இலட்சம் படிகளைக் கடந்து விற்பனையாகிக் கொண்டுள்ள நூல்.

தென்மாநிலங்களில் ஆர்.எஸ்.எஸ்.அய்ப் பரப்புவ தற்காக 1965-இல் குமரியில் 'விவேகானந்தர் மய்யம்' (கேந்திரம்) என்ற அறக்கட்டளை நிறுவப்பட்டது. மராத்தியப் பார்ப்பனரான ஏக்நாத் ராணடே இதற்கென அனுப்பப்பட்டு திருவனந்தபுரத்தைத் தலைமையிட மாகக் கொண்டு செயல்பட்டார். அந்த அறக்கட்டளை யால் அமைக்கப்பட்டு, பராமரிக்கப்பட்டு வருவதுதான் குமரியில் விவேகானந்தர் நினைவு மண்டபம். இந்தியாவின் பல பகுதிகளிலிருந்து அனுப்பப்படும் ஆர்.எஸ்.எஸ். ஊழியர்களுக்கு அந்த மய்யம் யோகா பயிற்றுவித்துக் கொண்டுள்ளது.

1925இல் நாக்பூரில் கே.பி. எட்கேவர் என்ற பார்ப்பனரால் ஆர்.எஸ்.எஸ். தொடங்கப்பட்டது. இதன் குருவாகக் கருதுப்படுபவர் மராத்தியப் பார்ப்பனரான




**பக்கங்கள் : 150 ★ விலை ரூ.150/-**

**பரிசல் புத்தக நிலையம்**

அரும்பாக்கம், சென்னை - 600 106.

தொடர்புக்கு : 9382853646, 8825767500

மாதவ சதாசிவ (எம்.எஸ்.) கோல்வால்கர். செருமனியின் இட்லர், இத்தாலியின் முசோலினி ஆகியோர் சிந்த னைகள்-செயல்களை அடியொற்றி, பண்பாட்டு தேசியம், இந்து நாடு, அகண்ட பாரதம் என்பதை முன்வைத்து கோல்வால்கர் ஆர்.எஸ்.எஸ்.அய் கட்டமைத்தார். ஆர்.எஸ்.எஸ். அமைப்பு இராணுவம் போன்ற பயிற்சி களைத் தம் தொண்டர்களுக்கு அளித்து வருகிறது. இராணுவத்தில் எப்படி உயர்நிலை அலுவலர்களைக் கீழ்நிலைகளில் உள்ளவர்கள் கேள்வி கேட்க முடியாதோ அதேபோல் ஆர்.எஸ்.எஸ்.இலும் உயர்நிலைப் பொறுப் பாளர்களைக் கீழ்நிலையில் உள்ளவர்கள் கேள்வி கேட்க முடியாது. மேலே இருந்து வரும் கட்டளை களைக் கீழ்நிலை அமைப்புகள் கேள்வி கேட்காமல் நிறைவேற்றிட வேண்டும்.

இராணுவ அணிவகுப்பைப் பார்வையிட உயர் அதிகாரிகள் வரும்போது மரியாதை வணக்கம் செலுத்து வதைப் போல ஆர்.எஸ்.எஸ். பயிற்சியை மேற்பார் வையிட உயர்நிலைப் பொறுப்பாளர்கள் வரும் போது

‘பிரணாம்’ என்ற சடங்குமுறை மரியாதை வணக்கம் செய்தல் வேண்டும்.

ஆர்.எஸ்.எஸ்.இல் கிளை, ஊர், வட்டம், மாவட்டம், மாநிலம், மண்டலம், தேசம் என சமற்கிருதப் பெயர்களில் அமைப்புகள் உள்ளன. கருநாடகம், கேரளம், தமிழ்நாடு மூன்றும் ஒரு மண்டலம் (கேந்திரம்). இதுபோல் இந்தியா 10 மண்டலங்களைக் கொண்டது. ஏராளமான சார்பு அமைப்புகளும், துணை அமைப்புகளும் வெவ்வேறு பெயர்களில் இயங்குவதோடு அல்லாமல் அங்கங்கே அறக்கட்டளைகள் பலவும் இயங்குகின்றன.

1956இல் தொடங்கப்பட்ட ‘வித்யாபாரதி’ பள்ளிகள் இந்தியா முழுவதும் நடத்தப்படுகின்றன. கேரளத்தில் இதன் பெயர் ‘வித்யா நிகேதன்’. கேரளத்தில் 5000 இடங்களில் சாகா பயிற்சிகள் நடத்தப்படுகின்றன. ஆர்.எஸ்.எஸ். கேரளத்தில் நடத்தும் 150 வித்யா நிகேதன் பள்ளிகளிலும் சாகா பயிற்சிகள் உண்டு. கிறிஸ்துமஸ் விடுமுறை நாட்களில் 7 நாள்கள் சிறப்பு முகாம் ஆங்காங்கே பள்ளி வளாகங்களில் நடத்தப்படுகின்றன. கோடை விடுமுறையில் 25 நாள் முகாம் பல கல்லூரி வளாகங்களில் நடத்தப்படுகின்றன. இவையன்றி சங்க ஊழியர்களுக்குச் சிறப்புப் பயிற்சி முகாம்கள் நடத்தப்படுகின்றன.

இந்நூலாசிரியர் சுதீஷ் ஆர்.எஸ்.எஸ்.இல் பல நிலைகளில் செயல்பட்டு, மும்பை மய்யத்திலிருந்து போபால், அசாம் முதலான இடங்களுக்குச் சென்று, அங்கு கண்ட காட்சிகளாலும், பார்ப்பன-பனியா உயர்சாதியினரின் ஆதிக்கம் நிறைந்த, சனநாயகமற்ற செயல்பாடுகளாலும் வெறுப்புற்று வெளியேறி, இப்போது சி.பி.எம். கட்சியில் இணைந்து செயல்படுகின்றார். ஆர்.எஸ்.எஸ். பற்றி வெளி உலகம் அறிந்திராத பல காட்சிகளை இந்நூலில் பகிர்ந்துள்ளார்.

இசுலாமியர், கிறித்துவர், பொதுவுடைமையர் ஆகிய 3 பிரிவினரும் இந்துக்களின் எதிரிகள்; அழித்தொழிக்கப்பட வேண்டியவர்கள் என்று ஆர்.எஸ்.எஸ். -இந்துக்களுக்கு இடைவிடாது கற்பித்துக் கொண்டுள்ளது. கேரளத்தில் ஆர்.எஸ்.எஸ். குறிப்பிடும் 3 பிரிவினரும் எண்ணிக்கையில் அதிகம். 2011 மக்கள் தொகை கணக்கெடுப்பின்படி கேரளத்தில்,

| | | |
|---|---|---|
| இந்துக்கள் | - 54.73% | (182.82 இலட்சம்) |
| இசுலாமியர் | - 26.56% | (88.73 இலட்சம்) |
| கிறித்துவர் | - 18.38% | (61.41 இலட்சம்) |

தமிழ்நாட்டில் இந்துக்கள் : 87.58%, இசுலாமியர் : 5.86%, கிறித்துவர் : 6.12%, இந்தியாவில் இந்துக்கள் : 80%, இசுலாமியர் : 14.27%, கிறித்துவர் : 2.3%.

மக்கள் தொகையில் 80 விழுக்காடாக உள்ள இந்துக்களிடம் இந்துக்களுக்கு ஆபத்து; இந்துத்துவத்திற்கு ஆபத்து என்ற பொய்யை இடைவிடாமல் பரப்புவது சங் பரிவார் பரப்புரையின் ஆணிவேர்.

**பாதை அல்ல, இலட்சியமே முக்கியம்**

திருட்டு, களவு, கொள்ளை, விபச்சாரம், கலவரம் ஏற்படுத்துதல், குண்டுவீச்சு, சொத்துக்களைச் சேதப்படுத்துதல், கொலை செய்தல், எதிரிகளிடம் பேரம் பேசி பணப்பெட்டி பெறல் என எல்லாத் தீயச் செயல்களிலும் ஈடுபடுவது சங்கிகளுக்கு மிக இயல்பானவை என்று பல சான்றுகளுடன் சுதீஷ் கூறியுள்ளார்.

சங்கத்திற்காகச் சாவது பலிதானம்; இறப்பவர் பலிதானி. அப்படி இறந்தவர் மனைவிக்கு சங்கம் மாதந்தோறும் உதவித் தொகை அளிக்கின்றது. உதவித் தொகை அளிக்க அந்த வீட்டிற்குச் செல்லும் ஊழியர் பலிதானியின் மனைவியுடன் தன் காம வேட்கையைத் தீர்த்துக் கொள்வார். பலிதானிகளின் மனைவியரையும் மற்ற பெண்களையும் பணத்திற்காக விபச்சாரத்தில் ஈடுபடுத்துவது என பலவற்றை சுதீஷ் இந்நூலில் பதிவு செய்துள்ளார்.

விசுவ இந்து பரிசத் தலைவர் கொலையுண்ட போது, எதிரிகளுடன் பேரம் பேசி பெட்டி நிறையப் பணம் பெற்று, சங்கத்திற்காகப் பத்தினம் திட்டையில் ‘சபரி’ என்ற பெயரில் பல ஏக்கர் நிலம் வாங்கப்பட்டது. சசி என்ற காரியவாக் கையில் வெடிகுண்டு கொண்டு வந்தபோது இடறி விழுந்ததில் குண்டு வெடித்து உடல் சிதறி இறந்துவிட்டார். அதை சி.பி.எம்.காரர்கள் கொலை செய்துவிட்டதாகத் திறமையாகப் பரப்புரை செய்தது போன்ற சங்கிகளின் செயல்களை அறிய இந்நூலைப் படித்திட வேண்டும்.

வித்யா பூசை, இலட்சுமி பூசை என நடத்தி பக்தி உணர்வூட்டி உருக்கமாகச் சொற்பொழிவுகள் நிகழ்த்தி மக்களை சங்க ஆதரவாளர்களாக்குவர். குருதட்சிணை என்ற பெயரில் கண்ணூர் ஒரு மாவட்டத்தில் மட்டும் 17 கோடி உருவா திரட்டுவர். அதில் உள்ளூர் செலவுகள் போக மீதியை நாக்பூர் தலைமைக்கு அனுப்பிட வேண்டும். குசராத்தில் குரு தட்சிணையாக மட்டும் உருபா 1000 கோடி வசூலாகும். இந்து விசுவ விபாக் என்ற பெயரில் அயல்நாடுகளில் இயங்கும் சங்க அமைப்புகள் மின்னணு பொருள்களாகவும் பணமாகவும் திரட்டி நாக்பூருக்கு அனுப்புகின்றன. கோடிக்கணக்கான மதிப்புள்ள சொத்துகள் உடைய உலகிலேயே மிகப் பெரிய அமைப்பு ஆர்.எஸ்.எஸ். ஆகும்.

சங்கத்தில் பலவகைப் பொறுப்புகளில் பல ஆண்டுகள் பணியாற்றுவதற்கோ, சங்கத்தின் மேல் அமைப்புகளிடம் இருந்து வரும் கட்டளைகளுக்கோ, மற்ற நடவடிக்கைகளுக்கோ எந்தப் பதிவும் கிடையாது என்பதே நடைமுறை. கட்டாயம் படிக்க வேண்டிய நூல். ●

## விடுதலைத் தமிழ்ப்புலிகள் கட்சி நடத்திய சனாதன எதிர்ப்புப் போராட்ட களப்போராளி எழுச்சித் தமிழருக்கு மணிவிழா



விடுதலைத் தமிழ்ப்புலிகள் கட்சி சார்பில் சனாதன எதிர்ப்புப் போராட்டக் களப்போராளி எழுச்சித் தமிழருக்கு மணிவிழா 18.3.2023 சனிக்கிழமை மாலை 6 மணிக்கு சென்னை சாந்தோம் சி.எஸ்.ஐ. காது கேளார் மேல்நிலை வளாகத்தில் குடந்தை அரசன் தலைமை யில் நடைபெற்றது. ரேடியோ வெங்கடேசன் முன்னிலை வகித்தார். இரா. நல்லகண்ணு, இரா. முத்தரசன், ஜி. இராமகிருட்டிணன், பிரவின் பொழிலன், கே.எம். செரீப், பேரா. செயராமன், வாலாசா வல்லவன் உள்ளிட்டோர் உரையாற்றினர். இறுதியில் தொல். திருமாவளவன் அவர்கள் ஏற்புரையாற்றினார்.

❖❖❖❖❖❖❖❖❖❖❖❖❖❖❖❖❖❖❖❖❖❖❖❖❖❖❖❖

## வாழ்க்கை ஒப்பந்த விழா

### ச. லெனின் கல்யாண் - மு. பரணிதேவி



விருத்தாசலம் தோழர் க. சண்முகம் - ச. புஷ்பா, ச. சபிதா இணையரின் மகன் ச. லெனின் கல்யாண் அவர்களுக்கும் வடலூர் ப. முருகன் - மு. ஆனந்தி இணையரின் மகள் மு. பரணி தேவி அவர்களுக்கும் வாழ்க்கை ஒப்பந்த விழா 26.3.2023 ஞாயிறு மாலை 6 மணிக்கு விருத்தாசலம் ஜி.என். மகாலில் மக்கள் அதிகாரம் பொதுச் செயலாளர் வழக்குரைஞர் சி. ராஜு அவர்கள் தலைமையில் நடைபெற்றது. க. சண்முகம் வரவேற்பு ரையாற்றினார். எழுத்தாளர்கள் இமையம், கரிகாலன், வழக்குரைஞர் திருமாறன், கோ.மு. கறுப்பய்யா, வாலாசா வல்லவன் ஆகியோர் வாழ்த்துரை வழங்கினர். மணமக்கள் ஒப்பந்த உறுதிமொழி ஏற்றவுடன் மாலை மாற்றுதலுடன் வாழ்க்கை ஒப்பந்த விழா இனிதே நிறைவேறியது. செ.கல்யாண் நன்றியுரையாற்றினார். மணமகன் குடும்பத்தினர் புதிய சிந்தனையாளன் இதழ் வளர்ச்சி நிதியாக ரூபாய் ஆயிரம் வழங்கினர்.

❖❖❖❖❖❖❖❖❖❖❖❖❖❖❖❖❖❖❖❖❖❖❖❖❖❖❖❖

## வேலூர் ம.நாராயணனுக்கு தமிழ்ச்செம்மல் விருது



தமிழ்நாட்டு அரசின் தமிழ் வளர்ச்சித் துறை ஆண்டு தோறும் தமிழ்த் தொண்டாற்றுபவர்களுக்கு விருதுகள் அளித்து வருகிறது.

2022ஆம் ஆண்டுக்கான தமிழ்ச்செம்மல்விருது முனைவர் வேலூர் ம.நாராயணன் அவர்களுக்கு அறிவிக்கப்பட்டுள்ளது.

ஸ்டேட் வங்கியில் பணியாற்றிய கவிஞர் ம.நாராயணன் அவர்கள் பெரியாரும் மனிதநேயமும் என்ற பொருளியல் ஆய்வு செய்து முனைவர் பட்டம் பெற்றவர். இவ் வாய்வேடு நூலாகவும் வெளியிடப்பட்டுள்ளது. இவர் நூல்கள் பல இயற்றியுள்ளார்.

அருமை நண்பர், தோழர் வேலூர் ம.நாராயணன் அவர்களுக்கு புரட்சிக் கவிஞர் கலை இலக்கிய மன்றம் சார்பில் மனம் நிறைந்த வாழ்த்துகள்!

# புலவர் மா.நன்னன் நூற்றாண்டு விழா கருத்தரங்கம்



பெரும்புலவரும் பெரியார் பேருரையாளருமான மா.நன்னன் அவர்களின் நூற்றாண்டின் தொடக்க நாள் 30.07.2022. நூற்றாண்டை முன்னிட்டு 19.03.2023 அன்று சென்னையில் தமிழ் இணையப் பல்கலை அரங்கில் திராவிடர் கழகப் பரப்புரைச் செயலர் வழக்குரைஞர் அ.அருண்மொழி தலைமையில் நடந்த கருத்தரங்கத்திற்கு வந்திருந்தோரை முனைவர் ப.வெற்றிநிலவன் வரவேற்று உரையாற்றினார். மா.நன்னன் அவர்களின் மகள் வேண்மாள் தொடக்க உரையாற்றினார்.

வழக்குரைஞர் சே.மெ.மதிவதனி, முனைவர் கவிதா, பேராசிரியர் தமிழ் இயலன், பொறிஞர். சு.குமணராசன் ஆகியோரும் உரையாற்றினர். அண்மையில் த.நா.அரசின் பாவேந்தர் விருதுபெற்ற வாலாசா வல்லவன் சிறப்புரையாற்றினார். மா.நன்னன் அவர்களின் மகள் அவ்வை இணைப்புரையும், நன்றியுரையும் ஆற்றினார். நன்னன் குடியினர் விழாவைச் சிறப்பான முறையில் ஏற்பாடு செய்திருந்தனர்.

## பாவலரேறு பெருஞ்சித்திரனார் 90ஆம் ஆண்டு பிறந்த நாள் விழா




பாவலரேறு பெருஞ்சித்திரனார் அவர்களின் 90ஆம் ஆண்டு பிறந்த நாள் விழா மேடவாக்கம், பாவலரேறு தமிழ்க்களம் அரங்கில் 12.3.2023 ஞாயிற்றுக்கிழமை 5 மணிக்கு நடைபெற்றது. இறை. பொற்கொடி தலைமைத் தாங்கினார். மா.பூங்குன்றன் வரவேற்புரையாற்றினார். தோழர் பாவேந்தன் தொகுப்புரை ஆற்றினார். தமிழ் உணர்வாளர்கள் பலர் பாவலரேறுவின் சிறப்புகளை நினைவுகூர்ந்து உரையாற்றினர். பொழிலன் நன்றியுரையாற்றினார்.

## ஓவியர் சாமி. கங்காதரன் நினைவு நாள்



தோழர் வே.ஆனைமுத்து அவர்களிடம் பற்றுக் கொண்ட பெரியார் பெருந்தொண்டர் திருச்சி ஓவியர் சாமி கங்காதரன் அவர்கள் 01.12.2009 அன்று மறைவுற்றார். அவரது குடும்பத்தினர் ஒவ்வோர் ஆண்டும் அவர் நினைவு நாளில் சிந்தனையாளன் இதழுக்கு வளர்ச்சி நிதி அளிப்பர். 13ஆவது நினைவு நாளை ஒட்டி 01.12.2022 அன்று அவருடைய துணைவி க.சரோஜா அவர்கள் புதிய சிந்தனையாளன் வளர்ச்சி நிதிக்கு ரூ.500 வழங்கியுள்ளார்.

## பேராசிரியர் இரா.சோதிவாணனுக்கு பாவலர் கோ பட்டயம் வழங்கப்பட்டது



பன்னாட்டுத் தமிழுறவு மன்றமும் அன்னை சேது அறக்கட்டளையும் இணைந்து பெருங்கவிக்கோ வா.மு.சேதுராமன்-சேதுமதி நினைவாக சென்னையில் 12.11.1922 அன்று சிறந்த முறையில் தமிழ்ப்பணி ஆற்றிவரும் பேராசிரியர் இரா.சோதிவாணன் அவர்களுக்கு பொற்கிழியும் பாவலர் கோ என்ற பட்டயமும் அளிக்கப்பட்டது. மருதநாயகம் அவர்கள் தலைமையில் வா.மு.சே.கவியரசன் முன்னிலையில் திராவிடர் கழகத் தலைவர் கி.வீரமணி பட்டயத்தை வழங்கிச் சிறப்பித்தார். வா.மு.சே.ஆண்டவர் நிகழ்வை ஒருங்கிணைத்தார். இந்நிகழ்வின் மகிழ்வாக புதிய சிந்தனையாளன் வளர்ச்சி நிதியாக உரூ 2000 வழங்கினார். ஆசிரியர் குழுவின் சார்பில் மகிழ்ச்சியையும் வாழ்த்துக்களையும் தெரிவித்துக் கொள்கிறோம்.

## வள்ளுவர் வழியில் வள்ளலாரைப் போற்றுவோம்




வள்ளுவர் வழியில் வள்ளலாரைப் போற்றுவோம் என்ற தலைப்பிலான கருத்தரங்கம் 12.2.2023 அன்று மேடவாக்கம் தமிழ்க்களத்தில் பொழிலன் தலைமையில் நடைபெற்றது.

தோழர்கள் செவ்வேள், காஞ்சி அமுதன், பேராசிரியர் த. செயராமன், வாலாசா வல்லவன், பேரா. குழந்தைவேலன், வடலூர் சாமிதுரை, ஈரோடு கதிர்வேல், கலைவாணி, ஆனந்தம் அடிகளார் உள்ளிட்டோர் கலந்துகொண்டு சிறப்பித்த னர். வள்ளலாரைப் பற்றிய தொகுப்பு நூல் ஒன்றும் வெளி யிடப்பட்டது.

## தாம்பரம் சிந்தனைக்கூடம் நடத்திய தமிழ்நாடு அரசின் பாவேந்தர் விருது பெற்ற வாலாசா வல்லவன் அவர்களுக்குப் பாராட்டு விழா




சிந்தனைக் கூடம் அமைப்பின் சார்பில் தமிழ்நாடு அரசின் பாவேந்தர் விருது பெற்ற வாலாசா வல்லவன் அவர்களுக்கு பாராட்டுக் கூட்டம் 11.3.2023 அன்று மாலை 4 மணிக்கு மேற்கு தாம்பரம் இ.கா.ப. அரங்கில் துரை. மணிவண்ணன் தலைமையில் நடைபெற்றது.

தாம்பரம் மா.சுப்பிரமணி நோக்க உரையாற்றினார். முனைவர் பிரான்சிஸ் வரவேற்புரையாற்றினார். மா.தி.மு.க. மாவட்டச் செயலாளர் மா.வை.மகேந்திரன், யாக்கூப், ம.ம.கட்சி ஏ.தே.அருள்பிரகாசம், வி.சி.க. பா.முத்தையன் தி.க. ஆதி.மாறன், அழகப்பராஜ், டி.எம்.ஜி. மார்க்ஸ் ஆனந்த், சலீம்கான், ஜாகீர் உசேன், கு.கிருட்டிணமூர்த்தி, இளமாறன், இரா.இளங்கோ, இனியவன், அண்ணாத்துரை, க.பழனி, மறைமலை நகர் மா.சமத்துவமணி உள் ளிட்ட தோழர்கள் பாராட்டுரை உள்ளிட்ட தோழர்கள் பாராட்டுரை வழங்கினர். ம.தி.மு.க.வின் அரசியல் ஆய்வு மையச் செயலாளர் மு.செந்திலதிபன் அவர்களும் திராவிட இயக்கத் தமிழர் பேரவை பொதுச் செயலாளர் பேராசிரியர் சுப.வீரபாண்டியன் அவர்களும் சிறப்பு வாழ்த்துரை வழங்கினர். வாலாசா வல்லவன் ஏற்புரையாற்றினார். வழக்கு ரைஞர் கோ.மேனக்ஷா நன்றியுரையாற்றினார்.

## பெரியாரைப் பற்றி...

**- பாவேந்தர்**

தொண்டு செய்து பழுத்த பழம்
தூய தாடி மார்பில் விழும்
மண்டைச் சுரப்பை உலகு தொழும்
மனக்குகையில் சிறுத்தை எழும் (அவர்தாம்)

தமிழர் தவம் கொடுத்த நன்கொடை
தன்மானம் பாயும் தலைமேடை
நமக்குத் தாண்டி அந்த வாட்படை
நமைஅவரின் போருக்கு ஒப்படை (அவர்தாம்)

# பெரியார் பெருந்தொண்டர் சா.இராமமூர்த்தி மறைந்தார்



திருவாரூர் மாவட்டம் ஆண்டாங்கோவில் கிராமத்தில் 13.10.1953 அன்று பிறந்த சா.இராமமூர்த்தி அவர்கள் கல்லூரி படிக்கும் காலத்தில் தீவிர பெரியாரியலராக மாறி பல்வேறு போராட்டங்களில் கலந்து கொண்டு சிறைச் சென்றவர். மிசா சட்டத்தில் கைது செய்யப்பட்டு ஓராண்டு சிறையில் இருந்தவர். சென்னையில் இருந்தபோது அய்யா வே.ஆனைமுத்து அவர்களுடன் நெருங்கி பழகியவர். இறுதியில் சொந்த ஊருக்கு சென்ற அவர் உடல் நலமின்றி தம் 70ஆம் அகவையில் 02.03.2023 அன்று மறைவுற்றார். அன்னாரை இழந்து வாடும் அவருடைய துணைவி ஆனந்தி மற்றும் மகன்கள் இரா.சுமன், இரா.சுதாகர் மற்றும் உறவினர்களுக்கு மா.பெ.பொ.க. சார்பில் ஆழ்ந்த இரங்கலைத் தெரிவித்துக் கொள்கிறோம்.





ஆசிரியர் : **வே.ஆனைமுத்து**

மண்டல் ஆணையம் அமைக்கப்படவும் மண்டல் குழுப் பரிந்துரை அறிக்கை வெளியிடப்படவும், மண்டல் பரிந்துரைத்தபடி ஒன்றிய அரசுப் பணிகளில் பிற்படுத்தப்பட்ட வகுப்பு மக்களுக்கு 27% இடஒதுக்கீடு ஆணையிடப்படவும் இடைவிடாதுப் பணியாற்றிய மா.பெ.பொ.க. பொதுச் செயலாளர் தோழர் வே.ஆனைமுத்து அவர்கள் எழுதி 1990 இல் வெளியிட்ட நூலின் மறுபதிப்பு இப்போது வெளியிடப்பட்டுள்ளது.

**போராட்ட வரலாற்றைப் படிப்போம்!**
**இடஒதுக்கீட்டு உரிமைக்குப் போராட உந்துதல் பெறுவோம்.**

வெளியீடு : **மார்க்சியப் பெரியாரியப் பொதுவுடைமைக் கட்சி**

நூலின் பக்கங்கள் : 148 ★ விலை உரூ. 130/-

கிடைக்குமிடம்

**வாலாசா வல்லவன்**

2/12, சி.என்.கே.சந்து சேப்பாக்கம், சென்னை-5. பேசி : 8668109047


# அண்ணலின் அரும்புகழ் வாழ்க!



-தமிழேந்தி

அறிவின் இலக்கணம் அண்ணல் அம்பேத்கர்!
அஞ்சாமைப் புலிப்போத்து அவரன்றி வேறுயார்?
திறமைகள் பலவற்றின் மொத்தத் தொகுப்பு
தீண்டாமை மீதில் தீயாய்க் கொதிப்பு

இந்துச் சனாதனத்தின் தோலை உரித்தார்
ஏராளச் சாத்திரக் கேட்டை எரித்தார்
தொந்தி பெருத்த பூணூலைப் பழித்தார்
தொகையாய் வேதியப் புளுகுகள் ஒழித்தார்

காந்தியின் பிற்போக்குத் தனங்கள் சாடினார்
கள்ளப் பார்ப்பனர் இவர்க்கஞ்சி ஓடினார்
ஏந்தல் எமக்கு மட்டுமா? அன்னார்
எல்லோர்க்கு மான ஈடிலாத் தலைவர்

பார்ப்பனியம் இங்கு முதற்குறை என்றால்
பாழ்முத லாளியம் அடுத்தகேடு என்றார்
வேர்ப்புழு சாதியம் வேண்டா முதலாளியம்
வீழட்டும் அடியோடு என்றே முழங்கினார்.

ஆழ்ந்த ஞானம் அனைத்திலும் வெளிப்படை
அடித்தட்டு மக்கள்மேல் நீங்காப் பாசம்
சூழ்ந்த பகையைத் துணிந்தே எதிர்த்தார்
தோல்விகள் தம்மில் வெற்றிப்பூப் பறித்தார்

திண்ணம்! நமது திங்கள்வான் கதிரோன்
சேர்ந்த பொருள்தான் அண்ணல் அம்பேத்கர்
அண்ணல் அம்பேத்கர் அரும்புகழ் வாழ்க!
அடித்தட்டு மக்கள் அல்லல்கள் வீழ்க!

# எழுதுகோல் ஆடிய மாரிமலையாட்டம்

பேராசிரியர் **இரா. சோதிவாணன்**



தீ வீச்சின் தெறல் நடையில் மறம்பயிற்றும்
தீந்தமிழின் புகழ்ப் பரப்புக் கடலை வெல்லும்
பூவீச்சின் கமழ்மணத்தில் எதிர்பாராத
முத்த வீச்சின் தமிழ்க்காதல் உயிர்த்தேன் துள்ளும்.
மாவீச்சின் கனிச்சாறாம் 'இசையமிழ்தம்'
வலிவீச்சின் தொழிலாளர் உணர்வுத்தோட்டம்
ஈவீச்சுப் பிணிக்கூட்டம் ஆரியத்தின்
எதிர்வீச்சுக் கொலைவாள் எடுக்கத் தூண்டும்.

விழிநோக்கில் கூண்டுப்புலி திறந்தே பாயும்
விளிவீச்சில் கருங்குயிலும் தமிழ்த்தீக்கூவும்
மொழிநோக்கில் தமிழியக்கம் துமுக்கிப் பாய்ச்சும்.
முனைவீச்சில் தமிழச்சிவாள் மானம் காக்கும்.
பழிநோக்கில் 'குறிஞ்சித்திட்டு' ஆட்சியாளன்
மடியவிட்டுத் தமிழ்க்கொள்கை ஆட்சி பூக்கும்.
கழிவீட்டில் வாழ்ஊமை 'மண்ணாங்கட்டி'
கனிச்செயலைக் காட்டும் 'அமைதி' (நூல்) புதுமைச்சுட்டி.

பெரியாரின் தோளிலேறி வையகம் பார்த்தான்
பெருஞ்சூழ்ச்சிப் பார்ப்பனியம் சூழக் கண்டான்
வரிவேங்கைக் கடுஞ்சீற்றம் கொட்டித் தீர்த்தான்.
பலிப்பீடம் 'நரிகளுக்கே' திருப்பி வைத்தான்
எரியாலே மதக்குப்பைச் சாம்பல் பெய்தான்.
எரிவேள்விப் பொய்ப்புரட்டைப் புரட்டிப் போட்டான்.
கரியாரின் திராவிடர்ச் செந்தழல் வீறுரைத்தான்
கனிச்சாற்றில் கந்தகத்தில் தமிழ்வரைந்தான்.

"வெட்டினாலும் என்கொள்கைவேர் அறாது
வெருட்டினாலும் தமிழ்த்தொண்டு எனைவிடாது
நெட்டினாலும் சாதியின்தோள் ஏறமாட்டேன்.
நெருக்கினாலும் சிறையினாலும் பிறழமாட்டேன்
முற்றினாலும் ஈளைநோயில் சாவை வென்றேன்.
'முத்தமிழில் நான் பாவேந்தன்' என்றுரைத்தேன்.
பற்றினாலே 'கால் இலக்கம் பொற்கிழி' பெற்றேன்."
பாவேந்தர் வாழ்க்கைவானின் சில விண்மீன்கள்.

தோள்சீலைப் போராட்டம் கேரளத்துப் போராட்டம்
தொல்மக்கள் பெண்மானம் காக்கநின்ற போராட்டம்
வாள்ஏந்தி ஒருமறத்தித் தன்மார்பு அறுப்பாட்டம்
வரலாற்றுக் கரும்பக்கம் எரித்தெறிந்த நெருப்பாட்டம்
கீழ்ச்சாதிக்குக் கோயில் புறத்தெருவில் நடமாட்டம்
கிடைக்காத 'வைக்கத்தில்' பெரியாரின் மறவராட்டம்.
பாழ்ச்சாதி மனுநீதி முடைநாற்ற வெறியாட்டம்
பாவேந்தர் எழுதுகோல்தான் ஆடியது எரிமலையாட்டம்.

**புதிய சிந்தனையாளன் வளர்ச்சி நிதி**
**மார்ச்-ஏப்பிரல் - 2023**

| | | |
|---|---|---|
| து.செ.நிறைமொழி | காட்டுமன்னார்கோவில் | 1000/- |
| மா.முருகேசன் | தீத்தாண்டப்பட்டு | 1000/- |
| சாமி.அறவணன் | சென்னை | 1000/- |

ஆசிரியர் மற்றும் வெளிடுபவர் : **வாலாசா வல்லவன்**
எண்.2/12, சி.என்.கே.சந்து, சேப்பாக்கம், சென்னை - 600 005. கைப்பேசி : 8668109047
அச்சிட்டோர் : **பாவை பிரிண்டர்ஸ் பிரைவேட் லிமிடெட்,**
16, (142), ஜானி ஜான்கான் சாலை, இராயப்பேட்டை, சென்னை - 600 014. பேசி : 044-2848 2441

Editor & Published by **VALASA VALLAVAN,** No.2/12, C.N.K. Lane, Chepauk, Chennai - 600 006. Mobile : 8668109047
**Printed by Pavai Printers Pvt. Ltd.,**
16, (142), Jani Jankhan Road, Royapettah, Chennai - 600 014. Phone : 044-2848 2441